# மதிப்புக் கல்வி

**(மதிப்புக் கல்வி தமிழ் வழி மாணவர்களுக்கும், ஆங்கில வழி மாணவர்களுக்கும் பருவத்தேர்விற்கு தனித்தனியான வினாத்தாள் எடுக்க வேண்டும்)**

## சுய கற்றல் பாடம் ( Self Learning Subject )

**Co 1: மதிப்பை அறிமுகப்படுத்தி அதன் முக்கியத்துவத்தினை உணர்த்துதல்**

**Co 2: குடும்பம் மற்றும் சமூக மதிப்புகளின் பங்கு மற்றும் பயன்களைக் கற்பித்தல்**

**Co 3: வாழ்வில் கலாச்சார மற்றும் சமய மதிப்புகளின் தாக்கங்கள் பற்றிய அறிவை வழங்குதல்**

**Co 4: தொழில் சார்ந்த மதிப்புகளை வளர்க்க பயிற்சி அளித்தல்**

**Co 5: பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் சாராத நடவடிக்கைகள் மூலம் மதிப்புகளை வளர்ப்பதற்கான உத்திகளை அறிமுகம் செய்தல்**

**கூறு – 1 அறிமுகம்**

மதிப்பிற்கான விளக்கங்கள் – மதிப்புகளின் சிறப்பியல்புகள் – மதிப்புகளின் வகைகள் – மதிப்பிற்கான தோற்றுவாய்கள் – மனித மதிப்புகள் விளக்கம் – மனித மதிப்புகளின் வகைகள் – மதிப்புகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்கு

**கூறு – 2 குடும்பம் மற்றும் சமூக மதிப்புகள்**

குடும்ப மதிப்புகள் விளக்கம் – குடும்ப மதிப்புகளின் முக்கியத்துவம் – குடும்ப மதிப்புகளின் பங்கு – சமூக மதிப்புகள் விளக்கம் – சமூக மதிப்புகளின் கொள்கைகள் மற்றும் பயன்கள் – சமூக மதிப்புகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்

**கூறு – 3 பண்பாடு மற்றும் சமய மதிப்புகள்**

எது பண்பாடு – எது சமயம் – பண்பாடு மற்றும் சமய மதிப்புகளுக்கான விளக்கங்கள் – பண்பாடு மற்றும் சமய மதிப்புகளுக்கான முக்கியத்துவங்கள் – பண்பாட்டு, சமய மதிப்புகளின் அடிப்படைக் கூறுகள் – பண்பாடு மற்றும் சமயங்கள் செல்வாக்கு பெற்றிருப்பதற்கான காரணிகள் - வாழ்வில் பண்பாடு, சமய மதிப்பிற்கான தாக்கங்கள்

**கூறு – 4 தொழில் சார்ந்த மதிப்புகள்**

அறிமுகம் – தொழில் சார்ந்த மதிப்புகளின் தேவைகள் – வாழ்க்கையை உயர்த்த உதவும் முக்கியத் தொழில் சார்ந்த மதிப்புகள் – தொழில் சார்ந்த மதிப்புகளை உயர்த்திக்கொள்வதற்கான வழிமுறைகள் – தொழில் சார்ந்த மதிப்புகளின் விளைவுகள்

**கூறு – 5 மதிப்புகளை தொடர்ந்து வலியுறுத்தும் யுக்திகள்**

பாடத்திட்டங்கள் வழி மதிப்புகளை தொடர்ந்து வலியுறுத்துதல் - பாடத்திட்டம் சாராத இதர துறைகள் வாயிலாக வலியுறுத்துதல் – இலக்கியங்கள் வழி வலியுறுத்துதல் – மதிப்புணர்ச்சியை கதைகள் வாயிலாக வளர்த்தல் – நாடகங்கள் வழி, திரைப்படத் துணுக்குகள் வழி, விளையாட்டுகள் வாயிலாக மதிப்புகளை வளர்த்தல்

# மதிப்புக் கல்வி

## கூறு 1 -அறிமுகம்



நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்
**– டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்**


கல்வி மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாகும்

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே” என்கிறது புறநானூறு).

“ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து” - என்கிறதுதிருக்குறள்

“கற்கை நன்றே கற்கை நன்றே
“பிச்சை புகினும் கற்கை நன்றே” என்கிறது வெற்றிவேற்கை.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” என்கிறது உலக நீதி



“பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்த வேண்டும்”என்கிறார் பாரதியார்.

இவையெல்லாம் கல்வி பற்றிய சிறப்புகள். இக்கல்வியும் எவ்வாறு இருக்க வேண்டும்? காந்தியடிகள் கூறுகிறார். நமது பழங்கால பள்ளிக்கூட முறையே போதுமானது. அதில் ஒழுக்கமே ஆரம்பக் கல்வி. மேலும் “குழந்தையிடமும், மனிதனிடமும் அவர்களது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறப்பு மிக்க பண்புகளை வெளிக்கொணர்தல் கல்வியாகும்” என்கிறார். “மனிதனிடம் ஏற்கனவே மறைந்திருக்கும் முழுமை பெற்ற நிறைவை மலரச் செயவதே கல்வியாகும்” என்கிறார் சுவாமி விவேகானந்தர். இக்கூற்றுகளிலிருந்து நாம் அறிந்து கொள்வது, கற்றல்

மனிதனுக்கு அவசியமான ஒன்றாகும். அக்கல்வியும் மனிதனை நடத்தை மாற்றம் செய்வதாக அமைதல் அவசியம். கல்வியின் முதலும் நிறைவுமான நோக்கம் மனிதனை நல்ல பண்புகள் உடையவனாக மாற்றி சமுதாய வாழ்விற்கு ஏற்றவனாகச் செய்வது என அறிந்து கொள்ளலாம். இந்நோக்கத்தை நிறைவுறச் செய்வது மதிப்புக் கல்வியாகும். ஒழுக்கத்தைத் தராத நெறிமுறைகளைக் கற்றுத் தராத கல்வி உப்பில்லாத சாப்பாடு; கரையில்லாத ஆறு போன்றதாகும்.

**மதிப்பு - விளக்கங்கள்**



மதிப்பின் அகராதிப் பொருள்களாவன– பெறுமதி, முக்கியத்துவம், பெறுமானம், வெகுமானம். மதிப்பு என்ற சொல் இடங்களுக்கு ஏற்றபடி பலவேறு பொருள்களைப் பெறுகின்றன. பணத்துடன் தொடர்புபடுத்தப்படும் பொழுது அதன் பொருள் வேறு. வாழ்க்கையுடன் இணைக்கும் பொழுது அதன் பொருள் விரிவடைகிறது. மதிப்பு என்பதற்கு ஆங்கில மொழியாக்கம் ‘value’ என்பதாகும். இச்சொல் ‘valare’என்னும் லத்தீன் மொழிச் சொல்லில்லிருந்து உருவானதாகும். **வலரே** என்ற லத்தீன் மொழிச் சொல்லிற்கு மதிப்பு, தகைமை என்ற பல பொருள்கள் உண்டு. மதிப்பு என்ற சொல் துறைக்கேற்ப பல்வேறு பொருள்களில் ஆளப்படுகிறது. தனி மனித வாழ்வில் சுய மதிப்பு மிக முக்கியமானது. ‘மதியாதார் தலை வாசல் மிதியாதே’ என்பது முதுமொழி. பொருளாதார அடிப்படையில் பார்த்தோமானால் மதிப்பு என்பது விலையைக் குறிக்கிறது. சமூகவியல் நோக்கில் மதிப்பு என்ற சொல்லை அணுகினால் மதிப்பு சமூகக் கூறுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. தத்துவத்துறையில் அறவியலின் ஒரு கூறாக விளங்குகிறது.

மதிப்பைப் பல இடங்களில் வேறுவேறு பொருள்களில் கையாளுகிறோம். மதிப்பெண், மதிப்புரை, நன்மதிப்பு, அவமதிப்பு, தன்மதிப்பு, சுயமதிப்பு, கண்மதிப்பு, சந்தை மதிப்பு, மாற்று மதிப்பு, இட மதிப்பு, எண்மதிப்பு, குறைமதிப்பு, குத்துமதிப்பு இன்ன பிற. இந்த ஒவ்வொரு சொல்லும் வேறு வேறு இடங்களில் வேறு வேறு பொருள்களைத் தருகின்றன. மதிப்பு குறித்த பலவேறு

கருத்தாக்கங்கள் அறிஞர்களால் தரப்பட்டுள்ள விளக்கங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## அறிஞர்களின் கருத்துக்கள்

- பொருள்களைப்பற்றிய மனிதனின் மனப்பான்மையே மதிப்புகள்
  - பி.எஸ்.சானியல்.
- அன்றாட வாழ்வில் ஒழுகலாற்றையும் தீர்மானங்களையும் தீர்மானிக்கின்ற விருப்பங்கள் - எப். ஜெ . வுட்ஸ்
- விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் மதிப்பாகும் - ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ்
- ஒரு மனிதர் அல்லது சமூகம் ஒரு குறிப்பிட்ட சூழலில் விரும்பித் தேர்வு செய்கிற பொருள்கள் அல்லது செயல்கள் - ஜே.சி.கோல்மென்
- ஆற்றல் மிக்க விருப்பத் தேர்வுகள் மதிப்புகளாகின்றன - ஆல்வின் எல். பெர்ட்ரன்ட்
- ஒரு சமூகத்தால் முறையானவை அல்லது நல்லவை என்று கருதப்படும் கருத்துக்களும், ஒழுகலாறும் அதன் மதிப்புகளாகின்றன – ஜேக். ஆர். ப்ராங்கெல்
- எது நல்லது, எது முக்கியமானது என்று தானறிநிலையிலும் தானறியா நிலையிலும் எழும் கற்பிதங்கள் - ரேமண்ட் மற்றும் கிம்பாலி யங்
- எந்த நம்பிக்கையின் அடிப்படையில் மனிதன் விரும்பித் தேர்ந்து செயற்படுகிறானோ அந்த நம்பிக்கையே மதிப்பாகும் - கார்டன் ஆல்பர்ட்
- ஒரு குழுவின் மதிப்புகள் அதன் மரபு சார்ந்த அறிவுத்திரளின் ஒரு பகுதியாகும் – கர்ட் பெர் மற்றும் நிக்கோலஸ்
- மதிப்புகள் மனிதனது ஒழுகலாற்றுக்கு வழிகாட்டியாக அமைவன. அவை காலத்திலும், இடத்திலும் இடம் பெறும் பொருள்கள் இல்லை மதிப்பீட்டினால் நிலை பெறுபவை. அதனால் அவை தற்சார்புகளையும், புறச்சார்புகளையும் பெற்றுள்ளன – பால் ரூபிக்
- மதிப்புகள் பொருள்களின் தகுதி பற்றிய கருத்துக்களாகவும் உணர்வுமயமான ஈடுபாடாகவும் அமைகின்றன. அறிவு நிலையிலும், உணர்வு நிலையிலும் அவை செயல் படுகின்றன. – ழேக் ஆர்.ப்ராங்கெல்
- தகுதி, தகவு, மதிப்பு ஆகியன ஒரு பொருள் குறித்த சொற்களாகும். ஒரு பொருள், ஒரு நிகழ்ச்சி, ஒரு செயல் பற்றிய சமூகத்தின் மொத்த

எண்ணமே மதிப்பாகும். அதன் ஒவ்வோர் உறுப்பினனும் இதற்குரிய பங்களிப்பைச் செய்கிறான்"– கு.வெ. பாலசுப்பிரமணியன்

- மதிப்பு என்பது மனப்பான்மை, நம்பிக்கை, கருத்து, கற்பிதம், ஆர்வ உணர்வு, மரபு, ஒழுகலாறுகள், தீர்மானங்கள், சரி, தவறு, நல்லது, கெட்டது, முறையானது, முக்கியமானது என்று எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. இத்தீர்மானம் விருப்பத்தின் அடிப்படையில் நடக்கிறது – டாக்டர் சேதுமணி மணியன்
- எந்த ஒன்றையும் விருப்பமுடையதாகவும், பயனுடையதாகவும் செய்வதனால் கிடைக்கும் நிலைமை மதிப்பாகிறது. உள்ளுணர்வினால் நன்மையுடையது என்று உணர்ந்த ஒன்றை மற்றவர்களும் ஏற்கும் போது அது மதிப்புடையதாகிறது. அதுவே காலத்தை வென்று வாழும் போது நிலைபேறுடைய மதிப்பாகத் திகழ்கிறது - க. புவனேஸ்வரி

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மதிப்புகள் பெரும்பான்மையான இடத்தைப் பெறுகின்றன. மனிதன் அல்லது சமூகம் விரும்பி ஏற்பவையாக மதிப்புகள் இருக்கின்றன. மதிப்பு ஒரு மனப்பான்மையாக இருக்கலாம். நம்பிக்கையாக இருக்கலாம். மரபு வழி வருவதாக இருக்கலாம். ஆர்வத்தால் தீர்மானிப்பதாக இருக்கலாம். மதிப்புகள் சரி, சரியல்ல என்பதைத் தீர்மானிக்கின்றன. நம்முடைய வாழ்க்கையில் மதிப்பு கூட்டும் விஷயங்கள் பலவகையானவை. சுதந்திரம், பாதுகப்பு, அன்பு, நேர்மை, மரியாதை, கல்வி, நம்பிக்கை, பொறுமை, மகிழ்ச்சி போன்றவை நம் வாழ்வில் மதிப்பைக் கூட்டுபவையாகும். ஒருவருக்கு சுதந்திரம் மதிப்பானதாக இருக்கலாம். மற்றொருவருக்கு அன்பு; பிறருக்கு நேர்மை ஆகையால் இதுதான் மதிப்பு என்று கூற இயலாது. மதிப்பு நிலையானதல்ல. ஒருவருக்கொருவர் மாறக் கூடியது. நம் வாழ்க்கைக் குறிக்கோளை நோக்கிச் செலுத்தும் எந்தவொரு விஷயமும் மதிப்பாகும்.

## மதிப்புகளின் சிறப்பியல்புகள்

- மதிப்புகள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை.எனவே மனிதர்களின் உணர்வுகளுடன் கலந்தவை.
- மதிப்புகள் மனிதனைத் தூண்டும் காரணிகளாக உள்ளன.
- மனிதர்கள் தன்னுடைய இலட்சியத்தை அடையத் துணை நிற்கின்றன.
- மானுட விழுமியங்களை மேம்படுத்துவதில் துணை நிற்கின்றன.

- மதிப்புகள் பின்னர் செயல்களாக மாற்றம் பெறுகின்றன. மதிப்புகளின் இயல்புகள் அதாவது விதிமுறைகள், மனப்பான்மைகள் போன்றவை சிறப்பான செயல்களுக்கு வடிவம் அளிக்கின்றன.
- எந்தெந்த செயல்களில், நிகழ்வுகளில் ஈடுபட வேண்டும் என்பதனைத் தீர்மானிக்க உதவும் ஆற்றல் மிக்க சக்தியாக விளங்குகிறது.
- மனிதனின் வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் மனிதர்களை எல்லாச் சூழ்நிலைகளிலும் வழி நடத்துகின்றன.
- மனித மதிப்புகள் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு விளங்குவதால் தனிமனிதர்களை ஒழுக்க நெறிமுறைக்குட்படுத்துகிறது.
- மதிப்புகளில் உடல்நலம், அன்பு போன்ற பொதுவானவைகளும் உண்டு. பெற்றோரை மதித்தல், கற்பு நெறியை மதித்தல் போன்று குறிப்பிட்டவைகளும் உண்டு.
- மதிப்புகள் எப்பொழுதும் நடைமுறைச் சாத்தியத்திற்கு உட்பட்டவை.
- மதிப்பீடுகள் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளக் கிடைத்த உத்திகள் மட்டுமல்ல, சிக்கலான சூழல்களையும் புரிந்து கொள்ள உதவுபவை.
- மனிதர்கள், சூழல்கள் இவற்றைத் தாண்டியும் புரிந்து கொள்ளக் கூடியவை.
- மானுட மதிப்புகள், பண்பாடு, மரபு உள் மற்றும் வெளிக் காரணிகளால் தாக்கம் பெறுபவை.
- மதிப்புகள் வலுவான எண்ணங்கள், நடத்தை நெறிமுறைகள், நம்பிக்கைகளை உள்ளடக்கியவை.
- மதிப்புகள் நாட்டுக்கு நாடு, மதத்திற்கு மதம், மொழிக்கு மொழி, மனிதருக்கு மனிதர் மாறக் கூடியவை.
- மனிதர்களை ஒருங்கிணைத்தல், வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பெறுதல் போன்ற அடிப்படைக் குணங்களை நிர்ணயிப்பதில் முக்கியமான பங்கு மதிப்புகளுக்கு உண்டு.
- சமூக வாழ்வில் ஒழுக்க விதிகளை நிர்ணயிப்பதில் அன்றாட வாழ்வில் நடத்தை முறைகளை உருவாக்குவதில் மதிப்புகள் பெரும் பங்கு வகிக் கின்றன .

## மதிப்புகளின் வகைகள்

பல்வேறு அறிஞர்களால் மதிப்புகள் பகுத்தாயப்பட்டுள்ளன.

சமய, அறவியல் கலைக்களஞ்சியம் வகைப்படுத்தும் மதிப்புகள் பின்வருமாறு

- பொருளியல் மதிப்புகள் ( Economic values )
- அறவியல் மதிப்புகள் (Ethical values )
- அழகியல் மதிப்புகள் (Aesthetic values)
- மகிழ்வியல் மதிப்புகள் (Pleasure values )
- சமய மதிப்புகள் (Religious values )
- உயிரியல் அல்லது உயிர் வாழ்தல் மதிப்புகள் (Biological or survival values )
- அறிவுசார் மதிப்புகள் (cognitive values)

பிரிட்டானியா கலைக்களஞ்சியம் மதிப்புகளை மூன்று வகையாகப் பிரிக்கிறது.

1. இன்புறு மதிப்புகள் (Values of happiness)
2. உண்மை அல்லது ஊகித்துணரும் மதிப்புகள் (Truth or understanding values)
3. அற மதிப்புகள் (values of virtues)

உளவியல் அறிஞர் ராக்கேச் பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் மதிப்புகளை இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கியுள்ளார்

1. முனைய மதிப்பு (Terminal value)

   மனிதன் அடைய விரும்புகின்ற இலக்கின் பாற்படும் இம்மதிப்பு

2. கருவி மதிப்பு (Instrumental value).

அடைய விரும்பும் இலக்குகளை அடையச் செய்யும் கருவிகளான மதிப்பு இது முனைய மதிப்புகளை மனிதர்கள் மிகவும் விரும்புகின்றனர். கருவி மதிப்புகள் மனிதனின் குறிக்கோளை அடையச் செய்யும் கருவிகளை விளக்குகின்றன.

இவ்வாறு பல வகைகளாகச் சொல்லப்படும் மதிப்புகளை கீழ்க்குறிப்பிடப்படும் பத்து வகைகளில் அடக்கலாம்

## மானுட மதிப்பு




இது ஒருமனிதன் மனிதனாகத் திகழ வேண்டுமெனில் அவனுக்குச் சில மதிப்புகள் இன்றியமையாதனவாக ஆகின்றன. எது நன்மை, எது தீமை என்று பகுத்தாராயும் திறன், அறநெறியின் வழி நடத்தல், பிறருடன்

இணங்கியிருத்தல் போன்றவையாகும். மனித மதிப்புகள், கொள்கைகள், கருத்தாக்கங்கள்மனிதரின் அன்றாட வாழ்க்கையில் மிகவும் பயன் தரக் கூடியவை. இம்மானுட மதிப்புகளிலிருந்து பணி மதிப்புகள் உருவாக்கப் படுகின்றன. மானுட மதிப்புகளின் அடிப்படையில் சட்டங்கள், நிர்வாகவியல் கொள்கைகள் வகுக்கப் படுகின்றன. மானுட மதிப்புகளைப் பின்பற்றுவதில் தலையாயவர்கள் மனிதர்களில் மகத்தானவர்களாகிறார்கள். சான்றாக காந்தியடிகள், அப்துல் கலாம் போன்றோரை எடுத்துக் கொள்ளலாம்.

## குடும்ப மதிப்பு

இம்மதிப்பு ஒரு குடும்பத்தைப் பொறுத்து மாறுபாடடைகிறது.இதன் அடிப்படை நம்பிக்கைகள் பெற்றோரைப் பொறுத்து அமைகின்றன.ஏனெனில் பெற்றோர்கள்தாம் சிறு வயதிலிருந்தே மதிப்பு குறித்த கருத்தாக்கங்களை ஊட்டிக் கொண்டே இருக்கின்றனர். குடும்ப மதிப்புகளை அடிப்டையாகக் கொண்டே பிற மதிப்புகள் அமைகின்றன அல்லது அமையாமல் இருக்கின்றன.

## சமூக மதிப்பு

இம் மதிப்பு சமுதாயத்தில் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற சமுதாய உணர்வின் அடிப்படையில் தகவமைக்கப்படுகிறது. இம்மதிப்பு சமுதாயத்தில் மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற சமுதாய உணர்வின் அடிப்படையில் தகவமைக்கப்படுகிறது. “சமுதாயம் முழுமைக்கோ, அதன் குறிப்பிட்ட ஒரு பிரிவு அல்லது வர்க்கத்திற்கோ, பொதுவாக மனித நடத்தைகளினுடைய நியதிகள் அல்லது தகவுகளின் (rules andstandards) தொகுதியே சமுதாய மதிப்புகள்” என்று கூறுகிறார் தி.சு.நடராசன்.

இம் மதிப்புகள் குறிப்பிட்ட சமுதாயத்தினரின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் உருவாகின்றன. மொழிக்கு மொழி, சமயத்துக்குச் சமயம், இனத்துக்கு இனம் இவை மாறக் கூடும். ‘ஒருவனுக்கு ஒருத்தி, கற்பு’என்ற சமூக மதிப்புகள் இந்தியாவில் மிக உயர்ந்தவையாக வலுவானவையாக பெரும்பான்மையோரால் பின்பற்றத்தக்கதாக உள்ளன. பிற நாடுகளில் இம்மதிப்புகள் அர்த்தமற்றவையாகிவிடும். நல்ல சமுதாய மதிப்புகளைப் பின்பற்றுபவன் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் அமர்கிறான். பிறரால் விரும்பத்தகாத கெட்ட மதிப்புகளைப் பின்பற்றுபவனை சமூகம் அவமதிக்கும்.

**வணிக மதிப்பு**




வணிக மதிப்பு என்பது வணிகர்களின் அறநெறிகள் தொடர்பானதாகும். அனைத்து வணிகர்களும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பானதாகும். சக மனிதர்களுக்கு தீங்கற்ற சரியான பொருள்களைத் தரக் கூடியதாகும். வாடிக்கையாளர்களின் திருப்தியை அடிப்டையாகக் கொண்டதாகும்.

"நடுவு நின்ற நல் நெஞ்சினோர்,
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகை கெடாது, கொடுப்பதூங்
குறை கொடாது (பட்டினப்பாலை 205-210 ) என்ற இவ்வரிகள் சங்ககாலத்து வணிக மதிப்பினை விளக்கி நிற்கின்றன. மேலும் திருக்குறளில்

" வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின் ( 120 )

வரும் இவ்வரிகள் வணிகர்கள் எப்படிப்பட்ட வணிக மதிப்பினைப் பின்பற்ற வேண்டும் என்றுரைக்கிறது.

**பண்பாட்டு மதிப்பு**

ஒரு நாடு, இனம் மொழியைச் சார்ந்த மக்கள் பின்பற்றுகின்ற பழக்க வழக்கங்கள் பண்பாடு ஆகும். பண்பாட்டு மதிப்பு என்பது இக்குழுவினரால் பின்பற்றக் கூடிய மதிப்புக் கூறுகளாகும். பக்தவச்சலபாரதி "ஒரு பண்பாட்டைச் சார்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும் நடத்தை முறைகளுக்கும் (behaviour pattern) எவையெவை அவசியம் என்று கருதப் படுகின்றனவோ, அவைதாம் இப்பண்பாட்டின்விழுமியங்களாம்" என்கிறார். பண்பாட்டின் அடிப்டையில் இம்மதிப்புகள் தீர்மானிக்கப்படும். நம் சமுதாயத்தில் இந்த

பண்பாட்டு மதிப்புகளுக்கு முக்கியமான இடம் உண்டு. இப்பண்பாட்டு மதிப்புகள் அந்தந்த குழுவினரின் தனிப்பட்ட அடையாளங்களாகும். மானுட மதிப்புகளிலிருந்து பண்பாட்டு மதிப்புகள் வேறானவை.மானுட மதிப்புகள் அந்தந்த தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தீர்மானிக்கின்றன. ஆனால் பண்பாட்டு மதிப்புகள் தனிமனிதரைச் சார்ந்திராது ஒரு குழுவிற்கும், சமுதாயத்திற்கும் பொருந்தக் கூடியதாக இருக்கும். இக்குழுவில் இணைந்திருக்கும் மக்களை நல்வழிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**சான்று** : இந்திய நாட்டில் மிக உயர்ந்த பண்பாட்டு மதிப்புக் கூறுகளாக கூட்டுக்குடும்பங்கள், வயதான காலத்தில் பெற்றோரை அரவணைத்துச் செல்லுதல் ஆகியன கருதப்படுகிறது.

## பொருள் மதிப்பு

பொருள் மதிப்புகள் மனிதர்கள் இவ்வுலகில் வாழ்வதற்குத் தேவையான பொருள் ஈட்டுவது தொடர்பானவையாகும். உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை இவ்வுலகத்திலிருந்து பெறுவதாகும்.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"( 751 )

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (247) என

திருக்குறள்கள் பொருளின் மதிப்பினை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. சிறு குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே பொருளின் மதிப்பினைக் கற்றுத் தருதல் அவசியம். மேலும், எதற்குச் செலவழிக்க வேண்டும் என்றும்,எப்படிச் சேமித்து வைக்க வேண்டும் என்றும் கற்றுத் தர வேண்டும்.

## பணி மதிப்பு

பணியில் உள்ளோர் பின்பற்றக் கூடிய அறங்கள், நெறிமுறைகளைப் பணிமதிப்பு எனலாம். ஒரு மனிதன் தான் எந்தத் துறையில் முன்னேற வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அத்துறையில் நுழைந்தபின்னர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை இவை குறிக்கின்றன.

சான்றுகளாக - நேரத்திற்கு அலுவலகம் செல்லுதல், தான் வேலை செய்யும் நிறுவனத்திற்கு உண்மையாயிருத்தல், பணியின் தரத்தை மேம்படுத்துதல், தம் செயல்களால் பணிச் சூழலுக்குப் பாதிப்பு நேராதிருத்தல் போன்றவை.

**தேச மதிப்பு**

எவ்விதமான மதிப்புகள் தேசத்தின் நலனைத் தீர்மானிக்கின்றனவோ, பாதுகாக்கின்றனவோ அவையே தேச மதிப்புகள் ஆகும். சான்றாக தேசப்பற்றினைக் கூறலாம். ஒரு மனிதன் தன் நாட்டின் மீது கொண்ட நம்பிக்கை தேசமதிப்பின் பாற்படும். நாம் கல்வி கற்கும் காலங்களில் முறையாக தேசப்பற்று குறித்தும், தேசிய ஒருமைப்பாடு குறித்தும் கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

"பெற்றத்தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்ற வரிகளின் மூலம் பாரதியின் தேசப்பற்றினை அறிந்து கொள்ள முடிகிறது. இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் தேசப்பற்றுடையவர்களாயிருத்தல் அவசியம். நம்முடைய இந்தியச் சட்டத்தின் படி நீதி, சுதந்திரம், சமநீதி அமைதி, அனைவருக்குமான இயற்கைச் செல்வங்கள்ஆகியவை இந்திய தேசத்தின் தேச மதிப்புகளாகும்.

தேசத் தலைமையில் இருக்கும் அரசியல் தலைவர்களால் தரப்படும் அதிகாரப் பங்கீடும், தேசத்தை நிர்வகிக்கும் ஆற்றலும் தேச மதிப்புகளாகும். தேச ஒற்றுமையும் தேச மதிப்புகளுள் ஒன்றாகும். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் மக்களும் தேச மதிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

**நல்நெறி மதிப்புகள்** (moral values)

எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிகக் கூடிய நல்ல நெறிகள் ஒருங்கிணைந்த ஆற்றலை நல்நெறி மதிப்புகள் எனலாம். ஒரு தனிமனிதனுடைய குணத்தையும், நடத்தையையும் தீர்மானிப்பதில் நல்நெறி மதிப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒருமைப்பாடு, உறுதிப்பாடு, நம்பிக்கை, உண்மைத் தன்மை, நேர்மை, பிறருக்கு உதவுதல் போன்ற நல்நெறி மதிப்புகள் ஒரு மனிதனுக்கு பிறப்பிலிருந்தே மரபு வழியாகப் புகட்டப்படுகின்றன. இம் மதிப்புகள் எது சரி, எது தவறு அல்லது எதுநன்மை,

எது தீமை என்பதைப் பகுத்தாய்ந்து கூற வல்லவை. சமுதாயத்தில் புகட்டப்படும் சில நல்நெறி மதிப்புகளை தமிழ் இலக்கியங்கள் வழி காணலாம்.

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் ! அதுதான்
எல்லோரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியும் அதுவே” புறநானூறு

“ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை” திருக்குறள்

“யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே” திருமந்திரம்

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும்,
இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம்” பாரதியார்

“பசி என்று வந்தவர்க்குப் புசி என்று ஒரு பிடி
கொடுத்துப் பாரப்பா” பாரதிதாசன்

“உன்னுடைய எண்ணங்ளை நேர்மறையாக வைத்துக் கொள். ஏனென்றால் அவை உன் வார்த்தைகளாக மாறும். உன்னுடைய வார்த்தைகளை நேர்மறையாக வைத்துக்கொள். ஏனைனில், அவை உன் நடத்தையாக மாறும். உன்னுடைய நடத்தைகளை நேர்மறையாக வைத்துக் கொள்.ஏனெனில், அவை உன் பழக்கங்களாக மாறும்.உன் பழக்கங்களை நேர்மறையாக வைத்துக் கொள். ஏனெனில், அவை உன் தலையெழுத்துக்களாக மாறும்” மகாத்மா

இவை போன்ற எண்ணற்ற நல்ல நெறிகளை நாம் பட்டியலிட்டுக் காட்ட இயலும். இவை அனைத்தும் நல்நெறி மதிப்புகளின் பல்வேறு கூறுகளாகும்.

## ஆன்மிக மதிப்பு

“ அல்லா என்பர் சில பேர்கள்
அரன் அரி என்பார்கள் சில பேர்கள்
வல்லான் அவன் பரமண்மடலத்தை
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்னும் சில பேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பல பேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே

- நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை




எல்லா இடங்களிலும் இருக்கும் ஒரு பொருளைப் பற்றிப் பேசுவது ஆன்மிகம். இவை பற்றிய நம்பிக்கைகளை ஆன்மிக மதிப்புகள் என்கிறோம். பொருள் மதிப்பிற்கு முற்றிலும் மாறானது ஆன்மிக மதிப்பாகும். இவ்வுலகில் உள்ள பொருள்களின் பயன்பாட்டினைத் துறந்து, இயற்கைப் பொருளை, இறையை அடைய விரும்பி, அது குறித்த சிந்தனைகளை வளர்த்துக் கொள்வது ஆன்மிக மதிப்பாகும்.

“ஆன்மிக அறிவென்பது யாதெனில், அகங்காரம், வெளிவேஷம், பிற உயிர்களைத் துன்புறுத்தல் ஆகியவற்றினிருந்து விடுபட்டு பொறுமை, நேர்மை, வாய்மை,தூய்மை, மனவலிமை, புலனடக்கம் ஆகியவற்றைப் பழக்கிக் கொள்வதே”என்று பகவத்கீதை கூறுகிறது.

பண்பாட்டுஅடிப்படையில் மனிதனுக்குள் போதிக்கப்பட்ட நல்லொழுக்கங்கள், நல்நடத்தைகள் ஆன்மிக மதிப்பினைக் காண உதவுகின்றன.பொருள் பற்றிலிருந்து விடுபட்டு இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்துதல் இதன் முக்கியக் கூறாகும். ஒத்திசைவு இம்மதிப்புகளுள் ஒன்றாகும் .

“வாடிய பயிரைக் கணட போதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரிடமும்

“காக்கை குருவி எங்கள் ஜாதி

நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்"- என்ற பாரதியிடமும்

இந்த ஒத்திசைவு இருந்ததை நாம் மறுக்க இயலாது. உண்மை பேசுதல் ஆன்மிக மதிப்பின் முக்கியக் கூறாகும்.அகங்காரம், ஆசை, பற்றுகளை விட்டுவிட்டு உண்மை, நேர்மை,கருணை, அன்பு போன்ற ஆன்மிக மதிப்புகளைப் பின்பற்றினால் நம் ஆன்மா உயரிய நிலையை அடையும். பிற நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இந்தியாவின் ஆன்மிக மதிப்புகள் மிக உயர்வானவை.

மேலே கூறப்பட்ட பத்து மதிப்புகளும் மனிதனுடைய பிறப்பிலிருந்து ஆரம்பித்து இறப்புவரை பின்பற்ற வேண்டிய மதிப்புக் கூறுகளுள் ஒரு சிலவாகும்.இவை போன்று பல மதிப்புக் கூறுகள் மதிப்புக் கல்வியில் அடங்கியுள்ளன.

## மதிப்பிற்கான தோற்றுவாய்கள்

மதிப்புகள் பல்வேறு வகையான தோற்றுவாய்களிலிருந்து கிடைக்கின்றன. ஒவ்வொரு தோற்றுவாய்களிலிருந்து ஒவ்வொரு விதமான வேறுபட்ட மதிப்புகளைப் பெறமுடிகிறது.

## குடும்பம்

ஒரு மனிதனுக்கு குடும்பம்தான் முதல் தோற்றுவாய் எனலாம். ஏனெனில் மனிதன் குழந்தையாக இருக்கும் பொழுது சுய மதிப்பு, நல் மதிப்பு, அவமதிப்பு குறித்து அறிந்து கொள்கிறான். நல்லது எது, கெட்டது எது, செய்ய வேண்டியது என்ன, செய்யக் கூடாதது என்ன என்பது குறித்து அறிந்து கொள்ள குடும்பம் நிலைக்களாக அமைகிறது.

## நண்பர்கள்

மனிதனின் வாழ்வில் நட்பு இன்றியமையாத இடம் பெறுகின்றது. ஒரு குறிப்பிட்ட வயது வரை மனிதர்களுக்கு நண்பர்கள், நண்பர்களின் விருப்பங்கள் முக்கியமானவையாக உள்ளன. அக்கால கட்டத்தில் மனிதன் சுயமதிப்பு குறித்த பல்வேறு கருத்தாக்கங்களைப் பெறுகிறான்

## சமூகம்

மனிதன் ஒரு சமூக விலங்கு. மனிதனைச் சமூகத்திடமிருந்து பிரிக்க இயலாது. மனிதன் தான் சார்ந்த அல்லது சாராத சமூகத்தினரிடமிருந்து பல்வேறு மதிப்பீடுகளைப் பெறுகிறான்.நண்பர்களைப் போல ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமல்லாது தான் வாழும் காலம் வரைக்கும் பல்வேறு மதிப்பீடுகளைப் பெறுகிறான்.

**ஊடகங்கள்**

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களின் வாழ்க்கையைப் பெரும் பங்கு ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவை பத்திரிக்கை, திரைப்படம், இணையம் போன்ற ஊடகங்களாகும். இவ்வூடகங்கள் மனிதனின் மதிப்புகளை மாற்றி அமைக்கின்றன அல்லது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

**உறவினர்கள்**

உறவினர்கள் சூழ ஒரு மனிதன் இருக்கும் பொழுது அவனுடைய மதிப்பு அவனுக்கும் பிறருக்கும் தெரிய வருகிறது.

"மதியாதார் முற்றம் மதித்தொரு கால் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்" ஔவையார்

மேலே குறிப்பிட்ட பாடலில் முதல் மூன்று சுற்றம் குறித்த மதிப்பீட்டினை விளக்கி நிற்கின்றன.

**நிறுவனங்கள்**

மதிப்பெண்களின் அடிப்படையில் கிடைக்கும் வேலையானது பின்னர் குறிப்பிட்ட நபரின் நெறிமுறையின் அடிப்படையில் கூடுதல் மதிப்பினையோ, குறைந்த மதிப்பினையோ தருகிறது. ஒரு மனிதன் தான் வேலை பார்க்கும் நிறுவனத்திற்குத் தகுந்த மதிப்பினைப் பெறுகிறான். ஒவ்வொரு

நிறுவனத்திற்கும் கடைப்பிடிக்க வேண்டிய ஒவ்வொருநெறி முறைகள் உள்ளன.

**மதம்**

ஒரு மனிதனுக்கு ஒழுக்க நெறிமுறைகளைக் கற்றுத் தருவதில் மதம் முக்கிய இடத்தில் உள்ளது. சிறுவயதில் இருந்தே மதம் சார்ந்த ஒழுக்க நெறிமுறைகள் போதிக்கப் படுகின்றன.

**புத்தகங்கள்**

நாம் தேர்ந்தெடுத்துப் படிக்கும் புத்தகங்கள் நல்ல மதிப்பினைக் கற்றுத் தருவதற்கான தோற்றுவாய்களாக உள்ளன.
மேலே சொல்லப்பட்ட தோற்றுவாய்கள் நீங்கலாக பிற காரணிகளும் மதிப்பின் தோற்றுவாய்களாக அமைய வாய்ப்புள்ளது.

## மனித மதிப்புகள்




இந்த உலகில் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்கவில்லையென்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச் செலுத்த இயலும் - **அன்னை தெரசா**

இந்த உலகில் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்கவில்லையென்றால் கண்ணுக்குத் தெரியாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச் செலுத்த இயலும் - அன்னை தெரசா

இந்த உலகில் வாழ மனிதர்களுக்கு வெவ்வேறு சாதனங்கள் தேவை.இருப்பினும், இந்த உலகில் எதுவும் இலவசமாக கிடைக்காது.ஒருவர் திருப்தி அடைய சரியான விலையைச் செலுத்த வேண்டும். ஏனெனில், எல்லாவற்றிற்கும் ஒரு விலை உள்ளது. எவ்வாறாயினும், தேவைகளின் அடிப்படையில் காரணிகளை மதிக்க வேண்டும். தேவைகள்,நமது மதிப்பின் அடிப்படையில் இருக்கும். முதலாவதாக, உணவு, நீர், காற்று, தங்குமிடம் மற்றும் ஆடை போன்ற அடிப்படைத் தேவைகள் உள்ளன.அவை இல்லாமல் உலகில் உயிர்வாழ்வது சாத்தியமில்லை. எவ்வாறாயினும், இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மனிதன் தனது உயர்ந்த தேவைகளை சமூகத் தேவைகள், பாதுகாப்புத் தேவைகள் அல்லது சுயமாக்கல் தேவை என்று

வகைப்படுத்தி அவற்றைப் பூர்த்தி செய்ய நகர்கிறான். இருப்பினும், ஒவ்வொரு நபரும் ஒரே பாதையை பின்பற்றுவதில்லை. அவர் தேர்ந்தெடுக்கும் பாதை நபரின் உள்ளார்ந்த மதிப்புகளை தீர்மானிக்கின்றன. இந்த உள்ளார்ந்த மதிப்புகள்அவனது இயல்பு மற்றும் அவனது வளர்ப்பால் பெறப்படுகின்றன.

இதனை,

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே..
பின் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பதிலே"

என்ற புலமைப்பித்தன் பாடல் வரிகள் உறுதி செய்யும் வண்ணம் உள்ளது. அந்த உயரிய மனித மதிப்பினை இங்கு காண்போம்

## அறிமுகம்

### மனித மதிப்புக்களின் தோற்றம்

பரந்துபட்ட நிலப்பரப்புகளையுடைய இந்த பிரபஞ்சத்தில் மானுடம் என்ற உயிர் குழுக்கள் எல்லாத்திசைகளிலும் தனது இருப்பிடத்தை உருவாக்கி ஒரு இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தனர். சில நூற்றாண்டுகளுக்குப் பின் இனக்குழுக்களின் தேவை காரணமாக புதிய இருப்பிடத்தை நோக்கிப் பயணித்தான். அப்படி பயணிக்கத் தலைப்படும் போது புதிய இனக்குழுக்களை கண்டான். அவர்களுடன் இணைய தலைப்படும் போது அந்த இனக்குழுக்களைப் பற்றி அறிய முற்பட்டான். அவ்வாறு அவன் முதலில் இனக்குழுக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை கண்டறியத் தலைப்பட்டான். அதுவே தன்னை அக்குழுவில் இணைத்துக் கொள்ள எளியவழி என்று கருதினான். எளிமையாகக் கூறுவதென்றால் தமிழ் நில அமைப்புகள் ஐவகையாக பகுக்கப்பட்டு இருந்தாலும் அடிப்படைத் தேவை காரணமாக ஒரு நிலத்தினர் மற்றொரு நிலத்தினருடன் தொடர்பு வைத்திருந்தனர் என்பதனை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. இந்த தொடர்பின் தொடக்கமே மானுடவியல் ஆராய்ச்சின் தொடக்கமாகக் கருதப்படுகின்றது.

எ.கா. தமிழகத்திற்கு வந்த கிறித்தவ மத போதகர்கள் முதன்முதலில் தமிழகத்தின் பண்பாடு, நாகரீகத்தினை அறிந்து கொள்ளத் தலைப்பட்டனர் என்பதனை நாம் அறிவோம்.

மானுடவியல் என்பது சமுகம் அல்லது குடும்பம் என்ற பருப்பொருளை ஆய்வதாகும். அம்மானுடவியலின் பரிணாம வளர்ச்சியே மதிப்பாகும். மதிப்பு என்பது மானுடவியலின் ஒரு அங்கமாகும். அதாவது மனித உடலினைப் பற்றி படிப்பதற்கும், அந்த உடலில் உள்ள உறுப்புகளைப் பற்றி படிப்பதற்குமுரிய வேறுபாடே மானுடவியலுக்கும், மனித மதிப்பிற்கும் உள்ள வேறுபாடாகும். இன்னும் எளிமையாகச் சொல்வதென்றால் குடும்பம் என்பது பல்வேறு உறுப்பினர்களால் கட்டமைக்கப்பட்டதாகும். இந்த குடும்பத்தின் பழக்கவழக்கங்கள், பண்பாட்டினைப் பற்றி ஆராய்வது மானிடவியல். அதே நேரத்தில் அந்த குடும்பத்தின் தலைவராக இருக்கும் நபரின் தேவையும், அவருக்கு அக்குடும்பத்தினர் அளிக்கும் முக்கியத்துவமே மதிப்பு எனப்படும்.

**மதிப்பு என்பதற்கான விளக்கம்**

விழுமியம் என்ற சொல்லே மதிப்பு என்னும் பொருள் குறிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அகராதிகளில் விழுமியங்கள்**

விழுமியம் என்ற சொல் தமிழ்நிகண்டு, அகராதிகளில் நேரடியாக இடம்பெறவில்லை எனினும் விழு, விழுமிய, விழுப்பம், விழுமம் போன்றசொற்கள் காணப்படுகின்றன.

இரா. பாலகிருஷ்ண முதலியார் எழுதிய தமிழ் ஆங்கில அகராதியில் “விழுமிய” என்ற சொல்லுக்கு நன்றாகத் தெளியக் கூடிய (Prominent) மிகச்சிறந்த, மேம்பட்ட முதல் தரமான’ என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில - தமிழ் அகராதியில் “Values” என்ற சொல்லுக்குக்கீழ்க்கண்ட விளக்கம் காணப்படுகின்றது.

“Worth— மதிப்பு

Merit at a thing– ஒரு பொருளின் தகுதி

Highly esteemed – மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது"என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது.

தமிழிலக்கிய அகராதி

"விழுப்பம் - ஆசை, சிறப்பு, நன்மை, மேன்மை, உயர்வு
விழுப்பகை – பெரும்பகை
விழுப்பொருள் - மேன்மையான பொருள்
விழுமியோர் - பெரியோர்

விழுமியம் - சிறப்பு, சீர்மை, நன்மை, துக்கம், வருத்தம் என்று தமிழகராதி விளக்கம் அளித்துள்ளது. மேலும்,

"விழு– சிறப்பு" என்றும் "இயம் - சொல்" என்றும் பொருள் கூறுகின்றது. இதன்மூலம் விழுமியம் என்பதற்குச் சிறப்புச் சொல் என்று அகராதி பொருள்கூறுவதைக் காணமுடிகின்றது.

## மதிப்பு

"மதிப்பு என்னும் சொல்லிற்கு நிகராக மனப்பான்மை, தேவை,உயர்ச்சி, மனப்போக்கு, ஆர்வம், முன்னுரிமை, உட்கருத்து, மனஅவா,கவர்ச்சி ஆகிய சொற்களை உளவியல் அறிஞர்கள் கையாளுகின்றனர்."

கடமை, உணர்ச்சி, ஒழுக்க உயர்வு, கலாச்சாரம், பாகுபாடு ஆகியசொற்களை மதிப்பிற்கு நிகரான சொல்லாகத்தொல்பொருள் ஆய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

"பண்பாட்டின் அடையாளக்கூறு மதிப்புகள், எந்த ஒரு பண்பாட்டையும்மதிப்புகள் மூலம் விளக்கிக் காட்ட முடியும்."என்று குறிப்பிடுவர். இதன்மூலம் சமூகத்தின் ஒவ்வொரு நிகழ்வின் மதிப்புகள் வெளிப்படுவதைக் காணலாம்

## விழுமியமும், மதிப்பும்




'Values' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'மதிப்பு' என்று பொருள்,

இது‘valorem’ என்னும் இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. இச்சொல்லிற்கு உறுதிப்படுத்துவது அல்லது தகுதிப்படுத்துவது என்பதுபொருள். ‘Values’என்ற சொல்லிற்கு நிகரான சொல்லை மிகச் சிலமொழிகளிலேயே காணமுடிகின்றன “தொடக்கத்தில் வீட்டினுள்ளே வாழும் அக வாழ்க்கை, வீட்டின்புறத்தே வாழும் புறவாழ்க்கை என்றிருந்தது. அந்த அக வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் மனநிலையிலும், பண்பாட்டிலும், அறிவுத் திறத்திலும் வளரவளர அது ஒரு குறிக்கோள் தன்மை பெற்றதாக வளர்ந்து. அந்த அனுபவத்தின் பயனாகப் பல்துறைகளில் விழுமியங்களைக் கண்டனர்” என்பர் ஈ.கோ. பாஸ்கரதாஸ்.

‘“விழுமியம், விழுமியோர், விழுமியது Excellence, Superiour, Pre-eminent என்ற பொருளில் பயன்படும் விழுமியம் என்ற சொல்லை மாற்றி இறுதியில் விழுமியம் என்றாக்கி, ‘Values’க்கு பொருள் சூட்டியுள்ளனர். இது ஏற்றுக்கொள்ளக் கூடியபயன்பாடுதான் என்றும் மதிப்பு (values)என்ற சொல்லுக்குச் சரியான பதமாகவிழுமியம்என்பதைக் கூறலாம்”எனச் சமூகவியல் அறிஞர் கோ.கருணாநிதி இணைய தளத்தில் வெளியிட்டுள்ளார். ‘விழுமியம்’ எனும் சொல் மேன்மை,உயர்ந்த,சிறந்த என்பன போன்ற பொருள்களில் சங்கஇலக்கியங்களில் சுட்டப்பெறுகின்றன. மனிதப் பண்புகளையும், ஒழுக்கங்களையும் விளக்கும் முகமாக இவ்விழுமியம் என்னும் சொல்லாட்சி அமைகிறது. மேலும்,“விழுமியம் என்றாலே அது சிறந்ததை மட்டுமே குறிக்கும் சிறந்ததல்லாதஎதுவும் விழுமியம் என்ற சொல்லின் பொருளாட்சிக்குள் வராது” எனச்சேதுமணியன் கூறுகிறார்.



மேலும்.“விழுமியம் என்னும் சொல் பண்புகளையும், ஒழுக்கங்களையும் விளக்கி விழுமியம் எனும் சொல்லாட்சியிலிருந்து விரிந்து செல்கிறது. விழுமியம் என்னும் சொல்எதிர்மறைப் பண்புகளையும், கருத்துக்களையும் விளக்கும் சொல்லாக அமையப் பெறாமையால் மதிப்பு எனும் சொல்லை பிற்கால அறிஞர்பெருமக்கள் உருவாக்கினார்கள். இச்சொல் நேர், எதிர் விழுமியங்களையும் விளக்கும் சொல்லாகச் சுட்டப்பெறுகிறது” என்றும் கூறியுள்ளார். இவற்றிலிருந்து மதிப்பு என்பது நேர் பொருளையும்

அதன்எதிர்பொருளையும் (இன்பம் X துன்பம்) தருவதாக அமைந்தாலும் அவை பயன்படும் முறை அந்நிலைப்பாட்டிற்கு ஏற்ப அமையப்பெறும் என்பதை அறிய முடிகிறது. எனவே, மனிதனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்துச் செயல்களும் அவ்வக் காலத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப விழுமியங்களாகவும் மதிப்புகளாகவும் அமையப்பெறும். விழுமிய அமைவின் இலக்கு மனிதனே ஆவான். மனம் தூய்மையுடையதாக இருத்தலே அறவோன் என்பதற்கான உரைகல். இதனையே

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

## மனித மதிப்புகளின் வகைககள்

### நேர்மறை மதிப்புகள்

மனித மதிப்புகள் என்பது மனிதன் சமுதாயத்தில் தனக்காக அங்கீகாரத்தை நிலைநிறுத்த உருவாக்கியதாகும். குறிப்பிட்ட காலச் சூழலில் வாழும் மனிதன் அந்த காலத்திற்கேற்ப மதிப்புகளை உருவாக்கிக் கொண்டான். இதனால் சமுதாய மதிப்பு காலத்திற்கு ஏற்ப மாற்றமடையும்.சமுதாயத்தில் மனிதனுடைய விருப்பத்திற்கும், கருத்திற்கும் எடுத்துக்கொள்ளும் பொருளுக்கும் இன்ன பிறவற்றிக்கும் நல்லன செய்து உயர்த்துவன எல்லாம் நேர் மதிப்புகளாகும்.

இங்கு துணிச்சல், கூர்ந்துணர்தல், கடைமைஉணர்வு, பெருந்தகைமை, மாறா மனமுடைமை அன்பு, அமைதி போன்றவை நேர்மதிப்பாகும்.

### துணிச்சல்



மனித வாழ்க்கை சிக்கல்களும், சவால்களும் நிறைந்தது. மாறிவரும் சூழலில் நம் இடர்பாடுகளையும், பின்னடைவுகளையும் வரத்துடன் எதிர்கொள்ளும் திறனே துணிச்சல் எனப்படும். தினசரி மனித வாழ்வில் எண்ணற்ற புதிய புதிய நோய்கள் தாக்குவதைப் போன்று, உளவியல் ரீதியிலான புதிய புதிய சிக்கல்களும் உருவாகிக் கொண்டே வருகிறது. இதனை ஒரேயடியாக

தள்ளி விடவும் முடியாது, புறக்கணித்து விடவும் முடியாது. இதில் பலவற்றை நாம் எதிர் கொள்ள வேண்டிய கட்டாயச் சூழல் இருக்கிறது. இச்சிக்கலை எதிர் கொள்ள வேண்டுமெனில் துணிச்சல் நமக்கு அவசியமாகிறது. இது உள்ளார்ந்த அளவில் இயக்காற்றலுடையது. நாம் எதிர்கொண்ட கொள்கைக்காகவும், மதிப்புகளுக்காகவும் போராடுமாறு நம்மை ஈடுபடுத்துகிறது.இப்பண்பு வாழ்வின் நெருக்கடியான கட்டங்களிலும், தோல்விகளிலும் நம்பிக்கையோடு முன்னோக்கிப் பயணிக்க உதவுகிறது. நமது துன்ப வேளைகளில் நமக்குத் தன்னம்பிக்கை தந்து அவற்றைச் சமாளிப்பதற்குத் திறனைத் தருகிறது. புறப்பொருள் வெண்பாமாலையின் இலக்கண நூலாசிரியர் ஐயனாரிதனார், துணிச்சல் பற்றி விளக்க முற்படும் போது, பெருகி வரும் பகைவரது படை கண்டு மனம் தளரா வீரன் ஒருவன் மன அச்சம் சிறிதுமின்றி மன்னனிடம் சென்று நான் ஒருவனே தனி ஒருவனாக நின்று எதிரியின் தூசிப்படையினை அழிப்பேன் என்று சூளுரைத்தான் என்பதை,

> “முன் எழுதரு படைதாங்குவன் என்
> மன்னவற்கு மறம் கிளர்ந்தன்று”

என்ற கொளு மூலம் விளக்குகிறார்.

## கூர்ந்துணர்தல்

ஆய்வறிவு என்பது நன்கு தீர்மானிக்கும் திறனை உணர்த்துகிறது. இது நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆய்ந்து தெளிய உதவுகிறது. இது மனத்தின் செயல்முறையாகவும் விளங்குகிறது. சமுதாயத்தில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து நடுநிலையாக முடிவெடுக்க உதவும் கருவிதான் கூர்ந்துணர்தல். அண்ணல் காந்தியடிகளுக்கு இரயிலில் ஏற்பட்ட அந்த கூர்வுணர்வுதான் நம் நாட்டின் தேசப்பிதாவாக மாற்றியிருக்கிறது. இது ஒருமைப்பாடு, உண்மை, நேர்மை, திறந்த மனமுடைமை ஆகிய மதிப்புகளைக் கடைபிடிக்கும் வாய்ப்பை உருவாக்குகிறது.

## கடைமை உணர்வு

மனச்சான்றின் படி பல்வேறு பணிகளைச் செய்வதே கடமையுணர்வு என்கிறோம். இது ஒருவரது உடல்நலத்தையும், வாழ்க்கையினையும் கூடத் தியாகம் செய்யுமாறு உந்துகிறது. இதில் சுய அறிவுறுத்தலாக மனம்

செயல்படுகிற போது நாம் செய்கின்ற பணியிலே முழு நிறைவைக் காண முடிகிறது. இது சமுதாயத்தில் நிகழும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, அரசு அதிகாரி தனது பணியில் கடமையுணர்வுடன் செயல்பட்டால் நம் நாட்டில் ஊழல் போன்ற சமூக தீமையை அழித்துவிடலாம். ஒருவர் தனது பணியில் முழு அர்ப்பணிப்புடன் செயல்படும் போது தனக்குள்ளே மனநிறைவும், தன்னைப்பற்றிய நேர்மறையான எண்ணங்களும் எழ உதவுகின்றது. கட்டாயம் செய்யவேண்டிய கடமை என்பது நல்லவைகள். அத்தகைய கடமை அறிந்து செயல்படுவதே சான்றாண்மை என்பதனை வள்ளுவர்,

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு" என்ற குறள் வழி கூறுகிறார்.

**பெருந்தகைமை**

மகத்ததான அறிவும், இதயமும் பெற்ற ஒருவர், வலியச்சென்று பிறருக்கு எந்த ஒரு பிரதிபலனும் பாராமல் உதவும் நற்பண்பே பெருந்தகைமை ஆகும். இது சமூகத்தில் நாம் பிறருடன் கொண்ட அன்பின் விளைவாக மனதிற்குள் உந்தப்படும் ஒரு உந்து சக்தியே பெருந்தகைமை எனப்படும். இது ஒருவரது உள்ளம் மற்றும் உணர்வுப்பூர்வமான தேவைகளை உணரச்செய்து, உணர்விற்கு முக்கியத்துவம் அளித்து அவரின் தேவைகளைத் தன்னார்வத்துடன் நிறைவேற்ற உதவுகிறது. ஆகவே நமது ஆற்றல், திறமைகள், சுய தியாக உணர்வு ஆகியவற்றைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள வழிவகை செய்கிறது. பிறருடைய துன்பத்தில் உணர்வுப்பூர்வமாக பங்கு கொள்ள உதவுகிறது. இதனையே,

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும
வானகமும் ஆற்றல் அரிது"
என்று வள்ளுவர் பெருந்தகைமை பறைசாற்றுகிறார்

**மாறா மனமுடைமை**

ஒருவர் தனது சுற்றத்தாரிடமும், மற்றவரிடமும் மாறாத நம்பிக்கை வைத்திருப்பதே மாறா மனமுடைமை ஆகும். மனித தொடர்புக்கு மட்டும் அல்ல மாறாக வாழ்க்கை மதிப்புகளும் உன்னதமானவைகள் தான். உயர்வான

காரணிகள் அனைத்திற்கும் மாறாமனமுடைமை பண்பு முக்கியமானது. கொள்கையின் அடிப்படையில் சிலர் சூழ்நிலைக்கேற்ப தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டே இருப்பர். இதனால் வாழ்க்கையில் கொள்கை பிடிப்பற்றவர்களாய் சூழ்நிலைக் கைதிகளாய் செயல்பட முடியாமல் இருப்பர். எனவே உறுதியானஎண்ணங்களை மனத்துள் விதைத்து இறுதிவரை மனம் தளராமல் போராடும் தன்மைகளை நேர்மையான வழியில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**மாறாமனமுடைமை மதிப்பைப் பண்படுத்தி உருவாக்கிக் கொள்ள பின்வரும் வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.**

- இரகசியங்களை வெளியிடாமல் பாதுகாத்தல்.
- பழித்துப் பேசுவதையும் வதந்திகளைப் பரப்புவதையும் விட்டு விலகி நிற்றல்.
- பிறர் புகழ்பெறத் தாம் உழைத்தல்.
- தனது நாட்டைக் குறித்துப் பெருமையுடன் பேசுதல்.
- நாட்டின் வளத்திற்காகவும் நலத்திற்காகவும் பணி செய்தல்.

**தூய்மை**

மனத்தால் மாசற்றவராக இருப்பதும், பிறருக்குத்சிறுதுளி கூட தீயதைச்செய்யாத உன்னதப்பண்புமே தூய்மை எனப்படும். இது அன்பின் உள்ளார்ந்த மன உணர்வாக விளங்குகிறது. இறைவனது புனிதத்தன்மையில் இருப்பதன் பிரதிபலிப்பாக விளங்குகிறது. இங்கு சுட்டிக்காட்டப்படும் தூய்மை உடல் தூய்மையை மட்டும் குறிப்பதல்ல. மாறாக மனத்தூய்மையையும் குறிக்கிறது. இது நாம் பிறரிடம் கொண்டுள்ள உறவின் வெளிப்பாடாக விளங்குகிறது. நமது சொல், செயல், எண்ணம் ஆகியவற்றை நேர்மறைச் செயல்களாகவும், சமுதாயத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காகவும் ஒருங்கிணைக்கும் சக்தியே தூய்மை ஆகும். இதனை இக்கால கவிஞன் ஒருவன்,

**மதிப்புகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்கு**

**மனித மதிப்புகளை வலியுறுத்துவதில் குடும்ப மதிப்புகளின் பங்கு**

பூமியில் மிகவும் சக்திவாய்ந்த உயிரினமாக மனித இனங்கள் இருக்கிறன. ஆனால் மனித இனம் மிகவும் பலவீனமான இனம் என்பதும் உண்மை. மண்ணில் பிறந்த மனிதக் குழந்தை ஒரே ஆண்டில் நடக்கக் கற்றுக்கொள்வதில்லை. குழந்தையை சொந்தமாக இப்புவியில் வாழ அனுமதிக்கப்பட்டால், அது தனித்து உயிர்வாழ முடியாது. குடும்பத்தின் ஆதரவு என்பது ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சிக்கும் கட்டாயம் தேவை.இந்த காரணத்தினால்தான், ஆண்டு முழுவதும் மனித இனங்கள் ஒரு வகைமை போல எண்ணி வாழ்கின்றன.

குடும்பம் என்ற கருத்து தான் குடும்ப மதிப்பிற்கு அதிகம் வழிவகுக்கிறது.குடும்பத்தில் தான் தனி மனிதன் என்ற கருத்துருவாக்கம் மறைந்து தனிநபருக்கு பதிலாக சமூகம் என்ற கருத்துருவாக்கம் பேணப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்வது தான் சமூகத்திற்கான தோற்றுவாய் ஆகும். அந்த தோற்றுவாய் குடும்பமாகவே கருதப்படுகிறது. ஒரு குடும்ப அமைப்பில், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து ஒரே செயல்பாடுகளைச் செய்வதை விட நிரப்பு செயல்பாடுகளைச் செய்யும் பொழுது அது குடும்பத்தின் முன்னேற்றத்திற்கும், சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கிறது.

உதாரணமாக, தந்தை வாழ்வாதாரத்தை காக்க சம்பாதித்து குடும்பத்தின் வலுவான உறுப்பினராக இருந்து குடும்பத்தைப் பாதுகாக்கிறார்.தாய் உணவு சமைப்பதன் மூலமும், வீட்டைப் பேணுவதன் மூலமும், குழந்தைகளை வளர்ப்பதன் மூலமும் குடும்பத்தை கவனித்துக் கொள்கிறார்.தங்கள் அரவணைப்பில் உள்ள குழந்தைகள் இந்தச் சலுகைகளை பெற்றோரிடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அதே நன்மைகளை தங்கள் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டிய குடும்பக்கடமை அவர்களுக்கு இருக்கிறது.இவ்வாறு குடும்பத்தின் மதிப்பு என்பது ஒரு சமூகத்தின், ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

குடும்ப அமைப்பில், குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் ஆர்வமும் எழுதப்படாத சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறது. ஏனெனில் அன்பும், நம்பிக்கையும் மட்டுமே ஒரு குடும்பத்தின் நிர்வாகத்தை நிர்வகிக்கிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுக்கும்போது எந்தவொரு தனிப்பட்ட நன்மையையும் தேடுவதில்லை. குழந்தைகளும் பெற்றோர்கள்

தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் செய்கின்ற பங்களிப்புகளை அங்கீகரிக்கின்றனர். மேலும் அவர்கள் எதிர் காலத்தில் தங்கள் குழந்தைகளுக்கு அதே நன்மைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வயதானதும் தங்களதுபெற்றோர்களையும் கவனித்துக்கொள்கிறார்கள்.

குடும்ப மதிப்பின் முழு அமைப்பு பாரம்பரியம் மற்றும் நம்பிக்கையால் மட்டுமே பராமரிக்கப்படுகிறது. இருப்பினும், குடும்ப மதிப்புகள் வலுவாக இருக்கும்போது, அது தனிப்பட்ட சுதந்திரத்தை குறைத்து, தனிப்பட்ட மதிப்புகளில் சிறிது சரிவை ஏற்படுத்துகிறது என்பதையும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். ஒவ்வொரு நபரும் முதலில் குடும்பத்துக்காகவும், சுயத்தை இரண்டாம் நிலையாகவும் வைத்துச் செயலாற்றுவதால் இந்தக் கருத்து எழுகிறது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு தனி மனிதனாகச் சிந்திக்க முடியாதென்பதால்  மனிதனின் தனிப்பட்ட சுதந்திரம்தடைபடுவது போல ஒரு எண்ணம் வந்தாலும் அது மாயையாகவே கருதப்படுகிறது. ஏனெனில் மனித வாழ்வே சேர்ந்து வாழ்வதற்காகத் தான் படைக்கப்பட்டிருக்கிறது. குழு நன்மை தான் ஆதிக் காலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது. குழுவின் ஒட்டு மொத்த நலனே கருத்தில் கொள்ளப்படும். தனிமனிதச் சுதந்திரம், தனிமனித நன்மை என்பவையெல்லாம் மேற்கத்திய நாடுகளின் தாக்கங்களாகவே கருதப்படுகிறது. நம் நாடு வளர்ந்து வரும் நாடாகையால் எல்லாரும் கை கோர்த்து ஒரு குடும்பமாக, ஒரு சமூகமாக இருப்பதே வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

குழந்தையின் தார்மீக விழுமியங்களை வடிவமைப்பதில் குடும்பமும், சமூகமும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையே ஒரு வலுவான பிணைப்பு உள்ளதால் இது குழந்தையின் ஆளுமையை கூர்மைப் படுத்த உதவுகிறது. குடும்ப மதிப்புகளின் தனித்துவமாக இதுவே கருதப்படுகிறது. மதிப்புகள் கட்டமைக்கப்படக் கூடிய இடம்குடும்பமாகும்.குழந்தைகளின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்களில் உண்மைத்தன்மை, மகிழ்ச்சி, அமைதி, நீதி போன்ற தார்மீக மதிப்புகள் குடும்பங்களில் தான் கற்பிக்கப்படுகின்றன.

மேலும், அவை அவர்களின் வாழ்க்கையில், அவர்களின் செயல்களை நிர்வகிக்கும் இலட்சியங்கள் மற்றும் தாரக மந்திரங்களாகச் செயல்படுகின்றன. குடும்பத்தின் நடைமுறையில் உள்ள மதிப்பு முறைகளை இளம் குடும்ப உறுப்பினர்களுக்கு முழுமையாகக் கற்பித்தால் அவர்களுக்கானவாழ்க்கை

சீரான முறையில் மாற்றம் பெறும். உண்மை, சரியான நடத்தை, அமைதி, அன்பு, அகிம்சை ஆகியவற்றின் மதிப்புகள் முதலில் குடும்பத்தின் மூலமாகத் தான் பரவுகின்றன. இதில் தாயும், தந்தையும் அடித்தளமாகவும், மையமாகவும், வாழ்க்கையை வடிவமைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் சுய அறிவு, தன்னம்பிக்கை, சுய திருப்தி, சுய மதிப்பு, சுய தியாகத்திற்கான திறன் ஆகியவற்றைப் பெறுகிறார்கள்.

குடும்பம் குழந்தையின் மன வளர்ச்சிக்கு உதவுகிறது மட்டுமல்லாமல் அவர்களது ஆசைகளையும் மதிப்புகளையும் ஆதரிக்கிறது. குடும்பங்களின் மகிழ்ச்சிகரமான மற்றும் இன்ப மயமான சூழ்நிலை குழந்தைகளின் அன்பு, பாசம், சகிப்புத்தன்மை மற்றும் தாராள மனப்பான்மையை அதிகம் வளர்க்கிறது. ஒரு குழந்தை தன்னைச் சுற்றி நிகழ்வதைப் பார்ப்பதன் மூலம் தனது நடத்தையைக் கற்றுக்கொள்கிறது. ஒரு குழந்தையை சமூக மயமாக மாற்ற உதவுவதில் குடும்பம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது. குழந்தையின் முன்னேற்றத்தில் பெரும் செல்வாக்கையும், தாக்கத்தையும் குடும்பம் கொண்டுள்ளது. கூட்டுக் குடும்ப அமைப்பில், பெரியவர்கள் இருப்பது குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சியில் பயனுள்ள பங்கைஅளிக்கிறது. இது குடும்பத்தின் இளம் தலைமுறையினருக்கு மனித விழுமியங்களை வளர்ப்பதற்கும், அவர்கள் பெரியவர்களிடையே இருக்கும்போது அவர்களின் எதிர்மறை மனப் போக்குகளை அகற்றுவதற்கும் உதவுகிறது எனலாம்.

## மனித மதிப்புகளைகவலியுறுத்துவதில் சமூகத்தின் பங்கு

## கல்வி நிறுவனங்களின் பங்கு



கல்வி நிறுவனங்களின் நோக்கம் கல்வியை மட்டும் கற்பிப்பதோடு அல்லாமல் மதிப்புகளைக் கற்பித்தல் மற்றும் அவர்களது திறன்களை மேம்படுத்துதல் என்ற நிலைகளில் இருக்க வேண்டும். ஏனெனில் குழந்தைகளது வளர்ச்சியில் பெரும் செல்வாக்கை செலுத்துகின்ற சமூகத்தின் துணை நிறுவனங்களாக கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. கல்வி நிறுவனங்களில் தான் ஒருவன் தனது பெரும்பான்மையான ஆரம்பக் கால வாழ்க்கையை கழிக்கிறான்.

பெற்றோருக்கு நிகரான இடத்தில் ஆசிரியர்களை வைத்துப் பார்க்கிறான். பெற்றோருக்குப் பின்னால் குருவையே சமூகம் வைத்து அழகு பார்க்கிறது. அதனால் தான் ஆசிரியர்கள் மாணவர்களின் நெறிமுறை நடத்தைகளை வளர்ப்பதில் முக்கியப் பங்கு ஆற்றுகின்றனர்.

குடும்பத்திற்கு வெளியே குழந்தைகளுக்கு முதல் முன்மாதிரிஆசிரியர்கள் ஆவர்.ஆசிரியர்கள் மாணவர்களிடம் அக்கறை காட்டுவதையும், மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்க மெனக்கெடுவதையும் மாணவர்கள் கண்டுகொண்டே வருகிறார்கள். அவ்வாறு வந்து கொண்டிருக்கும் பொழுது மாணவர்கள் மனதில் ஆசிரியர்கள் ஆழமாகப் பதிந்து விடுகின்றனர். சிந்தனையாலும், செயலாலும் ஆசிரியர்கள் பால் ஈர்க்கப்படும் மாணவர்கள் ஆசிரியர்களை தமது வழிகாட்டியாகவே நினைத்துவாழ்கின்றனர். அதனால் தான் முன்னாள் ஜனாதிபதி மேதகு அப்துல் கலாம் அவர்களுக்கு ஒரு விஞ்ஞானியாக இருக்கும் பொழுது வராத மகிழ்ச்சி ஒரு ஆசிரியராக இருக்கும் போது வருகிறது. ஒவ்வொரு மாணவரும் தனக்குப் பாடம் கற்றுக் கொடுத்த ஏதோ ஒரு ஆசிரியரை வாழ்வில் தனது முன் மாதிரியாகக் கொண்டு சீரிய வழியில்செல்லும் பொழுது அந்த மாணவனுக்கான மதிப்பு உயர்ந்து கொண்டே செல்கிறது.

## தொழில்முறை மதிப்புகளின் பங்கு

சமுதாயத்தில் ஒழுங்கைக் கொண்டுவருவதற்காக உருவாக்கப்பட்ட மிக முக்கியமான அமைப்புகளில் ஒன்று அரசாங்கம். அவ்வரசாங்கம் காவல்துறை, வருவாய்த்துறை, பாதுகாப்புத்துறை போன்ற பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்கவும், வெளிப்புற ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்கவும் தேவைப்படுகின்றன. அரசாங்கம் தவிர தனியார் நிறுவனக்கள் அல்லது சமூக அமைப்புகளால் நடத்தப்படும் பல நிறுவனங்களும் உள்ளன. அவை எல்லாம் சேர்ந்து பொருட்களை உற்பத்தி செய்து தேசத்திற்கும், உலக மக்களுக்கும் சேவையை வழங்குகின்றன. இந்நிறுவனங்கள் மூலமாகத் தான் ஒவ்வொரு தனி நபரும் தனது வாழ்வாதாரத்தை சம்பாதிக்கவும், சமூகத்திற்கு பங்களிக்கவும் பெரு முயற்சி செய்து வருகின்றார். இந்த நிறுவனங்கள் எல்லாம் சமூகத்தின் ஒரு சிறப்பானச் செயல்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன எனலாம். இவ்வமைப்புகளின் அனைத்து உறுப்பினர்களும் அறிந்தோ அறியாமலோ பல்வேறுபட்ட மதிப்புகளை உருவாக்குகின்றனர். இவ்வாறு மனிதர்கள்

ஒன்றிணைந்துதமது தொழில் காரணமாக உருவாக்கும் மதிப்புதொழில்மதிப்பாகும். வெவ்வேறு தொழில்கள், வெவ்வேறு பணிகள் காணப்பட்டாலும் மதிப்பு என்பது மாறாது. செய்கின்ற தொழிலை மதிப்பதும், தொழிலாளர் நலனில் அக்கறை கொள்வதும் பொதுவான மதிப்பாகக் கருதப்படுகிறது. இளமையில் கல்வி நிறுவனங்கள் மூலம் பெற்ற மதிப்பை ஊடுபொருளாகக் கொண்டு தொழில் சார்ந்த இடங்களில் ஒரு விழுமியத்தை உண்டாக்குகிற பொழுது அது புதியதொரு மதிப்பாக பரிமாணம் கொள்கிறது. இம்மதிப்புகளை தொழில் பக்தி, செய்யும் தொழிலே தெய்வம் என்ற வார்த்தைளின் வழியாக நிறுவனங்கள் உயிர்ப்போடு வைத்திருக்கின்றன.

## அற மதிப்புகளின் பங்கு

தமிழ் மரபில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளும் மிகுதியாகப் பேசப்படுகிறது. இந்த நான்கனுள் தலையாயது அறமாகும். இந்த அறத்தினைப் பற்றி பேசாத நூல்கள் தமிழில் இல்லை எனலாம்.தமிழ் இலக்கியங்கள் அகம், புறம், காப்பியம், பக்திஎன எதுவாக இருந்தாலும் சரிஅதன் பாடு பொருள் எதுவாக இருந்தாலும் சரி அதில் அறமில்லா செய்திகள் இடம் பெறாது.

அறம் என்ற சொல்லில் பரந்த பொருளுடையது.மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் அறம் என்ற சொல்லினுள் அடக்கி விடலாம். உண்மை, நீதி, இரக்கம், நேர்மை போன்ற மதிப்புகள் ஒருவனிடம் குறைவாக காணப்பட்டாலோ அல்லது அறவே இல்லாவிட்டாலோ அம்மனிதன் தீயவனாக கருதப்படுகின்றான். அவன் மனிதன் என்றுகூட மதிக்கப்படுவதில்லை. மிருகம் என்று பழிக்கப்படுகின்றான். அறத்தின் சிறப்பினை உணர்ந்து அதனை மறந்து கைவிடுவதனால் ஏற்படும் தீமையை வள்ளுவர்,

“அறத்தினூங்கு ஆக்கம் இல்லை அதனை
மறுத்தலின் ஊன்கில்லை கேடு”

அறம் செய்வதை விட மேலான நன்மையைத் தருவது எதுவுமில்லை என்கிறார்.

மேலும், அறநெறி வாழ்வும் ஆன்மிக வாழ்வும் ஒன்றை ஒன்று பிரிக்கமுடியாத அளவு தொடர்புடையது அறநெறிப்படி வாழ்வோர், ஆன்மிக

வாழ்வில்நிலைத்திருப்போர் அறநெறிகளுக்குக் கட்டுப்பட்டிருப்பதுவும் இயல்பான பண்பாகும்.

கடவுள்தன்மை அல்லது பண்பு அக்கடவுளுக்கும்,மனிதனுக்கும் உள்ள உறவு நிலைகள்

ஆகிய அனைத்தும் ஆன்மீக மதிப்பீடுகளாக எண்ணப்படுகின்றன. கடவுள் கோட்பாடு, சமயச் சடங்குகள், ஜெபம், பிராத்தனை, தொழுகை, பலி, விழாக்கள் போன்ற பிறவும் ஆன்மீக மதிப்பீடுகளில் அடங்கும். இவ்வாறு கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு நிலைகளே ஆன்மீக மதிப்பீடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆன்மீகத்தினை அடிச்சுவடிகளாய் கொண்டு விளங்கும் மதங்கள் அனைத்தும் உச்சரிக்கும் பதம் அறநெறி. உருவத்தில் மனிதனாய் இருந்து குணத்தில் மனித குணாதியசங்களை தவிர்த்து மிருகப் பண்புகள் மிகைபெற்று மிருகமாய் இருத்தல் கூடாது. இவ்வுலக வாழ்வில் பிறந்ததன் நோக்கம் உண்ணல், உறங்கல் என்ற போக வாழ்வினை விரும்பி அதனில் முழ்கி அதனை அனுபவிக்க தான் இப்புவியில் பிறப்பு எடுத்ததாக கருதக்கூடாது. அவ்வாறு கருதி வாழ்ந்தால் ஐந்தறிவு கொண்ட மிருகத்திற்கும் நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போய்விடும்

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்புவியில் ஆட்டுமந்தையில் மனித உருவில் வந்த பிதாமகன் இயேசு அறநெறி கலந்த ஆன்மிகத்தை வாழ்ந்துகாட்டி உணரச் செய்தார். அநிதீகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றை வன்மம் கலக்காமல் தட்டிகேட்டார். அவர் பரவச் செய்த அறநெறியுடன் கூடிய ஆன்மிக மணம் இன்னும் இம்மண்ணுலக வாழ்வில் மணம் வீசிக்கொண்டுதான் இருக்கிறது.

**நவீன காலத்தில் விழுமியஙகள்**

மேலே பகுத்துக்கூறப்பட்ட இவ்விழுமியங்களின் தோற்றத்தறுவாயினை யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. மனித இனம் தோன்றிய காலம் தொட்டே மனித மதிப்புகள் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும்.தனி மனித வாழ்க்கை வெறுத்துக்களைந்து கூட்டுவாழ்க்கையான இல்லற வாழ்க்கையினை விரும்பி ஏற்கும் போது மனிதனுக்கு மதிப்பு தோன்றுகிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே"      என்கிறது நன்னூல் சூத்திரம்.

எனவே மனித மதிப்பு நித்தம் மாறுதலுக்குரியது. உதாரணமாக, முன்பெல்லாம் படிக்கும் மாணாக்கர்கள் கையில் அலைபேசி இருந்தால் அவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு குறைவு. ஆனால் தற்காலத்தில் மாணாக்கர்கள் அலைபேசி வைத்திருக்காவிட்டால்தான் மதிப்பு குறைவு வருகிறது. எது எப்படியென்றாலும் மாற்றம் என்பது வளர்ச்சிப் பாதையை நோக்கியும், விரும்பத் தகுந்த வகையிலும் அமைந்தால் தான் அந்தச் சமுதாயம் மேன்மை அடையும்என்பதினை மனதில்கொண்டு நேர்,எதிர் மறை மதிப்புகள் இருந்தாலும் மனித சமுதாயம் வளர்ச்சி பெற நன்மதிப்புகளை வளர்த்தெடுப்போம்.

**பயிற்சி வினாக்கள்**

**1. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்க**

அ. மதிப்புகளின் சிறப்பியல்புகளை எடுத்தெழுதுக

ஆ. மதிப்பு என்பதற்கான விளக்கங்கள் குறித்து எழுதுக

இ. மதிப்புகளை வலியுறுத்துவதில் அற மதிப்புகளின் பங்கு பற்றி விளக்குக

**2. கீழ்க்கண்ட வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக**

அ. மதிப்புகளின் வகைகள் குறித்து விரிவாக விடையளிக்க

ஆ. மதிப்புகளை தொடர்ந்து வலியுறுத்துவதில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்கினை விரிவாக விளக்குக

இ. மதிப்பிற்கான தோற்றுவாய்கள் பற்றி விடையளிக்க

## கூறு 2 - குடும்ப மற்றும் சமூக மதிப்புகள்



உறவுகளுடன் அழகிய முறையில் உறவாடும் ஒருவனுக்கு இறையருளின் அளவில்லாத நன்மைகள் கிட்டும் **- முகம்மது நபி**

### குடும்ப மதிப்புகள்

### அறிமுகம்

குடும்பம் என்பது ஒருவரோடு ஒருவர் உறவுடைய ஒரு குழு எனப்படுவதாகும். “என்னுடைய குடும்பமே என்னுடைய வாழ்க்கை. மற்றவை எல்லாம் எனக்கு இரண்டாம் பட்சம் தான். என் குடும்பமே எனக்கு முக்கியம்” என்கிறார் அறிஞர் மைக்கேல் இம்பீரியோலி. “மகிழ்ச்சியான குடும்பமே நாம் காணும் முதல் சொர்க்கம்” என்கிறார் அறிஞர் ஜார்ஜ் பெர்னாட்க்ஷா.

குடும்ப மதிப்பு என்பது சமூக மதிப்புகளுள் தலைசிறந்த ஒன்றாகும். ஒன்றுபட்ட வலுவான குடும்பமே, குடும்ப மதிப்பில் சிறந்து விளங்குகிறது. குடும்பமானது ஒற்றுமை, நம்பிக்கை, அன்பு, பரஸ்பர மரியாதை போன்றவற்றைக் கொண்டுள்ளது. குடும்பம் என்பதே மனித சமுதாயத்தின் சிறந்த அமைப்பாகும்.

“மனிதன் தனியாக இருப்பது ஆபத்தானது என்பதால் தான் கடவுள் அவனுக்குத் துணையாக மனைவி என்னும் பெண்ணைப் படைத்தார்” என்பது விவிலியக் கருத்தாகும்.

“ஒற்றைக் குடும்பம் தனிலே பொருள்
ஓங்கச் செய்பவன் தந்தை” என்கிறார் மகாகவி பாரதியார். ஆனாலும் இந்தியத் திருநாட்டில் பெண் என்பவளே குடும்பத்தின் ஆணிவேர்.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

அன்புமணி வழங்கும் சுரங்கம்" என்கிறார் கவிஞர் கண்ணதாசன். பல்கலைக்கழகம் என்னும் மாபெரும் நிறுவனத்தில் எப்படிப் பலதுறைகள் உள்ளனவோ, அதேபோல் தாய், தந்தை, மகன், மகள், சகோதர, சகோதரிகள் எனப் பல்வேறு கிளைகளை உடைய ஒரு பெரிய ஆலமரம் போன்றதே குடும்பம் எனலாம். எனவே குடும்ப மதிப்பு என்பதை வைத்தே ஒருவரது நற்பெயர் சமூகத்தில் உருவாகிறது எனலாம்.

## குடும்ப மதிப்புகளின் முக்கியத்துவம்




குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவருமே மிகவும் இன்றியமையாதவர்கள் ஆவர். அவர்கள் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் மரியாதையுடன் அன்பு செலுத்துவதே குடும்ப நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எனலாம். முக்கியமாகக் குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் தவறு இழைத்தால், அதனை மற்றவர்கள் மன்னிக்கும் மனோபாவத்துடன் இருக்க வேண்டும்.

"மன்னிக்கத் தெரிந்தவன் மனிதன்

மன்னிப்புக் கேட்கத் தெரிந்தவன் பெரிய மனிதன்"

என்பது ஒரு திரைப்படக் கருத்தாகும்.

அன்னையர் தினம், தந்தையர் தினம் போன்ற கொண்டாட்டங்கள் மேலை நாடுகளில் உண்டு. அவர்களைக் கௌரவிப்பதற்காகவே இத்தகைய தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அன்னை என்பவள் தெய்வத்தின் மறுவடிவம். தெய்வம் நேரில் வரமுடியாததால் தான் ஒவ்வொரு வீட்டிலும் அன்னை என்பவளைக் கடவுள் படைத்தார் எனலாம்.

"அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்" என்கிறார் கவிஞர் வாலி.

இந்திய நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. அவரது குழந்தைப் பருவத்தில் தந்தை மோதிலால்நேருவின் அனுமதி பெறாமல் மேஜை மீது வைக்கப்பட்டிருந்த ஒரு பேனாவை எடுத்ததற்காகத் தந்தையிடம் அவர் அடிபட்டார் என்பது வரலாறு. நேரு குடும்பம், இந்தியாவின் எட்டாவது பணக்காரக் குடும்பமாக இருந்தும், தந்தையின் மேஜை மீது உள்ள பொருளைத் தந்தையார் அனுமதி இன்றி நேரு எடுத்தது குற்றம் என்பது அந்நாளில் அக்குடும்பத்தின் சட்டமாக இருந்தது. அப்படிக் கண்டிப்புடன் வளர்ந்ததால்தான் பின்னாளில் ஜவஹர்லால்நேரு, மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்பட்டார்.

விருதுநகரில் பிறந்து வளர்ந்து பின்னாளில் பாரத ரத்னாவாக உயர்ந்த கர்மவீரர் காமராஜர் அவர்கள், வலிமையானதொரு தலைவராக தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆன பின்னரும் தன் தாய் சிவகாமி அம்மையாருக்கு என்று எவ்விதச் சலுகை காட்டவும் இல்லை, சொத்து சேர்த்ததும் இல்லை. அதனால் தான் தன்னலம் கருதாத அவரை இன்றளவும் பெருந்தலைவர் என்று போற்றுகிறோம்.

> “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
> மண்ணில் பிறக்கையிலே – பின்
> நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
> அன்னை வளர்ப்பதிலே”

என்பது எம்.ஜி.ஆர் படத்திற்காகப் புலமைப்பித்தன் எழுதிய பாடலாகும்.

குடும்பத்தின் நற்பெயரே, ஒருவரது திருமண ஏற்பாட்டிற்கு முதன்மைக் காரணமாகும். ஒரு வீட்டில் பெண்ணை எடுக்கவோ, கொடுக்கவோ இந்நற்பெயர் காரணமாகிறது. மரபு ரீதியாகக் குடும்பங்கள் நற்பெயரைத் தொடர்ந்து காப்பாற்றி வருகின்றன. குடும்பத்தில் உள்ள ஏதாவதொரு உறுப்பினர் கெட்டபெயரைச் சம்பாதித்தால், அது குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களையும் பாதிக்கிறது.



முன்பெல்லாம் குடும்ப உறுப்பினர் ஒருவர் காவல்நிலையத்திற்கு அல்லது நீதிமன்றத்துக்குச் சென்று வந்தால், அக்குடும்பம் குற்றப் பின்னணி உள்ள குடும்பமாகவே சமூகத்தால் பார்க்கப்படும். குடும்பத்தில் நிகழும் உரையாடல்களும் மிகவும்

முதன்மை பெறுகின்றன. சில குடும்பங்களில் அனைவரும் ஏதாவது ஒரு நேரத்திலேனும் ஒன்றாகச் சேர்ந்து உணவருந்தும் பழக்கம் உண்டு. அப்போது அன்றைய நிகழ்வுகள் அனைத்தையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வர். துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால், துன்பம் பாதியாகக் குறையும், இன்பத்தைப் பகிர்ந்து இன்பம் இருமடங்காகப் பெருகும் என்பர். அதனால் குடும்ப உறுப்பினர்களின் மனஅமைதிக்கும், உரையாடல்களுக்கும் முக்கியப் பங்கு உண்டு. அதிலும் நகைச்சுவை உரையாடல்கள் குடும்ப உறுப்பினர்களின் மனஅமைதிக்குச் சிறந்த மருந்தாகும். சிலநேரங்களில் குடும்பத்தில் யாரேனும் ஒருவர் கோபமாகப் பேசினால், மற்றவர்கள் பொறுமையும் அன்பும் கொண்டு அவரது கோபத்தைத் தணிக்க வேண்டும். "ஒருவர் பொறை, இருவர் நட்பு" என்பது நண்பர்களுக்கு மட்டுமல்ல, குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

## சமூகத்தின் அடித்தளத்தை நிலை நிறுத்த உதவும் குடும்ப மதிப்புகள்

ஒரு குடும்பத்தில் குழந்தைகளும், இளைஞர்களும், முதியோரும் இருப்பர். இவர்களுள் குழந்தைகள் முன்பு மற்றவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அது குழந்தைகளிடம் பிரதிபலிக்கும். குழந்தைகள் மாசுமறுவற்ற வெள்ளை



உள்ளம் படைத்தவர்கள். அவர்களுக்குப் பொய், புரட்டு, ஏமாற்று, சூது, சூழ்ச்சி போன்ற கெட்ட குணங்கள் எதுவும் தெரியாது. எனவே அக்குழந்தைகளிடம் நல்லவற்றையே பேசிப் பழக வேண்டும். முதியவர்கள் அனுபவம் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்கள் மற்றவர்களுக்குப் புத்திமதி கூறுவதில் அதிக ஆர்வம் காட்டுவர். ஆனால் இன்றைய இளைஞர்களுக்கு மற்றவர்கள் அறிவுரை கூறினால் அது கொஞ்சமும் பிடிக்காது. மாறாகத் தமக்கு எல்லாம் தெரியும் என்ற மனோபாவம் காணப்படும். ஒரு வகையில் இளைஞர்களே குடும்ப மதிப்புகளைப் புறக்கணிப்பவர்கள் ஆவர். மிகவும் செல்லம் கொடுத்து வளர்க்கப்படுவதும் இளைஞர்கள் கெட்டுப்போக ஒரு காரணமாகும்.

தனிமனிதன் நல்லொழுக்கம் மேற்கொண்டால், அவனைச் சார்ந்த குடும்பமும் நல்லொழுக்கத்துடன் திகழ வாய்ப்புகள் உண்டு. குடும்பங்கள் நன்னெறியுடன் நடந்தால், அது நல்ல சமூகத்தை உருவாக்கத் துணை நிற்கும்.

“அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி”
என்பது அந்நாளைப் பழமொழி

“எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே” என்கிறார் ஔவையார்.

“தனி ஒரு மனிதன் திருந்திவிட்டால்
சிறைச் சாலைகள் தேவை இல்லை” என்பர்.

“எங்கெல்லாம் புத்தகச் சாலை திறக்கப்படுகிறதோ, அங்கு சிறைச்சாலை மூடப்படுகிறது” என்கிறார் விக்டர் ஹ்யூகோ. கட்டடம் ஒன்று சிறப்பாக உயர்வதற்கு அதன் அஸ்திவாரம் எனப்படும் அடித்தளமே காரணம். அடித்தளம் எந்த அளவுக்கு ஆழமாகவும், வலுவாகவும் அமைகிறதோ அந்தளவுக்குக் கட்டடம் உயர்ந்தோங்கி நிற்கும்.

“வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு”

என்கிறார் திருவள்ளுவர். அதே போல், குடும்ப மதிப்புகளே சமூகத்தின் அடித்தளத்தை நிலை நிறுத்த உதவும். பல குடும்பங்கள் ஒன்றிணைந்ததே சமூகம் ஆகும். சமூகம் என்ற சொல்லுக்குச் சமுதாயம், மன்பதை, மக்கள் தொகுதி என்றுவேறு பல பெயர்கள் உண்டு. சமுதாயம் என்பதைக் குமுகாயம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்.

வாழ்வில் ஏற்ற, இறக்கங்கள் உண்டு. அதாவது உயர்வும் தாழ்வும் மாறி மாறி வரும். உயர்வு வரும் போது ஆடக் கூடாது. வறுமை வரும் போது வாடக் கூடாது.

“கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே – சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்” என்பர்.

இன்பத்தையும், துன்பத்தையும் சரிசமமாகக் கருதும் மனோபாவமே குடும்ப மதிப்புகளில் சிறந்ததாகும்.

“நீ ஏறுகிறாய் என்றால், இறைவன்
உன்னை ஏற்றி விடுகிறான் என்று பொருள்,

நீ இறங்குகிறாய் என்றால், இறைவன்

உன்னைச் சோதிக்கிறான் என்று பொருள்” என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

மதுரை மாநகரில் முடிதிருத்தும் தொழிலாளி மோகன் என்பவர் தன் மகள் நேத்ராவுக்காகச் சேமித்து வைத்திருந்த ரூபாய் ஐந்து லட்சம் முழுவதையும் கொரோனா நோய்த் தொற்று காலத்தில் ஏழை மக்களின் பசியைப் போக்க தானம் வழங்கினார். இதனைக் கேள்விப்பட்ட பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்கள் நேத்ராவையும், அவரது தந்தையையும் ‘மனதின் குரல்’ என்னும் வானொலி நிகழ்ச்சியில் வெகுவாகப் பாராட்டினார். பின்னர் அவர்களுக்கு ஊக்கத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கினார். இதனால் தெரிவது என்னவென்றால், ஒரு குடும்பம் காலத்தினால் செய்த உதவி, ஞாலத்தின் மானப் பெரிதாக மதிக்கப்பட்டு சமூகத்தில் அவர்களை மிகவும் மதிக்கத்தக்கவர்களாக மாற்றியுள்ளது.

வாய்மை அல்லது பொய் பேசாமை, நல்லொழுக்கம், அமைதி, பாசம், அகிம்சை போன்ற நற்குணங்கள் குடும்பத்தில் பின்பற்றப்பட்டால், அக்குடும்பம் சமூக உயர்வுக்கு அடித்தளமாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## குடும்ப மதிப்புகளின் பங்கு

### குடும்ப மதிப்புகளிலிருந்து உருவான பல்வேறு மதிப்புகள்




குடும்ப மதிப்பிலிருந்து பிரிந்த மதிப்புகளில் தனிமனித மதிப்புகளும், கூட்டு மதிப்புகளும் முக்கிய மதிப்புகளாகக் கருதப்படுகின்றன. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு தனிநபரும் மதிப்பிற்கு உரியவர்கள் தான். அதனால் தான்

“எல்லோரும் இந்நாட்டு மன்னர்
எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் நிறை”என்றார் மகாகவி பாரதியார்.

தனிமனித மதிப்புகள், சமூக மதிப்புகள் போல்வன குடும்ப மதிப்புகளிலிருந்தே உருவாகின்றன. தனிமனிதன் என்பவன் இந்நாட்டின் சிறந்த குடிமகன் ஆவான். அவன் குடும்பத்தாலும், சமூகத்தாலும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளான்.

**தனிமனித மதிப்புகள்**



எண்ணம், தைரியம், எளிமை, திறமை, தன்னறிவு, நேர்மை, மனப்பக்குவம், தன்னம்பிக்கை, மதிப்பீடு, ஒழுக்கம் உடைமை என்பன எல்லாம் தனிமனித மதிப்புகள் ஆகும். எடுத்துக்காட்டாக சுவாமி விவேகானந்தர், அப்துல்கலாம், அன்னை தெரசா போன்றோர் எல்லாம் தனிமனித மதிப்புகளுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் ஆவர். இவர்கள் தத்தம் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த போதிலும் திருமண வாழ்வைத் துறந்து தியாக வாழ்வை மேற்கொண்டு நாட்டுக்கும் உலகுக்கும் பெருமை சேர்ந்தவர்கள் ஆவர்.

"உனக்குள்ளே எல்லா விதமான ஆற்றல்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அவற்றை வெளிக் கொணர். எழுமின், விழிமின், இலட்சியத்தை அடையும் வரை ஓயாதே!" என்கிறார் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர். சாதாரண நரேந்திரனாக இருந்தவர்தான் தன்னை உணர்ந்து விவேகானந்தர் என்னும் ஞானியாக உயர்ந்தார். ஏவுகணை நாயகன், மனிதரில் புனிதர் எனப் போற்றப்படும் அப்துல்கலாம் அவர்கள் இராமேஸ்வரத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் மேற்கொண்டு இந்தியாவின் சிறந்த குடியரசுத் தலைவராக உயர்ந்தார். எளிமையான வாழ்வாலும் அன்பினாலும் அனைவர் உள்ளங்களையும் வென்றார்.

அன்னை தெரசா என்பவரின் இயற்பெயர் ஆக்னஸ். துறவு வாழ்க்கை மேற்கொண்டு கொல்கத்தாவில் லாரட்டோ என்னும் கன்னி மாடத்தில் எளிய வாழ்வு வாழ்ந்த இவர் மிகுந்த சேவை, அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு தொழுநோயாளிகளுக்கு மருந்திட்டுக் குணப்படுத்தினார். அவர்களுக்காக நிதி திரட்டும் போது ஒருவன் அன்னையின் கையில் காறி உமிழ்ந்தான். மிகவும்

பொறுமையோடு அன்பு மாறாமல், மகனே! இது எனக்கு இருக்கட்டும். நோயாளிகளுக்கு நிதி தா! என்று கேட்டார். பொறுமையின் சிகரமான தெரசா, சமூகத்தில் இன்று மக்கள் மனதில் உயர்ந்த கோபுரமாகத் திகழ்கிறார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்" என்றார் மகாகவி பாரதியார்.

நம் எண்ணங்கள் உயர்வானவையாக இருந்தால், நம் செயல்களம் உயர்வானவையாக இருக்கும். இராமலிங்க வள்ளலார், அண்ணல் காந்தியடிகள் போன்றோர் நல்ல எண்ணங்களால் உயர்வு நிலைக்கு உயர்ந்தோர் ஆவர். எண்ணத்தைப் போன்றே தனிமனித மதிப்புகளில் முக்கியமானது தைரியம் எனப்படும் துணிச்சல் ஆகும்.

'துணிவே துணை' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் எழுத்தாளர் தமிழ்வாணன். "அச்சம் தவிர்" என்பது பாரதியாரின் புதிய ஆத்திசூடி. எனவே அச்சமின்றி வாழ்வதே மன அமைதிக்கு அடிப்படை. "எங்கே பயமில்லையோ அம் மனதில் தான் நல்ல எண்ணங்கள் தோன்றும்" என்கிறார் நோபல் பரிசு பெற்ற கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்.

மேலும்,"எளிமையே வாழும் தேவதை" என்றும் கூறுகிறார். காந்தியடிகள் காமராஜர், கக்கன், ஜீவா போன்றோர் மிகமிக எளிமையாக வாழ்ந்து புகழ் பெற்றோர் ஆவர். அதே போல் நேர்மை மிக முக்கியமானதொரு நற்பண்பு ஆகும். நேர்மையாளன் ஒருவன் தன் மனசாட்சிக்கு மட்டும் பயந்தால் போதும், வேறு யாருக்கும் அஞ்சி வாழத் தேவையில்லை. மற்றொரு நற்பண்பு தன்னம்பிக்கை. "யானையின் பலம் தும்பிக்கையில் மனிதனின் பலம் நம்பிக்கையில்" என்பர். அதுவும் தன்னை நம்பும் தன்னம்பிக்கை மனித முன்னேற்றத்துக்கு மிகவும் அடிப்படையானதொரு பண்பாகும்.

"உன்னால் முடியும் தம்பி – உனக்குள்
இருக்கும் உன்னை நம்பி" என்கிறார் புலமைப்பித்தன்.
"உன்னையே நீ எண்ணிப்பார்"
என்பது கிரேக்க மாமேதை சாக்ரடீசின் வாக்கு.

"உன்னையே நீ நம்பு" என்பது மக்கள் சக்தி இயக்கத் தலைவர் மறைந்த எம்.எஸ். உதயமூர்த்தியின் வாக்கு.

இவை அனைத்தும் தனி ஒருவரிடம் இருந்தாலும் ஒழுக்கம் இல்லாவிடில், அவை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாய்ப் போய் விடும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவர் வாக்கு. மனப்பக்குவம் என்னும் நற்பண்பும் தனிமனித மதிப்புளில் சிறப்பிடம் பெறுகிறது. மனம் ஒரு அற்புதமான ஆற்றலுக்கான உந்து சக்தியாகும். மனம் அது செம்மையானால், ஒருவன் எதனையும் சாதித்துக் காட்டிவிட முடியும்.

"புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்" என்றெல்லாம் சொன்ன வள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" என்கிறார். ஒருவனது மனமே அவனது அத்துணைச் செயல்களுக்கும் மூலக் காரணம் என்கிறார் உளப்பகுப்பாய்வாளரும் நவீன உளவியலின் தந்தையுமான சிக்மண்ட் ஃபிராய்டு . அதனால் தான் மகாகவி பாரதியார். "மனதில் உறுதி வேண்டும்" என்றார்.

"மனசே, நீ ஒரு மந்திரச் சாவி" என்கிறார் சுகி சிவம். மனதைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினம். அதனால் தான் மனதை குரங்குகோடு ஒப்பிடுகிறார்கள். அது ஒரு நிலையில் நிற்பது இல்லை. மனதில் நல்ல சிந்தனைகளும் கெட்ட சிந்தனைகளும் கலந்தே இருக்கும். நல்ல சிந்தனைகளைத் தெய்வம் என்றும் கெட்ட சிந்தனைகளை மிருகம் என்றும் ஃபிராய்டு கூறுகிறார்.

"பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக் கொண்டதடா
மீதி மனதில் மிருகம் இருந்து ஆட்டி வைத்ததடா"

என்று கவிஞர் கண்ணதாசனும்

"கடவுள் பாதி மிருகம் பாதி
கலந்து செய்த கலவை நான்
உள்ளே கடவுள் வெளியே மிருகம்

விளங்க முடியாக் கவிதை நான்”

என்று கவிஞர் வைரமுத்துவும் குறிப்பிடுகின்றனர். மனதைத் துலாம்பாரமாகத் துலங்கச் செய்தவர்கள்தாம் இயேசு கிறஸ்து, நபிகள் நாயகம் மற்றும் இராமகிருஷ்ணபரமஹம்சர் போன்றோர்.மனதில் மறைந்துள்ள மிருகக் குணத்தை வெளிப்படுத்தியவர்கள் தாம் பயங்கரக் குற்றவாளிகளாகச் சிறைச் சாலையில் தண்டனை பெறுகிறார்கள்.

“ஒரு கணம் தவறாகிப் பல யுகம் துடிப்பாயே!” என்கிறார் கண்ணதாசன். கொடும் பாதகச் செயல் செய்வோர் கணப் பொழுதில் தவறிழைத்து விட்டுப்பின் காலங்காலமாய் வருந்தும் நிலைக்கு ஆளாகிறார்கள். அதனால் தான் “ஆறுவது சினம்” என்றார் ஔவை. சினத்தை அடக்குவதே சிறந்த குணமாகும்.

“சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி”என்கிறார் திருவள்ளுவர்.

கொடுஞ்சினம் எவரிடம் இருக்கிறதோ, அது அவரையே அழித்து விடும் வல்லமை உடையது.

“தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்” என்பதும் வள்ளுவர் வாக்கே.

**கூட்டு மதிப்புகள்**



அன்பு, அமைதி, நேர்மை, சேவை மனப்பான்மை, விட்டுக் கொடுத்தல், பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை, குழுவாகச் செயல்படும் தன்மை, சகோதரத்துவம், பொறுமை, விருந்தோம்பல், நீதி, கடமையுணர்வு போல்வன சமூகமதிப்புகளாகும்.

அன்பு ஒன்றே உயிர்களைக் காக்க வல்ல அருமருந்தாகும்.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு”

என்பது திருக்குறள். அன்பே கொல்லாமை என்னும் தத்துவத்தின் அடிப்படையாகும். ஆசிய ஜோதி எனப்படும். புத்தர், அன்பால் தான் இவ்வுலகையே வென்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்" என்கிறார் திருமூலர்.

அன்பே பாசம், நேசம், காதல், பக்தி என்னும் வெவ்வேறு தன்மைகளில் மனிதர்களிடம் வெளிப்படுகிறது. ஒரே மின்சாரம், மின் விசிறியாகச் சுழலவும், ஒளி விளக்காகப் பிரகாசிக்கவும், இயக்கும் மின் மோட்டாராகவும் மாறிமாறிச் செயலாற்றுதல் போன்றது தான் அன்பின் வெளிப்பாடும் அமைதி, அகிம்சை, விட்டுக் கொடுத்தல் பொறுமை போன்றவற்றால் ஏற்படுவதாகும். குழம்பிய மனம், சலனத்துடன் விளங்கும். ஆனால் தெளிந்த மனம் சலனமின்றி, ஆழ்கடலின் அமைதியுடன் விளங்கும். உணர்ச்சிக் கொந்தளிப்பு அமைதியைக் குலைத்து விடும். அமைதி, சாந்தகுணம் கொண்டோரிடம் குடியிருக்கும். நேர்மை பற்றித் தனிமனித மதிப்புகளில் பார்த்தோம். அது சமூக மதிப்பிலும் உண்டு.

## சேவை மனப்பான்மை




அடுத்தது சேவை மனப்பான்மை. நாட்டு நலப்பணித் திட்டம், செஞ்சிலுவைச் சங்கம், கருணை இல்லம் போன்ற அமைப்புகளில் சேவை மனப்பான்மை உடையோர் செயல் பட்டுத் தம்மால் இயன்ற உதவிகளைத் தன்னலமின்றிச் செய்து வருகிறார்கள். அத்தகையோரால் தான் உலகம் இன்னும் அழியாமல் உள்ளது. சுனாமி எனப்படும் ஆழிப் பேரலை, நிலநடுக்கம், பெரு வெள்ளம், புயல், கொரோனா காலத்துப் பேரிடர் போன்றவை நேரிடும் போது சேவை மனப்பான்மை உடையோர் உயிர்காக்கும் பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டு நலனே நமது நலன் என்று உழைக்கிறார்கள். உலகம் நிலைக்க இவர்களே காரணம்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" என்கிறார் திருவள்ளுவர்.

சென்னையில் உள்ள அன்புப் பாலம் என்னும் அமைப்பில் உள்ள திரு. கல்யாண சுந்தரம் என்பவர் ஸ்ரீவைகுண்டம் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஒரு நூலகர். இவர் தனது வருமானத்தில் குறிப்பிட்ட ஊதியத்தை ஏழை மாணவர்களுக்கு கொடுத்து செய்து தியாகத் தீபமாக வாழ்ந்து வருகிறார். திருமணமே செய்யாமல் மெழுகுவர்த்தியாய்த் தன்னைக் கரைத்துக் கொள்ளும் இவரைப் போன்றோரின் சேவை அளப்பரியது.

**விட்டுக் கொடுத்தல்**

"விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை" என்பது முதுமொழி. தன் அண்ணனுக்காக நாட்டையே விட்டுக் கொடுத்த இளங்கோவடிகள், தாய் சொல்லுக்காக நாட்டை விட்டு வெளியேறி 14 ஆண்டுகள் வனவாசம் இருந்த இராமபிரான் போன்றோர் விட்டுக் கொடுத்ததால், வானளவு புகழ் பெற்றுள்ளனர். இத்தகையோரிடம் தலைமைப் பண்பு காணப்படும். அது அவர்களது ஆளுமையை மேம்படுத்தும்.

மற்றொரு சமூக மதிப்புப் பண்பு குழு மனப்பான்மை. ஒற்றுமையே வலிமை என்பதை வீட்டிலிருந்து செயல்படுத்தத் தொடங்கி, பின் கல்வி நிலையங்களிலும் இதனைப் பின்பற்றுவோர் நற்குணமுடையோர் ஆவர்.

**பகிர்ந்தளித்தல்**



பகிர்ந்து கொடுத்தல் அல்லது பகிர்ந்து உண்ணுதல் என்னும் நற்பண்பும் சமூக மதிப்பில் மிகச் சிறந்த ஒன்றாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்பது திருவள்ளுவரின் தெய்வ வாக்கு. வீட்டில் உள்ளோரிடம் இப்பண்பு மிகவும் அவசியமானதாகும்."வீடு எப்படியோ அப்படித்தான் நாடும் இருக்கும்" என்கிறார் அறிஞர் அண்ணா.

வீட்டிலிருந்து தொடங்கும் பகிர்ந்து கொடுக்கும் பண்புதான், நாட்டில் சேவை மனப்பான்மைக்கு அடிப்படையாகும். எழுத்தாளர் ஜெயகாந்தனின்

‘உன்னைப்போல் ஒருவன்’ நாவலில் இடம் பெற்றுள்ள தொண்டர் துரைக்கண்ணு பாத்திரம், ஆதரவற்ற சிறுவர்களுக்கெல்லாம் கல்வி தந்து பொருள் உதவி தந்து மனிதாபிமானத்துடன் சேவை புரிபவராக விளங்குகிறார். தன்னலம் கருதாத இவர்களிடம் காணப்படுவது பரநலம் ஆகும்.

## சகோதரத்துவம்

சகோதரத்துவம் என்னும் பண்பும் சமூக மதிப்புகளில் இன்றியமையாத ஒன்றாகும்.

“குகனோடு ஐவரானோம் குன்று சூழ்வான்
மகனோடு அறுவரானோம்”

என்று கம்பராமாயணம் காட்டும் இராமனிடம் காணப்படுவது உலக சகோதரத்துவம் ஆகும்.

## பொறுமை




பொறுமை என்னும் பண்பு சிறந்த நற்பண்புகளில் ஒன்றாகும். பெண்கள் பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை சேர்க்க வேண்டும் என்பர். பொறுமை, சான்றோர்களிடம் காணப்படும் நற்பண்பாகும்.

“பொறுத்தார் பூமி ஆள்வார்”என்பது முதுமொழி ஆகும்.

## விருந்தோம்பல்



விருந்தோம்பல் என்னும் நற்பண்பு தனிமனித மதிப்பிலும் சமூக மதிப்பிலும் இடம் பெற்றுள்ள ஒன்றாகும். விருந்து என்பதற்கு புதியது என்று பொருள் என்கிறார் தொல்காப்பியர். வீட்டிற்குப் புதிதாக வரும் விருந்தினர்களை அன்புடன் உபசரிக்க வேண்டும்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி, தன்னால் விருந்தினர்களை உபசரிக்க முடியாத நிலை ஏற்பட்டதற்கு மிகவும் வருந்துகிறாள்.

“அறவோர்க்களித்தலும் அந்தணர் ஒம்பலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை” (சிலப்பதிகாரம்)

இதே போல் அசோகவனத்துச் சீதை, காட்டில் இராமபிரான் எப்படி விருந்தினர்களை உபசரிப்பார் என்று கவலைப்படுகிறாள்.

“அருந்தும் மெல்லடகு ஆரிடம் அருந்தும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்”

என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பர் வாக்கு.

தமிழர்களின் தனிப்பெரும் பண்புகளுள்
தலைசிறந்தது விருந்தோம்பல் ஆகும்.

நீதி, கடமை உணர்வு என்னும் சமூக மதிப்புப் பண்புகள் காவல் துறைக்கும் நீதித் துறைக்கும் உரியவை என்று நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால், உண்மையில் இப்பண்புகள் மனித சமுதாயத்தினர் அனைவருக்கும் உரியவையே. நீதி என்னும் சொல்லுக்கு அறம் என்று பெயர். தமிழில் பதினெண்கீழ்க்கணக்கு “நூல்கள் நீதி நூல்களே. அதே போல் கடமை என்பதற்குக் கடன் என்னும் சொல்லைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

“ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
ஒளிருவாள் அருஞ்சமம் உருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”

என்று புறநானூற்றில் பொன்முடியார். என்னும் புலவர் பல்வேறு கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**ஆரோக்கிய உறவு முறை**

“படிப்பில் போட்டி இருக்கலாம், ஆனால் பொறாமை இருக்கக் கூடாது” என்பர்.

இது கல்வி நிலையத்திற்கு மட்டுமல்ல, குடும்பச் சூழலுக்கும் பொருந்தும்.

கணவன் - மனைவி உறவு,
தந்தை – மகன், தந்தை – மகள்,
அண்ணன் - தம்பி, அக்கா – தங்கை

சகோதரன் - சகோதரி உறவுகள் யாவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க வேண்டுமானால், அவர்களுக்குள் பொறாமை கூடாது. பொறாமை என்பதற்குப் பழந்தமிழில் அழுக்காறு என்று பெயர்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்கிறார் வள்ளுவர். பொறுமை உடையோரிடத்தில் பொறாமை என்னும் அழுக்காறு தோன்றாது அத்தகையோரிடம் தான் பாசம் என்னும் மனிதப் பண்பு காணப்படும்.

**அன்பு மற்றும் உள்ளார்ந்த உணர்ச்சிகள்**

மனதில் தோன்றுவது உணர்வு. மனதிலும் உடலிலும் தோன்றுவது உணர்ச்சி. இதனைத் தொல்காப்பியர், மெய்ப்பாடு என்கிறார் மெய்ப்பாடுகள் மொத்தம் எட்டு என்று அவர் குறிப்பிடுகிறார்.

"நகையெ அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை" (தொல்காப்பியம்)


உணர்ச்சி வசப்படுபவனே மனிதன். ஆனால், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவனே மாமனிதன் ஆவான். இவற்றுள் நல்ல உணர்ச்சிகளையே மனிதன் வெளிக் கொணர வேண்டும். குணமும் குற்றமும் நிறைந்த மனிதன் இவற்றுள் எது அதிகமாகக் கொண்டுள்ளானோ அவ்வாறே அறியப்படுகிறான்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்ககொளல்" என்கிறார் வள்ளுவர்.

எனவே நல்ல உணர்ச்சிகளை அன்புடன் வெளிக்காட்டுகையில் மனித மதிப்பு மேம்பட்டுத் திகழும். அன்பை அடைத்து வைக்க இயலாது. அது கண்ணில்

தோன்றும் சிறுதுளிக் கண்ணீர் மூலம் வெளிப்பட்டு விடும். அந்த அன்பு தான் உலகின் இன்ப ஊற்று என்கிறார் கௌதமபுத்தர்.


## சமூக மதிப்புகள்



எரியும் விளக்காக இரு அப்பொழுது தான் மற்ற விளக்குகளை ஏற்றி வைக்க முடியும் **- ரவீந்திரநாத் தாகூர்**

மனிதர்கள் யாவரும் கடவுளின் படைப்பே.அவர்கள் ஒவ்வொருவரும் தனித்திறமைகளோடு படைக்கப்பட்டிருக்கிறார்கள். திறமைகளைக் கண்டுணர்ந்து அதனை மேம்படுத்திக் கொள்வது மனிதனின் வெற்றிக்கு அடித்தளமாகின்றன. சான்றோர்கள் எண்ணங்கள் வளமானால் வாழ்க்கை ஒளிமயமாகும் என்பர். நேர்மறை எண்ணங்களும், செயல்களும் மனிதனின் மனதிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, எடுத்தக் காரியங்களில் வெற்றி பெறுவதற்குரிய பாதைகளை வகுத்துக் கொடுக்கின்றன. நேர்மறை சிந்தனைகளும், திறமைகளும், செயல்களும் ஒருங்கே அமையப் பெற்ற மனிதன் உயர்ந்தவனாக - உன்னதமானவனாக - சிறந்தவனாகச் சமுதாயத்தால் அடையாளப்படுத்தப்படுகின்றான். இதனை உணர்ந்து மனிதன் மனிதனாக வாழ்தலே சிறப்பு என நமது முன்னோர்களும், சான்றோர்களும், அறிஞர்களும், வரலாற்றுச் சாதனையாளர்களும் வாழ்ந்து காட்டி, தடம் பதித்துச் சென்றுள்ளனர். அதனை அடியொற்றி, சமூக மதிப்புகளைக் குறித்து விரிவாகக் காண்போம்.

### அறிமுகம்




ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஒரே மொழி, இனம், அரசியல், அதிகாரம், பழக்கவழக்கம், பண்பாடு மற்றும் கலாச்சார வாழ்வியல்களைக் கொண்டு வாழும் மக்கள்

ஒரு குழுவாய் இருத்தலைச் சமூகம் எனலாம். இறைவனின் படைப்பில் ஏனைய உயிரினங்களை விட மனித இனமே மேன்மையானதாக உள்ளது. அதனை நன்கு உணர்ந்தே ஔவைப்பிராட்டி "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறியுள்ளார். 'பகுத்தறிவு' என்னும் ஆறாவது அறிவோடு, மனிதன் வாழும் நெறிமுறைகளும் மேன்மைக்குக் காரணமாகின்றன. மனிதனின் வாழ்வியல் முறை என்பது தனிமனிதன் தொடர்புடையது அன்று. அவனது குடும்பம், சமுதாயம், அரசு என்பனவற்றை அடித்தளமாய்க் கொண்டு வேரூன்றி, இலை விட்டு, விழுது விட்டுப் பன்னெடுங் காலங்கள் கடந்த பழக்கவழக்கங்களின் பரிணாம வளர்ச்சியின் படிநிலை மாற்றங்களைத் தன்னுள் கொண்டு விளங்குவது ஆகும். அந்த வாழ்வியல் முறைகள் யாவும் தோன்றிய காலந்தொட்டே 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதற்கு ஏற்ப, பல்வேறு புதிய புதிய மாற்றங்களைக் கண்ட வண்ணமே உள்ளன.

மனிதன் தான் வாழும் சமுதாயத்தில் மாற்றங்களை முன்னெடுக்கும் பொழுது, அவனது செயற்பாடுகள் அவனுக்கும், அவன் சார்ந்துள்ள சூழலுக்கும் நன்மை பயப்பதாக அமைந்தால் நன்மதிப்புகளாகச் சமுதாயத்தால் கணிக்கப்பட்டு நேர்முறை மதிப்புகளாகின்றன; அவ்வாறு அமையாமல் அம்மனிதனின் செயல்கள் தீமை பயக்குமெனில் எதிர்மறை மதிப்புகளாகக் கணிக்கப்படுகின்றன. இவ்வாறு மதிப்புகள் மனிதன் செய்யும் செயல்களின் தன்மைகளால் சமுதாயத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதனைச் சேதுமணிமணியன் "மனிதத்தின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவுவன அனைத்தும் நேர்மதிப்புகள் என்றும், அல்லாதவை அனைத்தும் எதிர்மதிப்புகள் என்றும் நேர்மதிப்பினை மறுக்கும் எதுவும் எதிர்மதிப்பாகிறது" எனவும், தி.சு.நடராசன், "காதல், கற்பு, தாய்மை, பாசம், புகழ், பக்தி,கொடைபோன்றவை உடன்பாட்டு மதிப்புகள்.பொய்மை, தீமை, பாவம், குடிப்பழக்கம், லஞ்சம், பித்தலாட்டம் போன்றவை எதிர்மறை மதிப்புகள்" எனவும் சுட்டுகின்றனர்.மேலும், இந்திரா பார்த்தசாரதி, "ஒவ்வொரு காலத்திற்குரிய வாழ்க்கையைப் பற்றிய மதிப்புகள் அக்காலத்திய சமுதாயம் லட்சியப் பிரக்ஞை ஆகியவற்றை ஒட்டி அமைகின்றன" என்றும் குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட கருத்துகள் வழி, சமூக மதிப்புகள் என்பவை சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதாகவும், வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் உற்ற துணையாகவும் அமைதல் வேண்டும் என்பதையும் உணர முடிகின்றது.

## சமூக மதிப்புகளின் செயல்பாடுகள்

சமூகத்தின் தேவைகளை உற்று நோக்கி, அதன் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மனித வளத்தை நெறிப் படுத்துவதே சமூக மதிப்புகளின் செயல்பாடுகள் ஆகும்.

உலகம் முழுவதும் தேடினாலும் முழுமையான நிறைகளை மட்டுமே கொண்ட மனிதர்களைக் காண்பது அரிது. ஒவ்வொரு மனிதரிடத்திலும் உள்ள தனித்திறன்கள், குணங்களால் மனித வளத்தினை மேம்படுத்திட செய்ய வேண்டிய செயற்பாடுகளைச் சமூக மதிப்புகள் மேற்கொள்ளல் வேண்டும்.அது மனித உறவுகள் மேம்படவும், தனி மனித வளர்ச்சி மேம்படவும் பேருதவியாக இருக்கும். அதோடு, உலகை அமைதிப் பூங்காவாக உருவாக்கி, ஊக்கம் தரும் உன்னத சிந்தனைகளால் உரமிட்டு, ஒற்றுமை என்னும் ஆற்றலால் இளைஞர்களை ஒருங்கிணைத்து வளமை என்னும் ஒளி மிகுந்த வாழ்வு வாழ்வதற்கு மனிதர்களை நெறிப்படுத்த வேண்டியது சமூக மதிப்புகளின் செயற்பாடாகும்.

## நேர்மதிப்புகளும் ஆளுமையும்



சமூகத்தால் கணிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டிருக்கும் நேர்மதிப்புகள், எதிர்மதிப்புகள் என்ற இருவகை மதிப்புகளும் சமுதாயத்தின் கட்டமைப்பிற்கும் இன்றியமையாததாக விளங்குகின்றன. அகிம்சை, சகிப்புத் தன்மை, பொறையுடைமை, கூடி வாழும் உணர்வு, நீதியை நிலை நாட்டல், சகோதரத்துவம், சமத்துவம், வாய்மை, தாராள குணம், தேசபக்தி, இறைபக்தி போன்ற நேர்மதிப்புகள் சார்ந்த உணர்வுகளின் ஆதிக்கம் வாய்க்கப் பெற்றவர்கள் வாழ்க்கையில் முன்னேறி, சிறந்து விளங்கி வரலாற்றில் தடங்களைப் பதித்துள்ளனர் என்பதை எள்ளளவும் எவரும் மறப்பதற்கில்லை. இவ்வுணர்வுகளை அன்றாட வாழ்க்கையில் இயல்பான உணர்வுகளாகப் பெறுவதற்கு பெற்றோரும், குடும்பமும், சமுதாயமும் சூழல்களை உருவாக்கிக் கொடுத்து ஒரு குழந்தையை வளர்த்தெடுப்பார்களேயானால் உறுதியாக

அக்குழந்தை சமுதாயத்தில் சிறந்த குடிமகனாக விளங்கும். இதனைப் புலமைப்பித்தன் 'நீதிக்கு தலை வணங்கு' என்ற திரை இசைப்பாடலில்,

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்

மண்ணில் பிறக்கையிலே

பின் நல்லவராவதும் தீயவராவதும்

அன்னை வளர்ப்பதிலே......"

என்கிறார். பெற்றோர்கள் அன்பு, காதல், கற்பு, மனித நேயம், தனிமனித ஒழுக்கம் என்பனவற்றைப் பண்பாட்டோடுக் கற்பித்து நற்பண்புகள் நிறைந்த பிள்ளைகளாய் குழந்தைகளை வளர்த்தெடுப்பதைத் தலையாயக் கடமையாகக் கருத வேண்டும். இதற்கு பேரா இரா.காஞ்சனா, எரிக்.எரிக்சன் சுட்டிய தன்முனைப்புக் கோட்பாடு (Erik H. Erikson – Ego Theory) குறித்துச் சுட்டும் பொழுது, "மனித ஆளுமை உருவாவதில் சமூகக் காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன என வலியுறுத்திக் கூறியவர் இவர். இவர் "குழந்தைப் பருவமும் சமூகமும்" (Childhood and Society 1963) என்ற தன் நூலில் "குழந்தைப்பருவம் முதல் வளர்ந்து முழுமனிதன் ஆகும் வரையிலான வளர்ச்சிப் படிகளில் உடல் வளர்ச்சியுடன் ஆளுமை வளர்ச்சியும் ஏற்படுகிறது. இவ்வளர்ச்சி மாற்றங்களுக்கு உயிரியல் காரணிகளுடன் சமூகக் காரணிகளும் அடிப்படையாகின்றன" என்கிறார்.

சகமனிதர்களாலும் சமூகப் பண்பாட்டு நிறுவனங்களாலும் தன் வாழ்க்கை விரிவடைய, விரிவடைய வளர்ந்து கொண்டே வரும் தனி மனிதன், அவ்விரிவிற்கு ஏற்ப தன்னை ஆயப்படுத்திக் கொள்ளும் வல்லமையை இயல்பாகவே பெற்றுள்ளான். மறுபுறம் இப்பல்வேறு நிறுவனங்களும் மனிதர்களும் அவனை வளர்ந்து வரும் தம் பண்பாட்டுச் சூழலுக்குள் கொணர்ந்து விட முயலுகின்றன என்கிறார் எரிக்சன் (Life history & historical moment) என்றுகூறுவது இவண் ஒப்பு நோக்குதற்குரியது.

## சமூக மதிப்புகளின் கொள்கைகள் மற்றும் பயன்கள்

சமூகத்தில் சார்ந்து வாழும் வாழ்க்கை வாழ்கின்ற மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளாக அன்பு, காதல், நேசம், பாசம், உறவு, நட்பு என்பன விளங்கிடுவதை இளைஞர்கள் புரிந்து மனிதனை மனிதன் ஆக்கப்பூர்வமாக

அரவணைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் சமூகத்தில் நேர் மதிப்புகள் சார்ந்த செயல்கள் கோலோச்சுவதைக் கண்கூடாகக் காண முடியும்.

குழந்தைகள் – மாணவர்கள் - இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் போட்டிகள் நிறைந்த சூழலில் சிகரங்களையும் நிதானமாகக் கடந்து விடுவதற்கு அமைதியான சுபாவமும், அழுத்தமான நம்பிக்கையும், ஆழமான உலகியல் பார்வையும், சுயத்தின் தன்னிறைவும், வலிமையான எண்ணங்களும், பகுத்தறிவுத் திறமைகளும், இலக்கு நோக்கி ஆற்றல்களை ஒருங்கிணைக்கும் பாங்கும், தன்னலம் கருதாத சேவை மனப்பான்மையும் தடைகளை உடைத்தெறிந்து பாதைகளை வகுத்துக் கொடுக்கும். மேலும் மனதினில் தெளிவினை உண்டாக்கி, அறிவாயுதத்தை வளர்த்தெடுக்கும்; விவேகத்தோடு வெற்றியை ஈட்டித் தரும்.

மனிதனின் சிந்தனைகளால் உருப்பெறும் அறிவாயுதம் மனித குல மேம்பாட்டிற்காக மட்டுமே உதவிட வேண்டும் என்பதிலும் மாணவர்களும் இளைஞர்களும் நாட்டின் வருங்காலத் தூண்களாக விளங்குவர் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டு விளங்கினார் பாரத்தின் முன்னாள்குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம். அதனால் தான் ‘இளைஞர்களே கனவு காணுங்கள்.உங்கள் கனவுகள் உயர்ந்தவைகளாகவும் நல்லவைகளாகவும் இருக்கட்டும்.உங்களையும் இந்த நாட்டையும் முன்னேற்றுவதாக இருக்கட்டும்’ என்றார்.இது மனிதன் தனி மனிதச் சிந்தனை கொள்ளாமல் சமூகச் சிந்தனையோடு வாழ்வதற்கு வழிகாட்டுவதாய் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. இதன் வழி, வள்ளுவப் பெருந்தகையாரின் கூற்றான ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்பதையும் ‘அறிவற்றங் காக்கும் கருவி’ என்பதையும் சமூக மதிப்புக் கொள்கைகளின் அடிநாதங்களாக நிறுவி, மானுடச் சமுதாயத்தைப் பண்படுத்தி ஆற்றுப்படுத்திடல் வேண்டும் என்பதை உணர முடிகின்றது. சமூகம் கணித்து நிர்ணயித்துள்ள நேர்மதிப்புப் பரிணாமங்களின் சுவடுகளைப் புரிந்து, இளைஞர்கள் உழைப்பாலும் செய்யும் தொண்டுகளாலும் நல்ல பெயரைப் பெற்றுச் சிறப்பாக வாழலாம்.

மேலும், சமூகத்தின் ஆரோக்கியத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் உத்திரவாதம் அளித்திடும் வகையிலும், சமுதாய முன்னேற்றத்திற்குத் தகுந்த மாற்றங்களை மக்கள் விரும்பிஏற்றிடும் வகையிலும், நேர்மதிப்புப் பரிணாமங்களில் பல மாற்றங்களை காலத்தின் தேவைக்கு ஏற்ப புதுமைகளைப்

புகுத்தி, பல உத்திகளை இளையோர்கள் வகுத்திடுவதற்கும் சமூக மதிப்புகள் உதவிடும்.

சமூக மதிப்புகளைச் சரிவரப் பின்பற்றி, மக்களின் மனங்களில் நிறைவினை ஏற்படுத்துபவன்வெற்றிக்கொடி நாட்டி, அவனது ஆளுமைத் திறத்திற்கு ஏற்ப வரலாற்றில் தலைவர்கள் – சான்றோர்கள்-அறிஞர்களின் வரிசையில் இடம் பெறுவது திண்ணம். அதற்கு 'எந்தக் கொள்கைகளையும் எளிதில் எங்கும் பரப்பிடவும், பின்பற்றிடவும், நிலைநாட்டிடவும் இயலாது;தளராது பொறுமை காக்க வேண்டும் என்பதைப் பக்குவமாய் உணர்ந்து எண்ணம், சொல், செயல் என எப்பொழுதும் ஒரே சிந்தனையாய் செயலாற்றினால் வெற்றி உறுதி என்பதை இளைஞர்கள் மனங்கொள வேண்டும்.

## சமூக மதிப்புகளை மேம்படுத்துவற்கான வழிமுறைகள்

இன்றைய இளைஞர்கள் எதிர்காலச் சமூகத்தின் தூண்கள். அவர்கள் ஒழுக்கம், சீலம், நற்பண்பு, நன்னடத்தை ஒருங்கே வாய்க்கப் பெற்று, தம் திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு சமுதாயத்தில் மக்களையும் துறைதோறும் முன்னேற்றம் காணுமாறு வழி நடத்திடல் வேண்டும். அதற்கு இளைஞர்கள் சமூக நன்மதிப்புப் பரிணாமங்களில் தடம் பதித்த சான்றோர்கள், அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து கொள்வது தனி வாழ்விலும், பணிபுரியும் இடங்களிலும், சமுதாயத்திலும் முழுமையான வெற்றிகளைக் காண்பதற்குக் கலங்கரை விளக்காய் வழிகாட்டும்.

ஒரு ஆரோக்கியமான சமூகத்தின் கட்டமைப்பினை மேன்மைபடுத்திடவும், பராமரித்திடவும் கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும் அத்தியாவசியமாகின்றன. காலங்காலமாய் பழக்கவழக்கங்களாய் இருந்து, நம் முன்னோர்கள் வழி வாழ்வியல் விழுமியங்களாகவும், மதிப்புகளாகவும் அடுத்தடுத்த தலைமுறையினர்களுக்கு கடத்தப்படுகின்றன.இவ்வாறு வழிவழியாய் வரும் விழுமியங்கள், மதிப்புகளை அதன் தன்மைகள் குன்றாமல் காப்பதற்கும் உயர்த்துவதற்கும் உரிய நெறிமுறைகளைக் குறித்துக் காண்போம்.

## நெஞ்சுறுதியும் மனோசக்தியும்



18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் உயர்ந்த உண்மைகளை உலகிற்கு 'கண்ணி'

எனும் இலக்கிய வகையில் வழங்கியவர். இவர் பராபரக்கண்ணியில் தன்னுடைய இறைவழிபாட்டில்,

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே” (பாடல் எண் .151)

என்று அழைக்கிறார். அவர் நெஞ்சினைத் திடமாய் இறைவன் வாழும் கோயிலாகக் கருதியமையால் இறைவனைப் பூசை கொள்ள வருமாறு அழைக்க முடிந்தது. அதுபோலவே ஒவ்வொரு மனிதனும் அவனது மனோசக்திக்கு உன்னதமான வலிமை உண்டு; அவ்வலிமைக்கு எண்ணுகின்ற எண்ணங்களை ஈடேற்றும் ஆற்றல் உண்டுஎன்பதை உணர்ந்து தனக்குரிய இலக்கைத் தேர்வு செய்து விட்டு, இலக்கினை நோக்கிய பயணத்தைத் தொடங்குதல் வேண்டும்.அவ்வாறு தொடங்கும் பொழுதுதான் அவ்வாறான பயணத்தின் இடையில் எத்தனை தடைகள் நேரிடினும் அவற்றைப் படிக்கட்டுகளாய் மாற்றி வெற்றிச் சிகரத்தை அடைய இயலும். இலட்சியப் பயணத்தின் போது உள்ளத்திலே இலக்கானது,

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்”

என்று பாரதி கூறுவதைப் போல்இலட்சியத்தில் வெற்றியடையும் வரை காட்டில் மரப்பொந்தின் இடையில் வைக்கப்பட்ட ‘அக்கினிக் குஞ்சாய்’ கனன்று கொண்டே இருத்தல் வேண்டும்.

அத்தகைய உத்வேகத்தோடு வாழ்ந்தவர்கள் சரித்திரத்தில் சாதனை மனிதர்களாய் சிகரம் தொட்டு மிளிர்கின்றனர். இதனை டாக்டர்.எம்.ஆர்.காப்மேயர், “நீங்கள் விரும்புவது எதுவானாலும் அதை அடைவது எப்படி” என்னும் நூலில், 'உலகின் மிகப் பெரிய கண்டுபிடிப்பாளரான தாமஸ் எடிஸன் ரயில்களில் பத்திரிக்கை விற்கும் பையனாக இருந்தவர். அவர் சந்தித்த வெற்றிகளைக் காட்டிலும் தோல்விகளே அதிகம்.தோல்வி அடையும் ஒவ்வொரு முறையும் தனது கண்டுபிடிப்பு வேலை செய்யாதது ஏன் என்று ஆராய்து கொண்டே இருப்பார்.என்ன மாறுதல்

செய்தால் அது வேலை செய்யும் என்று கண்டுபிடிக்கும் வரை விடமாட்டார். வெற்றியடைய ஒரு சுலப வழி-தோல்வி மூலம் வெற்றி!' என்கிறார்.

இலக்கு நோக்கிய பயணத்திற்குரிய உள்ளத்திடத்தினை வளப்படுத்துவதாய் அமைந்திருக்கும் கவிஞர் பா.விஜய்யின்,

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே
ஒவ்வொரு விடியலுமே…சொல்கிறதே
இரவானால் பகல் ஒன்று வந்திடுமே
நம்பிக்கை என்பது வேண்டும்… நம்
வாழ்வில்
லட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில்
மனமே ஓ மனமே நீ மாறிவிடு
மலையோ அது பனியோ நீ மோதிவிடு"

என்ற பாடல் வரிகள் போன்று, தன்முன்னேற்றச் சிந்தனைகளுக்கு விருந்தளிப்பதாய் அமைந்திருக்கும் பாடல்கள் தந்திடும் நெஞ்சுரத்தையும் ஊக்கத்தையும் வலிமையெனும் தூண்டுகோல்களாய்கொண்டு, இளைஞர்கள் வாழ்வில் உன்னத நிலையை எய்துவதற்குமுயலுதல் வேண்டும்.

புத்தர்பிரான் எல்லாவகை சுகபோகங்கள், அன்பும், அழகும் கொண்ட மனைவி, புத்திரர்கள், அன்பாய் வளர்த்த பெற்றோர்கள் என அனைத்தையும் துறந்து கானகத்திற்குச் சென்று, பல இன்னல்களுக்குப் பின் உண்மையை அறிந்தார். தீவிர வைராக்கியத்தினால் சத்திய மார்க்கத்தில், சிறிதும் பிசகாது நின்று ஞானம் பெற்றமையாலேயே 'ஞான புருஷர்' என அழைக்கப்படுகிறார் என்பதையும் உணர முடிகின்றது.

**உயர்ந்த நோக்கமும் மனோபாவமும்**



நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கில் வள்ளுவப் பெருந்தகை ஊக்கமுடைமை

(குறள்: 596) இல் ‘உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்’ என்கிறார்.

நினைக்கின்ற எண்ணங்களும் நோக்கங்களும் என்றென்றும் உயர்வானதாக அமைந்தால் அது மனதை உயர்வான செயல்களைச் செய்வதற்கு ஊக்கப்படுத்தி வரும்.உலகில் மிகச் சிறந்த வைரமும், திசைகாட்டியும் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே.நமது எண்ணங்களே நம்மை உருவாக்குகின்றன.மனிதனின் நடத்தைகளை மாற்றி அமைத்திடும் வல்லமை எண்ணங்களுக்கு உண்டு. ஆதலாலே முண்டாசுக் கவி ‘மகாசக்திக்கு விண்ணப்பம்’ என்னும் கவிதையில்,

“எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் லறிவு வேண்டும்”

என்று விண்ணப்பிக்கிறார்.

ஒரு சமயம் குலகுருவாகிய துரோணாச்சாரியார் பாண்டவருள் மூத்தவராகிய தருமரையும் கௌரவருள் மூத்தவராகிய துரியோதனையும் அழைத்து, நாடு முழுவதும் வலம் வந்து நாட்டில் நல்லவர்கள் எத்தனைப் பேர் உள்ளார்கள்? என்பதை ஆய்ந்து வரும்படி கட்டளையிடுகிறார்.இருவருமே குரு கூறிய வண்ணமே ஆய்வினை மேற்கொண்டு திரும்பினர். தருமரோ துரோணாச்சாரியரிடம், 'நாட்டில் எல்லோரும் நல்லவராகவே காணப்படுகின்றனர்' எனக் கூறினார்.துரியோதனனோ 'நாட்டில் அனைவருமே தீயோராகவே காணப்படுகின்றனர்' என்று கூறினான்.இந்த மகாபாரதச் சான்று வழி அவரவர் எண்ணமும் மனோபாவமுமே செயல் வடிவம் பெறுகின்றன என்பதை உய்த்துணர முடிகின்றது.

## அன்பு

சூழ்நிலைகளின் பின்னணியில் ‘அன்பு’ என்பது இரக்கம், கருணை, பாசம், மனிதநேயம் என்ற நல்லொழுக்கங்களைக் குறிக்கும். மற்ற மனிதர்களிடமோ, விலங்குகளிடமோ சுயநலமின்றி செலுத்தப்படும் அன்பானது கருணை அல்லது மனிதநேயம். அக்கறையோடோ, விசுவாசத்தோடோ

தன்னலமற்ற நிலையில் பகிரப்படும் பொழுது பெற்றோர் பக்தி, நட்பு, குருபக்தி, இறைபக்தி என்னும் பரிணாமங்களை அன்பானது பெறுகின்றது.



தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை அவர்களது அந்திமக் காலம் வரை காப்பாற்ற வேண்டியது பிள்ளைகளின் கடமை. அதனை வலியுறுத்துவதாகவும் பெற்றோர் பக்திக்குச் சிறந்த சான்றாகவும் இராமாயணத்தில் இடம் பெறும் சிரவணன் கதாபாத்திரத்தின் செயல்களைக் கூறலாம். பார்வையற்ற பெற்றோரிடம் அன்பு கொண்டு அவர்களைக் காப்பாற்றுதலை, தனது இன்னுயிர் பிரியும் நிலையிலும் சிரமேற்கொண்டு விளங்கியதாகப் படைக்கப்பட்டிருக்கும் இராமாயணக் கதாபாத்திரம் சிரவணன். இவனது பெற்றோர் பக்தியை இளைய சமுதாயம் உணர்வார்களேயானால் முதியோர் இல்லங்களின் பயன்பாட்டினைத் தவிர்க்க இயலும்.

இன்பத்திலும் துன்பத்திலும் தானாகவே உணர்ந்து உணர்வுகளைப் பகிரும் அன்பானது நட்பாகும். விசுவாசமும் உண்மைதன்மையும் நிரம்பிய நட்பிற்கு கர்ணன் - துரியோதனனையும், காணாமலேயே நெஞ்சங்கள் கொண்ட நட்பிற்கு கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையாரையும் சான்றாகச் சுட்டலாம்.

எவ்வித பிரதிபலன்களையும் எதிர்பாராதது மதிப்பும் மரியாதையும் கொண்ட குருபக்திக்கு ஏகலைவன் துரோணாச்சாரியார் மீது கொண்ட பக்தியைச் சான்றாய் கூறலாம்.

உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதில் எவ்விதப் பாகுபாடும் பாராது இறைவன் மீது கொண்ட அன்பிற்கு கண்ணப்பரின் இறைபக்தியைக் கூறலாம்.

பெற்றோர் பக்தியோ, நட்போ, குருபக்தியோ, இறைபக்தியோ, உறவு கொள்ளும் நிலையில் மட்டுமே வேறுபாடு. உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல், நம்பிக்கை, உண்மை என்பன நடத்தைகளின் வழி நெறிமுறைகளாக மாற்றம் பெற்று, சமூக மதிப்புகளின் அங்கங்களாக விளங்குவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

**1. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்க**

அ. குடும்ப மதிப்பு, சமூக மதிப்பு என்றால் என்ன

ஆ. சமூகத்தின் அடித்தளத்தை நிலைநிறுத்த உதவும் குடும்ப மதிப்புகளை எழுதுக

இ. சமூக மதிப்புகளின் கொள்கைகள் மற்றும் பயன்கள் பற்றி விளக்குக

**2. கீழ்க்கண்ட வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக**

அ. குடும்ப மதிப்புகளின் முக்கியத்துவம் பற்றி விரிவாக விடைதருக

ஆ. குடும்ப மதிப்பிலிருந்து உருவான பல்வேறு மதிப்புகள் குறித்து விரிவாக விடையளிக்க

இ. சமூக மதிப்புகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்குக

## கூறு 3 - பண்பாடு மற்றும் சமயமதிப்புகள்



தியானம்,பக்தி,தருமத்தில் ஈடுபாடு,ஒழுக்கம் இவையெல்லாம் நமது மனதில் இருக்குமானால் நாம் இருக்கும் இடமே புனிதமாகும் – **கிருபானந்த வாரியர்**

இன்றைய சமூகத்தில் அறிவியல் அசுரவேகம்பெற்று வளர்ந்துவருகின்றது. ஆனால் அன்பு, நேர்மை, போன்ற உயிர்ப் பண்புகள் மறைந்து வருகின்றன. நாம் இன்றைய தலைமுறைக்கு சடப்பொருட்களின் முதன்மையைமட்டுமே கற்றுக்கொடுப்பதில் ஆர்வம்காட்டுகிறோம். ஆனால் உயிர்ப்பொருட்களின் முதன்மையை கற்றுக்கொடுக்க மறந்துவிட்டோம் என்றுதான் கூறவேண்டும். ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது சடப்பொருட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் மட்டும் சிறப்புபெறாது. அந்தச்சமூகத்தின் உயிர்ப்பண்புகளின் வளர்ச்சிநிலையால் மட்டுமே அச்சமூகம் உன்னதநிலையை அடையஇயலும். அந்தவகையில் தமிழ்ச்சமூகத்தின் பண்பாடு மற்றும் சமயமதிப்புகளை இன்றைய தலைமுறை அறிந்து செயல்பட வேண்டியது மிகவும் தேவையானதாகும்.

### எது பண்பாடு

பண்பாடு என்னும் சொல்லாட்சி இந்தநூற்றாண்டில் தான் மிகுதியாக வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும் பண்பாடு என்னும் சொல்லின் பொருளை விளக்குவதான பண்பு, பண்புடைமை, சான்றாண்மை போன்ற சொற்களை நாம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது.

உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்து கின்றதோ அவ்வாறே மக்களையும் அவர்களின் மனதையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். கலித்தொகையில் நல்லந்துவனார்,

"பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" ( கலித்தொகை 133- 8 )

என்று குறிப்பிடுகிறார். பொதுவாகப் பண்பு என்னும் சொல்லுக்கு குணம் என்பது பொருள். பலவகையான குணங்களையும் பண்பு என்ற சொல் குறிப்பிட்டாலும் இங்கு நல்லந்துவனார் உலகநடையை அறிந்து அதற்கேற்ப நடத்தல் என்ற பொருள் அடிப்படையில் இச்சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார். வள்ளுவரும்,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" ( குறள் -996 )

என்று பண்பு உடையவரிடத்தில் பொருந்தி இருப்பதால் தான் உலகம் இயங்குகிறது என்று குறிப்பிடுகின்றார்.

பண்பாடு என்பதற்கு மதுரைத்தமிழ் அகராதி "செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தன்மை, அமைதி, இயல்பு" என்ற பொருள்களைத் தருகின்றது.

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, "குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடும் தான் பண்பாடு" என்று பண்பாட்டிற்கு விளக்கம் அளிக்கின்றது.

கட்டற்றகலைக் களஞ்சியமான விக்கிபீடியா, "பண்பாடு என்பது ஒருகுழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பனவற்றை சுட்டிநிற்கின்றது. மொழி, உணவு, இசை, சமயநம்பிக்கைகள், தொழில்சார்தெரிவுகள், கருவிகள் போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும்" என்று விளக்கம் தருகின்றது.

பண்பாடு என்ற சொல்லிற்கு விளக்கம் தரவந்த மொழிஞாயிறு தேவப் நேயப்பாவாணர் அவர்கள் "பண்படுவது பண்பாடு. பண்படுதல், சீர்ப்படுதல்

அல்லது திருந்துதல் திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ்(தனிப்பாடல்) என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்டவுள்ளமென்றும் சொல்வது வழக்கம்" என்று குறிப்பிடுவார்.

மேலேகுறிப்பிடப்பட்ட கருத்துகளின் வழி சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட கொள்கைகள், கோட்பாடுகள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையே ஒரு சமூகத்தின் பண்பாடு எனக்கொள்ளலாம்.

பொதுவாக ஒரு தாயின் துன்பத்தை நீக்கவேண்டும் என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணம் யாருக்கும் எழுவது இயல்பு. ஆனால், ஒருதாயின் பசித்துன்பத்தைக் கண்ணால் கண்டாலும் கூட சான்றோர்கள் பழிக்கும் வினையைச் செய்யக்கூடாது என்பதே தமிழர்பண்பாடு என்பதனை,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள் – 656 )

என்ற வள்ளுவர் குறளின் வழி அறியலாம். தமிழர் பண்பாட்டின் சிறப்பினைப் பறைசாற்ற இந்தக் குறள் ஒன்றேபோதுமே.

**எதுசமயம்**

சமயம் என்பது இறைவனோடு தொடர்புடையது. கடவுளை வழிபடுகின்ற நெறியே சமயம். சமய அடிப்படை மனிதவாழ்வோடு பொருந்தியது எனலாம். சமயம் என்ற சொல் சமைத்தல், பக்குவப்படுத்தல் என்னும் பொருளில் வழங்கி வருகின்றது. உடல், மனம், அறிவு, ஆன்மா ஆகிய அனைத்தும் இறை உணர்வில் பக்குவப்படுத்தலைக் குறிப்பதே சமயம் .

**சமயம்சொற்பொருள்விளக்கம்**

சமயம் என்பது சமூக நிறுவனங்களில் ஒன்று. அது மரபுகள், பழக்கவழக்கங்கள், கருத்துக்கள் ஆகிய வெவ்வேறு தொகுப்புகள் ஒன்று சேர்ந்தது. மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது. அந்த நம்பிக்கை கடவுள் உண்டு என்பதாகவும், இல்லை என்பதாகவும் இரண்டு வேறுபட்ட நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைகிறது.

சமயம் என்னும் சொல் 'சமய' என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிடும் பேரகராதி அதற்கு எட்டுவகையான பொருள்களைக் குறிப்பிடுகின்றது. "காலம், தருணம், அவகாசம், மதம், சமய, தீட்சை, நூல், உடன்படிக்கை, மரபு" என்பனவே பேரகராதி குறிப்பிடும் பொருள்கள். இவற்றில் முதல் மூன்றும் காலம் தொடர்பானவை. அடுத்த மூன்றும் சமயம் தொடர்பானவை. ஏனைய இரண்டும் வெவ்வேறு பொருள் குறித்தவை.

ஆங்கில அகராதி சமயம் என்பதற்கு "கடவுள் அல்லது கடவுளின் மேல் நம்பிக்கையும், வழிபாடு செய்வதும் அல்லது அத்தகைய முறைக்கு உட்பட்ட நம்பிக்கையும் வழிபாடுமே சமயம்" எனப்பொருள்தருகின்றது.

"ஆங்கிலத்தில் இச்சொல்ரிலிஜன்(Religion) எனப்படுகின்றது. இச்சொல் பிரெஞ்சு மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்குச் சென்றுள்ளது. இது கடவுள்பற்று, கடவுள்களிடம் அச்சம் எனத் தொடக்கத்தில் பொருள் தந்தது. இது நீக்குதல், விலக்குதல் எனப்பொருள்படும் நெக்லிஜன்ஸ் என்னும் சொல்லிற்கு எதிர்ச் சொல்லாகரிலிஜன்ஸ் எனவழங்கியது. கிரேக்க மொழியில் இச்சொல் பெருமதிப்பு, பயபக்தி எனப்பொருள்தரும் ரெவரன்ஸ் என்னும் சொல்லோடு தொடர்புடையது" என்பர்.

மேலும், "மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் ரிலிஜன் என்ற சொல் இரு பொருளில் வழங்கப்பெறுகின்றது. ஒன்று, குறிசொல்வது. அதாவது இறைவனின் திருவுள்ளத்தை அறிவதற்கு சில நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் அடையாளமாக கொள்வது என்று பொருள். மற்றொன்று இறைவனோடு ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் இணைப்பது என்பதாகும் நெறி அல்லது வழி என்ற பொருளிலும் பல சமயங்கள் கருதப்பட்டுவந்துள்ளன. தமிழ் நூல்களிலும் பெருநெறி, செந்நெறி என்ற ஆட்சிகள்உண்டு. பொதுவாகப் பார்க்கும்போது சமயம் என்பது மனிதனுக்கும், மனித நிலைக்கும் மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல் களுக்குள் உள்ளது பற்றியதாக எண்ணப்படுகின்றது" என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

இத்தகைய சமயம் மக்கள் மனதில் அன்பினை நிலைப்படுத்துவதாக அமையவேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டு தமிழர் வாழ்வில் சமயம் அமைகிறது. வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற

வள்ளலாரின் வார்த்தைகள் தமிழரின் சமயநெறிக்குச் சிறந்த சான்றாக அமையும்.

**பண்பாடுமதிப்புவிளக்கம்**



மனிதன் பிறந்தது முதற்கொண்டு அவனது நடத்தைகள் மற்றும் மரபு சார்ந்த நடவடிக்கைகள் அனைத்தும் அவனைச் சுற்றியுள்ள குடும்பம் மற்றும் சமுதாயத்திடம் இருந்தே பெறப்பட்டதாக அமைகின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட இனமக்களும் தங்களுக் கென்று ஒரு பண்பாட்டினை உருவாக்கிக்கொள்கின்றனர்.

“பண்பாடு என்பது தலை முறை தலை முறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிப்பதாகும்” என்ற கருத்து இதனை அரண் செய்வதாக அமையும்.

மானுடவியலார் மனிதனின் இயல்பான நடவடிக்கைகளையும், கரடு முரடான வாழ்க்கையில் மனிதனை மனிதனும், மனிதன் மற்ற உயிர்களையும் தன்னுயிர் போல் கருதும் உந்துதலாக அமைகின்ற உயர்பண்பு நெறிகளையும் விழுமியம் என்று அடையாளப்படுத்துகின்றனர்.

”மதிப்புகள்ன் என்றசொல் ‘values’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்நிகரனவாகக்கையாளப்படுகிறது. இந்த மதிப்புகள் என்ற சொல்லுக்கு இணையாகத் தமிழில் விழுமியங்கள் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து இரக்கத்தோடும் அன்போடும் வாழ்வதை விழுமியத்தன்மை எனக்கொள்ளலாம். அன்பு, அருள், தியாகம், போன்றவைகள் சிறந்த விழுமியங்களாகவும் அவற்றின் அடிப்படையில் அமையும் செயல்கள் விழுமியத்தன்மை பெற்றும் காணப்படுகின்றன. உயர்வுள்ளல், நேர்மை, தன்னம்பிக்கை, தெளிவு, துணிவு, பொறுப்புணர்வு, நன்றியுணர்வு, பிறரைமனதாரவாழ்த்துதல் போன்றவை எக்காலத்திற்கும் என்னாட்டவர்க்குமான பொதுவான தமிழரின் விழுமியங்கள் எனலாம்.

தமிழரின் சிறந்த விழுமியங்களுள் ஒன்று நன்றிமறவாமை. பிறர்செய்த உதவியை மனிதர்கள் மறவா திருக்க வேண்டும் என்பதனை,

“நிலம் புடைபெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோருக்கு உய்திஇல் என
அறம் பாடிற்றே” (புறம் – 34: 5-7 )

என்று புறநானூறு பதிவு செய்துள்ளது.

வீட்டிற்கு வரும் புது உறவினரை வரவேற்று உணவிடுவதே விருந்தாகும். அவ்வாறு வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்க வேண்டும். இல்லையெனில் விருந்தினர் மனம் புண்படும் என்பதை,

“மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து” (குறள். 90)

என்ற குறளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. மேலும்,

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு” (குறள் – 86 )

என்ற குறளின் வாயிலாக வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கும் நல்ல விருந்தினன் ஆவான் என்று விருந்தின் முதன்மையை அறியலாகின்றது.

சங்ககாலத்தில் விருந்தறம் பேணுவது தலையாய கடமையாக இருந்தது. வீட்டில் வறுமை நிலவினாலும் கடன்வாங்கியாவது விருந்தறம் ஆற்றியுள்ளனர். விருந்தினருக்குக் கொடுக்க ஏதும் இல்லாதகாரணத்தினால் கணவன்தனது வெற்றி பொருந்தியவாளை அடகுவைத்து அவர்கள் துன்பம் போக்கியதனை,

“ நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்” (புறம். 316 : 6-7)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. தமிழரின் உயர்ந்த இத்தகைய பண்பாட்டு மதிப்புகள் பெரும்பாலும் காலத்தால் மாற்றம் பெறாத இயல்புகளாகவே இருத்தல் கண்கூடு.

**சமயம் மதிப்பு விளக்கம்**

சமயங்கள் மனித நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தவை. அவை மனிதவாழ்வு சீர்பெற்று விளங்க பெரியோர்கள் வகுத்துச் சென்ற வழியாகும். அவ்வழி மனிதன் தன் புலன்களை அடக்கி பொறிகளில் தூய்மையைப் பாதுகாத்து இதன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு உதவுவதாக அமையவேண்டும்.

அவ்வகையில் மனிதனை தீமையில் இருந்து விடுவித்து இன்பநிலையை அடையச் செய்வதும் விலங்குப் பண்பிலிருந்து விடுத்து மனிதப்பண்பில் மலர்ச்சியுறச் செய்வதும் சமயத்தின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

மேலும், கடவுள் நம்பிக்கை என்பது இயல்பானது. அந்த நம்பிக்கையை உள்ளடக்கிச் செய்யப்படும் செயல்கள், மனிதர்களுக்கு மனநிறைவு தருவதாக இருப்பதுடன், பிறருக்குத் துன்பம்தராத ஒன்றாகவும் இருத்தல் வேண்டும். அதுவே சமயமதிப்பு எனலாம்.

சமயம் மனிதனைப் பண்படுத்தி, ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கவேண்டும். இதனை உணர்ந்து செயலாற்றுவது சமய மதிப்பாகவும் இதற்கு மாறானவை எதிர்மதிப்பாகவும் கருதத்தக்கன. இந்தியாவின் தனிச்சிறப்புகளுள் ஒன்று என்ன என்றால் வேற்றுமையில் ஒற்றுமைகாண்பது. இந்தியாவில் பல்வேறுபட்ட சமயத்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் அவர்கள் தம்முள் வேறுபாட்டினை மறந்து ஒற்றுமையுடன் வாழ்வது இந்திய சமயமதிப்பு எனலாம்.

இந்திய சமயப்பண்பாடு தொன்மையானது பன்முகத்தன்மை கொண்டது. இந்தியாவில் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு சமூகங்களைச் சார்ந்த மக்கள், பல்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். சங்ககாலத்திலும் சமணர், பௌத்தர், யவனர் போன்ற பல்வேறு இனத்தவர் தமிழர்களிடையே கலந்து வாழ்ந்தமையை இலக்கியங்கள் வழி அறியலாகின்றது. பட்டினப்பாலையில்,

“பல்கேள்வித் துறைபோகிய
தொல்ஆணை நல்ஆசிரியர்
உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்”( பட்டினப்.170-172 )

என்ற அடிகளைக் காணமுடிகிறது. இதில் தொல்லாணை நல்லாசிரியர் என்பதற்கு உரையாசிரியர்கள், ஒவ்வொரு சமயத்தவரும் ஒவ்வொருவகையான பழைய ஆணையை உடையவர் ஆதலால் தொல்லாணை நல்லாசிரியர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக விளக்கம் தருவர். ஆகவே தமிழகத்தில் பல்வேறு சமயத்தவரும் இணைந்து வாழ்ந்தமையை அறிந்து கொள்ள இயலுகின்றது.

## பண்பாடு மதிப்புகளின் முக்கியத்துவங்கள்

மனித சமுதாய அமைப்புகள் யாவும் பண்பாடுகளால் நிறுவப்பட்டுள்ளன. பண்பாடே, மனிதவாழ்வின் இருப்பிற்கு அடையாளம் ஆகின்றது. மனிதவாழ்வின் உயரிய நடத்தையாக இன்றியமையா பண்பாட்டு மரபாக விளங்குவன விழுமியங்கள். மக்கள் எல்லோரும் கூடிவாழ்தல், எல்லோரும் எல்லாமும் பெற்றுவாழ்தல், அன்போடும் நட்போடும் பழகுதல், பிறருக்குக் கொடுத்து உதவுதல், நேர்மை, உண்மை, அறம், விருந்து போன்ற விழுமியங்களை இன்றைய சமுதாயம் தொலைத்து விட்டுத் தடுமாறி நிற்கிறது. அதை உணர்த்த வேண்டும் எனில் விழுமியம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். மனிதனுடைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் மனித விழுமியங்கள் தேவை என்பதை இன்றைய தலைமுறையினர் உணர்ந்து செயல்பட வேண்டும்.

“பண்பாடு என்பது அகவளர்ச்சியை அடித்தளமாகக் கொண்டது. ஒரு சமுதாயத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையினையே பண்பாடு என்பர்”. என்ற கருத்தின் வழி அகவளர்ச்சியின் விளைவால் ஏற்படும் மக்களின் வாழ்க்கைமுறையே சிறந்த பண்பாட்டு மதிப்புகளாக இருக்க இயலும் என்பதனை அறியலாகின்றது. மக்களை ஒழுக்கத்துடன் வழிநடத்த பண்பாடு முதன்மையான கருவியாக அமைகிறது. “ஒவ்வொரு சூழலிலும் பண்பாடு மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று நெறிகளை வகுத்து வழி காட்டுகின்றது. அந்த நெறிகளுக்கு ஏற்ப மக்கள் நடந்து கொண்டு இடைவினை புரியும் போதுதான் சமூக அமைப்பு ஒழுங்கமைதி பெறுகின்றது. பண்பாட்டின் வழிகாட்டுதல் இல்லாமல் போனால் மக்களுடைய நடத்தை கண்டவாறு ஒழுக்கம் இன்றிப் போகும் குழப்பநிலை உண்டாகும். சமூகம் அமைப்பாக இயங்காமல்போகும்” என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுவதன் வழி

ஒழுங்குமுறையுடன் கூடிய பண்பாட்டு மதிப்பே மனிதவாழ்விற்கு முதன்மையானது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

மேலும் "பண்பாட்டின் கூறுகளான வழக்கங்கள், வழக்காறுகள், ஒழுக்கசாரங்கள், ஒழுக்கவிதிகள், சட்டங்கள், முதலியவற்றால், நெறிப்படுத்தப்படுகின்றன. அந்த நிலையில் தான் சமூக அமைப்பு ஒழுங்குபட்டு அமைகின்றது. மக்களுடைய நடத்தைப் பாங்குகள் பண்பாட்டுக் கூறுகளான நெறிமுறைகளுக்கு ஏற்ப அமைகின்ற போதுதான் அவை நெறிப்பட்டனவாக ஒழுங்கமைதி கொண்டனவாக இருக்கும்" என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

அத்தகைய ஒழுக்கங்களைத் தமிழ் இலக்கியங்கள் உலகிற்கு வலியுறுத்தியுள்ளன. தமிழர் வாழ்வின் உயர்ந்த பண்பாடுகளுள் ஒன்று இல்லறத்தை நல்லறமாக்கும் ஒருவனுக்கு ஒருத்தி என்பதே.

சங்ககாலத்தில், ஆடவர் பல பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்தனர். அப்படி காட்டுப்பாடுகளே இல்லாத காலத்தில் கூட சோழன் நலங்கிள்ளி ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கோட்பாட்டுடன் வாழ்ந்துள்ளான். சோழன் நலங்கிள்ளி, தான் பகைவர்களை அழிக்காவிடில் என்மார்பில் அணிந்த மாலையானது அன்பில்லாத பொதுமகளிரின் மார்பில் பொருந்திச் சிதையட்டும் என்று வஞ்சினம் மொழிகின்றான். இதனை,

"……………………சென்றவண்
வருந்தப் பொரேன் ஆயின் பொருந்திய
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே" (புறம்-73:10-13)

என்ற பாடல் அடிகளின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. இவ்வஞ்சினக் கூற்றின் மூலம் சோழன் நலங்கிள்ளி ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடுடன் வாழ்ந்தான் என்பதனையும், இல்லறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தான் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

அத்தகைய ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த பண்பாட்டினை நிலைநிறுத்த ஆணும், பெண்ணும் ஒருவருக் கொருவர் அன்புடன் விட்டுக் கொடுத்துத் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வது சிறப்பு. இத்தகைய நல்ல இல்லறத்தைக் கட்டமைப்பதாக சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன.

"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"      ( கலி.18 : 10-11 )

என்று கலித்தொகை ஓர் ஆடையை இருவர் அணிந்து வாழும் வறுமைநிலை ஏற்பட்டபோதும் மனம் ஒன்றி வாழ்வதே வாழ்வு என்று வறுமையிலும் செம்மையான இல்லறத்தை எடுத்துக்காட்டுகிறது.

நற்றிணை பெண்ணிற்கான அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடும்போது,

"கொண்ட கொழுநன் குடிவறனுற்றன
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்" ( நற்-110: 10-11 )

என்று குறிப்பிடுகிறது. நற்றிணை குறிப்பிடும் இந்தத் தலைவியும் வறுமையில் பிறந்து வறுமையில் வாழ்ந்து வந்ததலைவி அல்லள்.

தந்தையின் வீட்டில் பொன்னால் ஆனகிண்ணத்தில் தேன்கலந்த பால் உணவை உண்டு வளர்ந்து வந்தவள்தான். ஆனாலும், தலைவனின் உழைப்பில் அவள் வாழ்வதே சிறப்பு என்பதனை நற்றிணை பதிவுசெய்துள்ளது.

மற்றொரு ஐங்குறுநூற்றுத்தலைவி, தலைவனுடன் உடன்போக்கு சென்று மீள் கின்றாள். மீண்ட தலைவியிடம் அவளது தோழிகள் நீ சென்ற நாட்டு நீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லையே என்று கூறுகின்றாள். அதற்குத் தலைவி அளிக்கும் விடையைப்பாருங்கள்.

"அன்னாய் வாழி வேண்டன்னை நம்
படப்பைத் தேன்மயங்கு பாலினும்
இனிய இவர் நாட்டு உவலைக் கூவற்கீழ்
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே" (ஐங் – 203 )

இந்தப் பாடலில் தலைவி, தோழியைப் பார்த்து எனக்கு அன்னையைப் போன்றவளே! நம்முடைய இல்லத்தில் கிடைக்கும் தேன் கலந்த பாலைவிட என்தலைவன் நாட்டில், மான்கள் உண்டதால் கலங்கிக்காணப்படும் அந்த கலங்கியநீரே எனக்கு இனிமையாகத் தோன்றுகிறது என்றுகூறுகின்றாள்.

குடும்ப நீதிமன்றங்களில் இன்று வழக்குகள் அதிகமாகப் பெருகிவருவதன் காரணம் நாம் நம்முடைய இலக்கியங்களில் பதிவாகி இருக்கும் இத்தகைய

உயர்ந்த மதிப்புகளை இன்றைய சந்ததியினருக்குக் கற்றுக்கொடுக்காததே எனலாம்.

## சமய மதிப்புகளின் முக்கியத்துவங்கள்



சமயம் என்பது மனித வாழ்வை நெறிப்படுத்துவதாக அமையவேண்டும். மக்களின் அறியாமை இருளை நீக்கி இவ்வுலகின் தன்மைகளையும், உயிர்களின் இயல்பினையும், பிறவியின் நோக்கத்தினையும் உணர்த்தவேண்டும். எல்லோரையும் சமமாகவும் உடன்பிறப்புகளாகவும் குழந்தைகளாகவும் கருதி ஒருவருக்கொருவர் அன்பாகவும் வாழ வழிவகைசெய்யவேண்டும்.

மனிதனைத் தீமையில் இருந்து விடுவித்து இன்பநிலையை அடையச் செய்வதும், விலங்குப் பண்பிலிருந்து விடுத்து மனிதனை மலர்ச்சியுறச் செய்வதும் சமயத்தின் உயர்ந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதுமட்டுமல்லாது, மனிதன் தன்புலன்களை அடக்கிப்பொறிகளில் தூய்மையைப் பாதுகாத்து தன்னைப்பக்குவப்படுத்திக் கொள்வதற்கு உதவுவதாகவும் சமயம் அமைய வேண்டும்.

அவ்வகையில், ஓர் உலக மனப்பான்மையால் மனிதமனத்தில் இருக்கும் விலங்குப் பண்பினை நீக்குவதாக தமிழர் சமய எண்ணங்கள் அமைந்துள்ளன. தமிழர்களோடு எல்லாக் காலங்களிலும் வேற்றுச் சமயத்தை சேர்ந்தவர்கள் இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். சில நேரங்களில் உட்பூசல்கள் விளைந்திருந்தாலும் பலநேரங்களில் அனைவரும் இனிதாகக் கலந்தே வாழ்ந்து வந்துள்ளனர். தமிழ்நாட்டிற்கு வெளியில் இருந்து வந்த சமயத் தத்துவங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் விரிவாகப் பேசப்பட்டமைக்கான சான்றுகளை நாம் இலக்கியங்களில் காணமுடிகிறது.

அதுமட்டுமல்லாது, மனிதனின் செயல்கள் பலவும் ஏதாவது ஒருவகையில் சமயத்தோடு இணைந்து நடைபெறுகின்றன எனலாம். கடவுள் இல்லை என்று ஒரு பக்கம் கருத்து பேசப்பட்டாலும் சமயத்தோடு இணைந்து மக்கள்வாழ்வு அமைந்திருப்பதை மறுப்பதற்கு இல்லை. நன்மை செய்தால் கடவுள் நமக்கு நன்மை செய்வார் தீமை செய்தால் நாம்கடவுளால்

தண்டிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையை இன்றளவும் மனிதர்களிடம் காணமுடிகின்றது. ஆகவே, மனிதர்களுடைய வாழ்வியல் மதிப்புகளில் இந்த சமயமதிப்புகள் இன்றியமையா இடம்வகிக்கின்றன எனலாம்.

சமயத்தின் நோக்கம் மனிதன் செய்த குற்றத்தினை உணர்ந்து திருந்த வேண்டும் என்பதற்கான வாய்ப்பினை அளிப்பதாக இருக்க வேண்டும். தவறை உணர்ந்த மனிதன் மீண்டும் அத்தவறினைச் செய்யாமல் இருக்கவும், தவறு செய்ததற்கான குற்றவுணர்வில் இருந்து அவனை மீட்பதாகவும் சமய உணர்வு அமைதல் வேண்டும்.

**பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள்**

மனிதன் கூடிவாழும் இடம் சமூகம் ஆகும். பல்வேறு மொழி, இனம், சமயம் சார்ந்த மனிதர்கள் கூடிவாழும் அமைப்பினைச் சமூகம் என்பர். பல்வேறு மனிதர்கள் சேர்ந்து பண்பாட்டின்அடிப்படைக் கூறுகளைஉருவாக்குகின்றனர். "அறிவியல், தொழில்நுட்பம், பொருளியல், கலை, இலக்கியம் முதலியதுறைகளைச் சார்ந்த பருமையான மற்றும் அரூபமான படைப்புகளும் அரசியல், நீதி, நிர்வாகம், குடும்பம், உறவுமுறை, சமயம் முதலிய நிறுவனங்களும் மனிதசமுதாயத்தின் பண்பாட்டுப் படைப்புகளாகும். ஒரு சமூகத்திற்குரிய இவ்வனைத்து வகைப் பண்பாட்டுப் படைப்புகளும் அச்சமுதாயத்தின் சமூகப் பண்பாட்டை ஒருவர் புரிந்து கொள்வதற்கு உதவக்கூடிய மிகவும் இன்றியமையாத சான்றுகளாகும். ஏனெனில், மனிதர்களுடைய நடைமுறைத் தேவைகள், அவற்றை அடைவதற்காக அவர்கள் மேற்கொண்ட அறிவியல், தொழில்நுட்பரீதியிலான முயற்சிகள், சமூகமேம்பாடு, சமூகஅமைதி, கட்டுக்கோப்பு போன்றவற்றிற்காக அவர்கள் உருவாக்கிக் கொண்ட குடும்பம், கல்வி, அரசியல், நிர்வாகம், நீதி, வழக்கம் முதலிய பல சமூகநிறுவனங்கள் புறவயமான – அகவயமானதேடல், உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் படைத்துக் கொண்டசமயம், வாய்மொழி மற்றும் எழுத்து மரபு இலக்கியங்கள், நுண்கலைகள், பருப்பொருட்கலைகள் போன்ற அனைத்தும் மனிதவாழ்க்கையின் தடயங்களாகும். இந்த ஒட்டு மொத்தமான தடயங்களின் தொகுப்பையே மானிடவியலார் சமூகப்பண்பாடு என்கிறார்கள்". என்பர். சமூகம் சார்ந்த படைப்புகளில் அரசியல் சமயம், குடும்பம், உறவுமுறை,

தொடர்பானவை பதிவு செய்யப்படுகின்றன. இவற்றை எல்லாம் சமூகப்பண்பாட்டுக் கூறுகள் என்று சமூகமானிடவியலார் சுட்டுகின்றனர்.

மேலும், பண்பாடு என்பது பல்வேறு பழக்கவழக்கங்கள் கொண்ட சமூகத்தின் உயர்வான நெறிமுறை என்றுகருதுவர். பண்பாட்டு விழுமியங்களின் வரையறையை “ஒரு சமுதாயத்தின் நெறியியல்சார் கூறுகளாக விழுமியங்கள், நெறிமுறைகள், விதிகள், குடிவழக்குகள், வழக்கபாடுகள், மரபாண்மைகள், அளிப்புக்கள், வழக்கங்கள், பழக்கங்கள் முதலியவை அமைகின்றன. இவற்றில் ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் நடத்தை முறைக்கும் செயல்களுக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்துவாழ முற்படும் போது எவை எவை எல்லாம் இன்றியமையாதது எனக் கருதப்படுகிறதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும்". என்ற கூற்றின்வழி பண்பாட்டு மதிப்புகளின் அடிப்படை எவை என்பதனை நாம் அறிந்து கொள்ள இயலும்.

அன்பைவிட வலிமையான ஒன்று உலகத்தில் இல்லை. அத்தகைய அன்பினை வள்ளுவர் மனிதர்களுக்கு வலியுறுத்து கின்றார்.

“அறத்திற்கே அன்புசார்பென்பஅறியார்

மறத்திற்கும் அஃதே துணை“ (குறள் – 76 )

என்ற குறளில் அன்பே அறத்திற்குத் துணையானது என்பதனை வலியுறுத்தி அறத்திற்கு மாறானவற்றைப் போக்குவதற்கும் அன்பே துணையாகிறது என்று குறிப்பிடுகிறார்.

மேலும், எல்லோருக்கும் நன்மையே செய்து பிறருக்கு உதவி வாழ்வதே உயர்ந்தகுணம். இக்குணம் வளமான எதிர்காலம் உருவாகத் துணைநிற்கும். அவ்வாறு பிறருக்கு நல்லது செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருக்கவேண்டும் என்பதனை,

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்“ (புறம் – 195 )

என்று நரிவெரூ உத்தலையார் வலியுறுத்துகிறார்.

கல்வி மனித சமூகத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை உயர்வடையச் செய்வது கல்வியே ஆகும். ஆகவே, சங்ககாலத்தில் கல்விக்கு மிகுதியான முதன்மை அளிக்கப்பட்டது.

“வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே” புறம்–(183: 8-10 )

என்ற பாடலடிகளின் வாயிலாகக் கல்வியின் மேன்மையினை அறியமுடிகிறது. ஒருமனிதன் கல்விகற்று இருந்தால் அவனை மேல்நிலையில் வைத்துப் போற்றும் தன்மையினை இப்பாடலடிகள் புலப்படுத்துகின்றன. மேலும்

“உற்றுழி உதவியும் உறுபொருள்கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல்நன்றே; (புறம்-183 :1-2 )

என்ற அடிகள் ஆசிரியரை வழிபட்டுக் கல்விகற்கும் முறையினை எடுத்துரைக்கிறது. ஆசிரியரின் துன்பத்திற்குத் தீர்வுகாண உதவுதல், மிக்க பொருள் கொடுத்து ஆசிரியரைவழிபட்டுக் கல்விகற்பது மனிதவாழ்வில் நன்மை பயக்கும் நடத்தைப் பண்பாகக் குறிக்கப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ளமுடிகிறது.

சங்ககால மக்கள் தம்குடிக்குப் பழிஉண்டாகும் என்று அஞ்சி எப்போதும் உண்மையே பேசுவர் என்பதனை,

வடுஅஞ்சிவாய்மொழிந்து ( பட்டினப்பாலை.208 )

என்ற அடி விளக்குகிறது.

மேலும், வணிகர்கள் தமது பொருளை எவ்வளவு அருமையாகக் கருதுகின்றார்களோஅதைப் போலவே பிறர் பொருளையும் அருமையாகக் கருதவேண்டும். பிறரிடமிருந்து பண்டங்களை வாங்கிக் கொள்ளும்போது

அவர்களை ஏமாற்றக்கூடாது. தாம் பிறர்க்குப் பண்டங்களைக் கொடுக்கும் போதும் அளவிலும் நிறையிலும் குறைவில்லாமல் கொடுக்க வேண்டும். இவ்வாறு நாணயத்துடன் நேர்மையுடன் வணிகம் செய்யவேண்டும் என்பதனை,

"தமவும் பிறவும் ஒப்பநாடி

கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்" (பட்டினப். – 209-211 )

என்று பட்டினப்பாலை விளக்குகின்றது. வாணிகம் செய்வார்க்குவேண்டிய இப்பண்பினை,

"வாணிகம் செய்வார்க்குவாணிகம்பேணிப்

பிறவும் தமபோல் செயின்" (குறள் – 120 )

என்று குறளும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும், "மதிப்புகளை நாம் மதிக்கின்ற அளவே நம்வாழ்க்கையின் உயர்வு அமைகிறது"என்பர். அந்தவகையில் மனித வாழ்வில் யாவரும் பின்பற்ற வேண்டிய விழுமியங்களைக் கலித்தொகை பதிவுசெய்துள்ளது.

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்புஎனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்புஎனப்படுவது தன்கிளை செறாஅமை

அறிவு எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்

செறிவு எனப்படுவது கூறியது மாறாஅமை

நிறைவு எனப்படுவது மறைபிறர் அறியாமை

முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்“ (கலி – 133 )

என்ற பாடல் மனிதர்களின் நடத்தைப்பாங்குகளுக்கான நெறிமுறைகளை வரையறைப்படுத்தி இருப்பதனைக் காணலாம்.

அதுமட்டுல்லாது, என்றென்றும் மாறாத விழுமியங்களும் உண்டு. சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப அந்தந்தக் காலகட்டத்தில் உருவாகும் விழுமியங்களும் உண்டு என்பர். ஆனால், எந்தக் காலத்திலும் மாற்றம் பெறாத சிறப்பான விழுமியங்களைச் சங்கச் சான்றோர்கள் வகுத்துள்ளனர் எனலாம். மனிதர்களின் அகவாழ்வில் மட்டும் அல்லாமல் புறவாழ்விலும் மாற்றம் அடையாத பண்பாட்டு விழுமியங்களைஅமைத்துள்ளனர்.

இனக்குழுச் சமூக வாழ்க்கை முறைமையின் மாற்றத்தின் பின்நிலவுடைமைச் சமூக வாழ்வு மலரத் தொடங்கிய நிலையில் மண்ணாசை, பெண்ணாசையின் காரணமாகப் போர்கள் எழத் தொடங்கின. ஆயினும் அப்போரிலும் உயர்ந்த பண்பாட்டினைக் கடைப்பிடித்த சமூகம் நம்தமிழ்ச் சமூகம். போரின் தொடக்கத்தின் போது,

“ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்

எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின் ( புறம் – 9 :1-5 )

என்று பறை அறைந்து தெரிவித்துள்ளமை போரிலும் நாம் கடைபிடித்த பண்பாட்டினை விளக்கும்.

**சமயமதிப்புகளின்அடிப்படைக்கூறுகள்**

சமய நம்பிக்கை என்பது சமூகத்தின் தாக்கத்தால் மக்களிடம் ஏற்படக்கூடிய ஓர் உணர்வு எனலாம். மனிதர்கள் தம்தாய், தந்தையர் எந்தக் கடவுளை எப்படி வழிபடுகின்றனரோ அந்தக்கடவுளை அவ்வாறே தம் இளமையில் வழிபடுகின்றனர். வளர்ந்தபிறகும் கூட பலரிடம் இதில் மாற்றங்கள் ஏதும் ஏற்படுவதில்லை. சிலர் தம் சிந்தனைக்கும், தேவைக்கும், உணர்வுக்கும் ஏற்ப சமய நம்பிக்கையில் பின்னாளில் மாற்றம் அடைகின்றனர்.

சமயத்தோடு தொடர்புடைய ஒருகருத்தாக அறம் விளங்குகின்றது. சமூகவியலில் விலக்கத்தக்கது எனும் கருத்து பல்வேறு நிறுவனங்களில் வலிமையான ஒன்றாகச் செயல்படுகின்றது. சமயத்தில் விலக்கத்தக்கது என்பது அறத்திற்குப் புறம்பானது என சமூகம் முடிவுசெய்கின்றது. விலக்கத்தைப் புனிதமற்றது என்றும் அதைச் செய்வது பாவம் என்றும் குறிக்கப்படுகின்றது. இதற்கு மாறாக விலக்கத்திற்கு உள்ளாகாமல் ஏற்கத்தக்கவை புனிதம் என்றும் ஏற்கத்தக்கவை செய்தல் அறம் என்றும் சமூகம் முடிவுசெய்கின்றது. எனவேசமயத்தில் புனிதம் – புனிதமற்றது, அறம் – பாவம் என்பன சூழ்நிலைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றன.

தொல்காப்பியர் தொல்காப்பியத்தில்,

"தெய்வம் அஞ்சல் புரையறத் தெளிதல்"

(தொல்.பொருள்.மெய்ப்.24-1 )

என்று குறிப்பிடுகின்றார். இந்த அடியில் தெய்வம் அஞ்சல் என்பது தெய்வத்திற்கு அஞ்சுதல் என நேரடியான எளியபொருள் உடையது. எதற்காக தெய்வத்திற்கு அஞ்சவேண்டும் என்பதற்குச் சமூகத்திற்குத் தீயசெயல்களைச் செய்ய அஞ்சுதல் எனப்பொருள் கொள்ளலாம். எனவே, தெய்வத்திற்கு அஞ்சுவது சமூகத்திற்கு அஞ்சுவது என்று பொருள்படுகின்றது எனலாம்.

எதிர்மறையில் கூறிய கருத்திற்கு மாறாக அடுத்தத் தொடரில் புரையறத் தெளிதல் என்பது அமைகின்றது. இதற்குக் குற்றமற்ற அறத்தைத் தெரிந்து கொள்ளுதல் என்பது பொருளாகின்றது. குற்றமற்ற அறத்தைத்

தெரிந்துகொள்வது என்பது சமூகத்திற்கு நன்மைபயக்கும் செயல்களைத் தெரிந்துகொள்ளுதல் என்பது பொருள் என்ற அடிப்படையிலேயே தொல்காப்பியர் இந்த அடியை எடுத்தாண்டுள்ளார் எனலாம்.

சென்ற தலைமுறையினருக்கு பயபக்தி என்ற சொல்லின் பொருள் பெரியவர்களால் விளக்கப்பட்டது. கடவுளிடத்து மனிதர்களுக்கு பயத்துடன் கூடியபக்தி இருக்கவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பெரும்பான்மையான குற்றங்களின் அடிப்படைக்காரணம் நாம் செய்வதை யாரும் பார்க்கவில்லை என்ற மனிதஎண்ணத்தின் வெளிப்பாடே ஆகும். சென்ற தலைமுறையினருக்கு மனிதர்கள் என்னசெய்தாலும் அதைக் கடவுள் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்ற கருத்தேற்றம் மனதில் பதியவைக்கப்பட்டது. ஆகையால் தீங்குதரக்கூடிய செயல்களைச் செய்வதில் மக்கள் மத்தியில் ஓரளவு பயம் இருந்தது. ஆனால், இன்றைய தலைமுறையினர் ஆன்மீகத்தைவிட அறிவியலே வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற சூழலுக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். தங்களுடைய வாழ்க்கைப் பதிவினைக் கடவுள் கவனிக்கின்றார் என்பதனைவிட கூகுள் கவனிக்கின்றது என்பதே அவர்களுக்குத் தேவையாக உள்ளது.

ஆக்கத்திற்கு பயன்படும் அறிவியலை இன்று அழிவிற்கே பெருமளவு மக்கள் பயன்படுத்துவதன் காரணம் தங்களை யாரும் கவனிக்கவில்லை என்ற தைரியமே எனலாம்.

**பண்பாடு மற்றும் சமயங்கள் செல்வாக்கு பெற்றிருப்பதான காரணிகள்**

விழுமியங்கள் என்பதைக் குறிக்கும் போது ஒவ்வொரு சமூகத்திலும் சில எண்ணக்கருத்துக்கள் எது நல்லது என்றுசுட்டிக்காட்டுகின்றன. மேலும், இத்தகைய எண்ணக்கருத்துக்கள் எவற்றை அடைவது நல்லது என்பதையும் அதற்கான வாழ்க்கைமுறையையும் சுட்டிக்காட்டுகின்றன. இதையே விழுமியங்கள் என்றும் மதிப்பீடுகள் என்றும் குறிப்பிடுகின்றனர் எனலாம்.

இந்த அடிப்படையில் மனிதன் எதனை அடைய வேண்டும் என்பதையும், அதை அடைவதற்கான வழிமுறைகள் என்ன என்பதையும் சுட்டிக்காட்டுவதில் பண்பாடும், சமயமும் முதலிடம் பெறுகின்றன. மனிதன் பெரும்பாலான

நேரங்களில் தனக்கென வாழ்வதைவிட சமுதாயத்தின் பார்வையில்தான் எப்படித் தெரிகின்றோம் என்பதற்காகவே வாழ்கின்றான் என்பதே உண்மை. அந்தநிலையில் மனிதன் செய்யவேண்டுவதையும், செய்யக்கூடாதவற்றையும் இவை இரண்டுமே தீர்மானிக்கின்றன. இந்தக் கட்டமைப்பில் பொருந்தி வாழும் மனிதன் உயர்ந்தநிலையை அடைய இயலுகின்றது.

ஒருமுறை கர்ணன் மழைக்காலம் என்பதால் தன்மகளின் திருமணத்திற்கு விறகு கிடைக்கவில்லை என்று வருந்தி நின்ற அந்தணருக்குத் தன்னுடைய வீட்டுமர உத்திரங்களை அறுத்துக் கொடுத்தான் என்று ஒருகதை உண்டு. அத்தகைய உயர்ந்தகொடைத்திறன் கொண்ட கர்ணனிடம் பின்னாளில் அவனது புண்ணியங்களைத் தானமாகக் கேட்டு கண்ணனே கையேந்தி நின்றான். கொடைஉள்ளம் உடையவனிடம் இறைவனே கையேந்துகின்றான் எனும்போது அந்தக்கணம் எவ்வளவு உயர்ந்தது. சமயம் கற்றுக் கொடுக்கும், கொடுப்பதில் அளிக்கும் இந்த இன்பத்திற்கான மதிப்பு மனிதர்களைக் கொடைப்பண்பு நிலைக்கு உயர்த்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மனிதனுடைய தினசரி வாழ்க்கை முறையில் அவன் எப்படி நடந்து கொள்ளவேண்டும், எப்படி நடந்துகொள்ளக்கூடாது என்பதனைத் தீர்மானம் செய்வதில் பண்பாடு தொடர்பான வரைமுறைகளும் சமயம் தொடர்பான வரைமுறைகளும் முதன்மைபெறுவதன் வழி அவை மிக இன்றியமையாத காரணிகளாக அமைகின்றன.

**வாழ்வில் பண்பாடு சமயமதிப்பிற்கான தாக்கங்கள்**

மனிதவாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகளில் பண்பாடும், சமயமும் முதன்மை இடம் வகிக்கின்றன.

சங்ககாலத்தில் மனிதகுலம் முழுமையும் தத்தம் கடமைகளை ஆற்றவேண்டும் என்றும் கருதி வாழ்ந்தனர்.

“ ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ் சமம்முறுக்கி

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.” (புறம்.312 : 1-6)

என்ற பாடல் பண்டைத் தமிழரின் வீரப்பண்பாட்டினை விளக்குவதாக அமைந்துள்ளது. இதன்தாக்கத்தின் அடிப்படையிலேயே,

“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆயமகள்“ ( கலி.103 : 63-64 )

என்ற கருத்தாக்கம் வலிமை பெற்றது. மேலும், பகிர்ந்துண்டு வாழ்வதே மனித மாண்பு. புகழ்தரும் செயல்களை மட்டுமே மனிதர்கள் செய்யவேண்டும். பழி ஏற்படும் என்றால் உலகே கிடைப்பதாயினும் அத்தகைய செயலைச் சான்றோர்கள் செய்யமாட்டார்கள் என்பதனை,

“உண்டால் அம்ம இவ்வுலகம்- இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும் ‘இனிது’ எனத்

தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்;

துஞ்சலும் இலர் பிறர்அஞ்சுவதுஅஞ்சிப்

புகழ் எனின் உயிரும்கொடுக்குவர் பழிஎனின்

உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

அன்னமாட்சிஅனையர்ஆகித்

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர்உண்மையானே” ( புறம் – 182:1-9 )

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் வழி அறியலாகின்றது.

இதன் எதிரொலியாகச் சங்ககாலத்தில் வறுமையில் வாடுபவர்களாக இருந்தாலும்கூட தம்மிடம் இருக்கும் பொருட்களை மற்றவர்களுடன் பகிர்ந்துண்ணும் பண்புநிலை பெற்று இருந்தனர் எனலாம். இரவலர்கள் வள்ளல்களிடம் பெருமளவு பொருள்பெற்ற பின்னரும் அவர்கள் மீண்டும் வறுமைநிலை அடைந்ததன் காரணம் அவர்கள் அனைத்தையும் தமக்கு என வைத்துக் கொள்ளாது எல்லோருக்குமாகக் கொடுத்து வாழ்ந்ததன் காரணமே எனலாம். குமணனிடம் பரிசுபெற்ற பெருஞ்சித்திரனார் தன் மனைவியிடம் கூறுவதாக அமைந்த பாடல் இதற்குச் சான்றாகஅமைகின்றது.

“இன்னோர்க்கு என்னாது என்னோடும்சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோருக்கும் கொடும மனைகிழவோயே” (புறம் – 163:5-7 )

என்ற பாடலடிகள் பண்பாட்டு விழுமியங்கள் சமூகத்தைச் சிறந்தமுறையில் பண்படுத்தி இருந்தமைக்கான பிரதிபலிப்பாக அமைகின்றன.

தமிழர் வாழ்வில் காலந்தோறும் வெவ்வேறு வகையான பண்பாடுகள் கலந்து கொண்டேவந்துள்ளன. பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடுபொருள் சாராபண்பாடு என்று இரண்டு வகையாகக் குறிப்பிடுவர். பொருள்சார் பண்பாடு என்பது மக்கள் தங்கள் வாழ்வில் பயன்படுத்தும் பொருட்கள் அடிப்படையில் அமைகிறது. பொருள்சாரா பண்பாடு என்பது நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் தொடர்பான கருத்துகளின் அடிப்படையில்அமைகின்றன.

பொருள்சார் பண்பாட்டின் அடிப்படையில் ஆடை, அலங்காரம், உணவு போன்ற அனைத்திலும் மேற்கத்திய பண்பாடு இன்று நம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆயினும், நம் உணர்வுகளின் அடிப்படையில் அமையக்கூடிய பொருள்சாராப் பண்பாடுகள் மறைந்து வருவதுபோலத் தோன்றினாலும் இன்னும் தமிழ்ச் சமூகத்தின் மன அடித்தளத்தில் அன்பு, விருந்தோம்பல், பிறருக்கு உதவுதல் போன்ற விழுமியங்கள் இன்னும் நம்மிடையே இருந்து கொண்டுதான் இருக்கின்றன. மனிதசமூகத்திற்கு என்று ஏதேனும் இடர்ப்பாடுகள் வரும்நேரத்தில் மனிதர்கள் அனைவரும்

ஒன்றிணைந்து இடர்ப்பாடுகளுக்கு எதிராகப் போர் புரியும் தருணங்களே இதற்குச் சான்று. இயற்கையின் சீற்றம் ஏற்படும் நேரங்களில் கரம் கொடுக்கும் மனிதச் சமூகத்தின் இப்பண்பாட்டு விழுமியங்கள் அந்தநேரத்தில் மட்டும் செயல்படாமல் மற்ற நேரங்களிலும் செயல்புரிய சிறுவயதில் இருந்தே குழந்தைகளுக்கு இப்பண்பாட்டு விழுமியங்களைக் கற்றுத் தருவதே சிறப்பு.

**பயிற்சி வினாக்கள்**

**1. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்க**

அ எது பண்பாடு - விளக்குக

ஆ. எது சமயம் விளக்குக

இ. பண்பாட்டு மதிப்புகளின் முக்கியத்துவம் குறித்து எழுதுக

**2. கீழ்க்கண்ட வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக**

அ. பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளை எடுத்தெழுதுக

ஆ. சமய மதிப்புகளின் அடிப்படைக்கூறுகளை விரிவாக விளக்குக

இ. வாழ்வில் பண்பாட்டு சமய மதிப்பிற்கான தாக்கங்கள் குறித்து விரிவாக விடை தருக

# கூறு 4 - தொழில் சார்ந்த மதிப்புகள்



உழைப்பவர்களின் கையில் தான் உலகம் இருக்கின்றது பிறர் உழைப்பில் வாழ்பவன் ஒரு நாளும் முன்னேற முடியாது – **மகாத்மா காந்தியடிகள்**

## அறிமுகம்

மதிப்புக்கல்வி என்பது மனிதனின் மனநலம் மற்றும் உடல் நலத்தின் வளர்ச்சிக்கு உதவும் கல்வி முறையாகும். மேலும், மானுட நடத்தை விதிகளை ஒழுங்குபடுத்தும் ஒழுக்கநெறிமுறைக் கல்வியாகும். தொழில்மதிப்பு என்பது அதனோடு சேர்ந்த ஒரு செயல்முறைப் பயிற்சியாகும். தொழில் மதிப்புக்கல்வியைக் கற்றஒருவன் அத்திறன்களைத் தனி மற்றும் பொதுமேம்பாட்டிற்குப் பயன்படுத்துவான். அத்திறன் மேம்பாடே தொழில் மதிப்புக் கல்வியாகும். ‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது’ என்ற முன்னோர்வாக்கு தொழில் மதிப்புக் கல்வியின் தேவையை நமக்கு உணர்த்து கின்றது. கற்றறிந்த வாழ்வியல் நெறிகளை செயல்முறைபடுத்தும் திறன்மேம்பாடே தொழில்மதிப்பாகும்.

## தொழில் சார்ந்த மதிப்புகளின் தேவைகள்

தொழில் சார்ந்த மதிப்புகள் என்பது பணியிடத்தில் கடைப்பிடிக்கும் சிறந்த வணிகப்பண்பாகும். மக்கள்தொகைப் பெருக்கமுள்ள நமதுநாட்டில் மனிதவளத்தைத் தொழில்மேம்பாட்டிற்குப் பயன்படுத்துதல் அவசியமாகும். தொழில்களைத் தொடங்குவோர், தொழில்மதிப்புகளைக் கடைப்பிடித்தால்

அவரது தொழில் சீரிய முறையில் நடைபெறும்.அத்தகைய தொழில் மதிப்புகளைக்கற்கும் மாணவர்கள், பின்னாளில் சிறந்த தொழில்முனைவோராக உருவெடுப்பர்.சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் தொழில் சார்ந்த மதிப்புகள் பின்வரும் காரணிகளைக் கவனப்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றது.அவையாவன,

- வறுமை ஒழிப்பு
- வேலைவாய்ப்பை உருவாக்குதல்
- உணவுஉற்பத்தியை அதிகரித்தல்
- தொழில்வளத்தைப் பெருக்குதல்
- தனித்திறன்களை வெளிக்கொணர்தல்
- அறியாமை அகற்றல்
- தனி மனித பொருளாதார உயர்வு
- நாட்டின் பொருளாதார உயர்வு
- தனி மற்றும் குழு ஒருங்கிணைப்பின் மேன்மை
- வேலையில்லாப் பட்டதாரிகளைப் புதிய தொழில் முனைவோராக உருவாக்குதல்

நாட்டின் பொருளாதார வளம் பெருகுவதற்கு மாணவரிடையே அறியாமை அகற்றல் முதன்மைப்பணியாக அமைகின்றது. உணவுஉற்பத்தியை அதிகரித்தலும்,வறுமையை ஒழித்தலும் மாணவர்களிடம் இருக்கும் தனித்திறன்களை வெளிக்கொணர்தல் மூலம் நிகழலாம். இவையாவும் இன்றைய சூழலில் தொழில்செய்வோர் அறிந்து கொள்ளவேண்டிய தொழில் சார் மதிப்புகளாகும்.

மேலும், ஒரு தொழில்நிறுவனம் தொழிலின் இலாபத்தை மட்டுமே அடிப்படையாக கொள்ளாமல் பலசீரிய பண்புகளையும் கடைப்பிடிக்கவேண்டும்.

- அடிப்படை மனிதப்பண்புகள்
- பொதுமக்களிடையே நம்பகத்தன்மை உருவாக்குதல்
- இலாபத்திற்காக தரத்தைக் குறைக்காமை
- தொழிலாளர்களின் நலனை முன்நிறுத்தல்
- சமூகநலன்

அடிப்படை மனிதப்பண்புகளைக் கவனத்தில் கொண்டுள்ள தொழில்நிறுவனம் தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்துதல் வேண்டும். குறிப்பாக பெரிய தொழில்நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கை ஆதாரத்தை முன்னிட்டு வீட்டு வசதி, பள்ளி, கல்லூரி, மருத்துவமனை போன்ற

அடிப்படை நலனில் உதவிக்கரம் நீட்டுகின்றது. இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் தரமான பொருளை உற்பத்தி செய்து பொதுமக்களிடையே நம்பகத் தன்மையை உருவாக்குதல் தொழில்நிறுவனத்தின் தலையாய கடமையாகும். தொழிலாளர் நலனோடு சமூகநலனையும் கருத்தில் கொண்டு செயல்படும் தொழிலகமே தொழில்சார்ந்த மதிப்புகளின் தேவைகளை உணர்ந்த நிறுவனமாகப் போற்றப்படும்.

## வாழ்க்கையை உயர்த்த உதவும் முக்கியத் தொழில் சார்ந்த மதிப்புகள்

எத்தொழில் புரிவோராக இருந்தாலும் வாழ்க்கையை உயர்த்த உதவும் முக்கியத் தொழில் சார்ந்த மதிப்புகளை அறிந்து நடத்தல் தொழிலுக்கும் அத்தொழில்சார்ந்த நிறுவனத்திற்கும் நன்மை பயக்கும் என்றுவணிகமேலாண்மை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். உணவு, உடை, உறையுள் ஆகிய தேவைகளை நிறைவேற்றும் தொழிலாளர்கள் தாம் மேற்கொள்ளும் தொழிலில் நேர்மை, பொறுப்புணர்வில்ஈடுபாடு, காலந்தவறாமை, ஆரோக்கியமான உடல்நலத்தில் கவனம் கொள்ளுதல், மனஉறுதி, இடைவிடாத உழைப்பு, குழுஒருங்கிணைப்பு, புதிய சிந்தனைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம்,பழமையைப் போற்றும் ஒழுகலாறு, சகபணியாளர்களுக்கு மதிப்புக் கொடுத்தல், பணிச்சூழலுக்குள்தன்னை அர்ப்பணித்தல், பணிச்சுமையால் உண்டாகும் மனஅழுத்தம் ஏற்படாது சிறந்த மனஅமைதியோடு இருத்தல், சினமின்மை, பணியாளர்களுக்கு இடையிலான உறவுநிலையறிதல் இவற்றோடு கூடிய சூழல்தகவமைவு போன்ற வாழ்க்கையை உயர்த்த உதவும் முக்கியத் தொழில் சார்ந்த மதிப்புகளை தன்னகத்தே கொண்டிருப்பது சிறப்பாகும்.

## தொழில் சார்ந்த மதிப்புகளை உயர்த்திக் கொள்வதற்கான வழிமுறைகள்

பணியிடத்தில் ஒவ்வொரு பணியாளரும்வாழ்க்கையை உயர்த்தும் தொழில்சார்ந்த மதிப்புகளைப் பின்பற்றுதல் அவசியம். அத்தகைய மதிப்புகளே தம்மை உயர்த்திக் கொள்ளும் வழிமுறைகளாகும். அவ்வழிமுறைகளாவன,

1. நேர்மை
2. பொறுப்புணர்வும் ஈடுபாடும்
3. ஒழுக்கம் அல்லது தொழில் ஒழுகலாறுகள்
4. கூட்டுமுயற்சி
5. நடுநிலைமை

6. மனஅமைதி காத்தல்
7. மனஉறுதிகொள்ளல்
8. இடைவிடாதஉழைப்பு
9. காலந்தவறாமை
10. புதியன கற்றுக்கொள்வதில்ஆர்வம்
11. உடல்நலம் பேணல்
12. அறியாமை அகற்றல்
13. பணிச்சூழல் தகவமைவு

**நேர்மை**

நேர்மை என்ற குணநலன் பகுத்தறிவு உடைய மானுடன் பின்பற்றப்படக்கூடிய பொதுமைப் பண்பாகும்.நேர்மை என்பதனை ஆங்கிலத்தில் Integrity என்று அழைப்பர்.மனித ஒழுகலாறுகளில் கடைப்பிடிக்கும் நேர்மைக்கும் வணிகநேர்மைக்கும் மனித நலமே முதன்மையாகும்.பணியிடத்தில் மற்றவருடன் ஒருங்கிணைந்து பணியாற்றும் போது நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.பின்வரும் கதையானது நேர்மைக்குக் கிடைக்கும் பரிசினை பதிவுசெய்துள்ளது.

“ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால்,அந் நிறுவனத்தின் பொறுப்பை தன்னிடம் வேலை செய்யும் ஒரு திறமையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். பணியாளர்கள் அனைவரையும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார். உங்களில் ஒருவர் தான் என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும், அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். யார் வெற்றியடைகிறார்களோ? அவர் தான் அடுத்த மேலாளர் என்றார். முதலாளி தன் கையில் வைத்திருந்தஏராளமான விதைகளைப்பணியாளர்கள் அனைவருக்கும் ஆளுக்கு ஒன்றாகப் பிரித்துக் கொடுத்தார். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து அடுத்த வருடம் என்னிடம் காட்ட வேண்டும். யார் செடி நன்றாக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார். அந்நிறுவனத்தில் பணிபுரியும் ரபீக்கும் ஒரு விதையை வாங்கிச் சென்றான். தன் மனைவியிடம் முதலாளி சொன்ன அனைத்தையும் சொன்னான். அவன் மனைவி தொட்டி, உரம், தண்ணீர் எல்லாம் கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள்.ஒரு வாரம் கழிந்தது.

நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் ரபீக்கின் தொட்டியில் செடி இன்னும்வளரவே ஆரம்பிக்கவில்லை.

ஒரு மாதம் ஆனது செடி வளரவில்லை, நாட்கள் உருண்டோடின ஆறு மாதங்கள் ஆனது அப்பொழுதும் அவன் தொட்டியில் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கிவிட்டேனா என்று புலம்பினான். ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை ரபீக் நிறுத்தவில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் ரபீக் சொல்லவில்லை.

ஒரு வருடம் முடிந்து விட்டது எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். ரபீக் தன் மனைவியிடம் வளராத செடியை நான் எங்ஙனம் எடுத்துச்செல்வேன் என்று வருந்திக் கூறினான். அவன் மனைவி அவனை சமாதானப்படுத்தி நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. நீங்கள் நேர்மையாக நடந்து கொண்டீர்கள். தொட்டியை எடுத்துச் சென்று உங்கள் முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள். ரபீக்கும் காலி தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றான். எல்லார் தொட்டியையும் பார்த்தான். விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. இவன் தொட்டியைப் பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி எல்லாரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு சொன்னார். “அருமை” எல்லாரும் செம்மையாக செடியை வளர்த்து உள்ளீர்கள். உங்களில் ஒருவர் தான் இன்று பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்போகிறீர்கள் என்றார். எல்லாருடைய செடியையும் பார்வை இட்டார். ரபீக் கடைசி வரிசையில் நின்றிருந்தான். அவனை அருகே வருமாறு அழைத்தார். ரபீக் தன்னை வேலையை விட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே சென்றான். முதலாளி ரபீக்கிடம் உன் செடி எங்கே? என்று கேட்டார். ஒரு வருடமாக அந்த விதையை நட்டு, உரமிட்டு தண்ணீர் விட்டதை விவரமாகக் கூறினான்.

முதலாளி ரபீக்கைத் தவிர அனைவரும் உட்காருங்கள் என்றார். பிறகு ரபீக் தோளில் கையை போட்டுக்கொண்டு நமது நிறுவனத்தின் நிர்வாகத்தை

ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான் என்றார். ரபீக்கிற்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லை. பிறகு ஏன் நமக்கு இந்த பொறுப்பைக் கொடுக்கிறார் என்று குழம்பிப்போனார். சென்ற வருடம் நான் ஆளுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்கச் சொன்னேன் அல்லவா அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் [Boiled seeds]. அந்த விதைகள் அவிக்கப்பட்டதால் அது முளைக்க இயலாது. நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்குப் பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்தீர்கள். ரபீக் மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டான், ஆகவே அவனே என் நிறுவனத்தை நிர்வாகிக்கத் தகுதியானவன் என்றார்.வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான். உண்மையும், நேர்மையும் தர்மத்தைப் பாதுகாக்கும். நேர்மை ஒரு போதும் வீண்போகாது. நேர்மையை விதையுங்கள். பதவியும், பணமும் தேடிவரும்.(இக்கதை இறையன்புவின் இலக்கியத்தில் மேலாண்மை நூலில் எடுத்தாளப்பட்டது)

## பொறுப்புணர்வும் ஈடுபாடும்

பொறுப்புணர்வு என்பதனை ஆங்கிலத்தில் Responsibility என்று அழைப்பர். பணியிடத்தில் நம்மை தனித்துக் காட்டும் சிறப்பான குணநலன் பொறுப்புணர்வு ஆகும். பொறுப்புணர்வு இருப்பவரிடம் தான் முழுமையான ஈடுபாடு இருக்க முடியும். இப்பணிமுறை “தாய் – சேய் உறவு நிலை” போன்றது. சேயின் வளர்ச்சிக்கு மிகுந்த கவனத்தோடும் ஈடுபாட்டோடும் தாயின் அர்ப்பணிப்பு மட்டுமே சாத்தியமாகும்.“ஈடுபாடு இல்லாமல் எந்தப் பணியைச் செய்தாலும் அது வயலுக்குப் பாய்ச்சும் நீராக இல்லாமல், விழலுக்கு இறைத்த நீராகிவிடும். ஈடுபாடு என்பது தனித்து நிகழ்வது அல்ல. எல்லாவற்றையும் ஈடுபாட்டுடன் செய்பவரே தம் அலுவலகப் பணியிலும் ஈடுபாட்டுடன் இருப்பர். உலகத்திலேயே தலைசிறந்த உணவு விடுதிகளைக் காட்டிலும், தாய் தயாரிக்கும் உணவே தன்னிகரற்றது என்பதற்குக் காரணம் அது ஈடுபாட்டுடன் ஆக்கப்படுவதால்தான்”என்ற இறையன்பு அவர்களின் கருத்து ஒப்புநோக்கவேண்டியது.

வறண்ட பகுதியில், கையில் மண்வெட்டியுடன் புதர்களைக் கொத்திக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனை அவ்வழியே வந்த பெரியவர் ஒருவர் பார்த்தார்.

எள் போட்டாலும்விளையாத இந்த இடத்தில் ஏன் வீணாகக் கொத்திக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டார். அவனோ அதற்குத் தன் புன்னகையை மாத்திரம் பரிசாக அளித்துவிட்டு மறுபடியும் தன் பணியைச் செய்ய ஆரம்பித்து விட்டான். தன் தலையில் அடித்துக் கொண்டு அப்பெரியவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இடத்தை மறுபடியும் அவர் கடக்க நேருகையில் அடையாளம் தெரியாதபடி அது அழகாகி இருந்தது. அவர் விழிகள் வியப்பால் விரிந்தன. அப்போதும் அவன் அங்கே இருக்கிற செடிகளுக்கு இயற்கை உரத்தை இட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் அவர் கேட்டார். மண் வளமில்லாத இந்நிலத்தில், மழைவளம் இல்லாத இப்பகுதியில் எப்படி உன்னால், இப்படியோர் சொர்க்கச் சோலையை உருவாக்க முடிந்தது. அவன் சிரித்தவாறே சொன்னான்.

உங்கள் கண்களுக்கு இதைப் பார்க்கிறபோது களர்நிலமாகவே தெரிந்தது. ஆனால், எனக்கோ இதில் சோலை மட்டுமே தென்பட்டது. இதற்குள் ஒளிந்து கிடக்கும் சோலையை வெளிக்கொண்டு வர முழு ஈடுபாட்டுடன் உழைத்தேன். என் மனதை அதில் செலுத்தினேன். என் கை படப்பட மண் மசிந்தது. கல் கசிந்தது. பாறை இளகியது. வான் சுரந்தது. வளம் நிறைந்தது. நான் என் காட்சியில் கண்ட வடிவத்தை அனைவர் காட்சிக்கும் உட்படுத்தியது மட்டுமே என்னுடைய பணி" என்று அந்தத் தொழிலாளி வழிப்போக்கனிடம் கூறினான்.இது அத்தொழிலாளியின் இலட்சியத்தை நோக்கிய பொறுப்புணர்வையும் முழுஈடுபாட்டையும் நமக்கு உணர்த்துகிறது.(இக்கதை இறையன்புவின் பணிப்பண்பாடு என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது)

ஒரு நிறுவனத்தில் பங்காற்றும் பணியாளன், தொடங்கும் வேலையின் வெற்றிக்கும், தோல்விக்கும் நாமே பொறுப்பு என்ற மனநிலையை உருவாக்கி முழுஅர்ப்பணிப்பையும் அத்தொழிலிலே செலுத்த வேண்டும். இக்குணம் இருப்பவரிடம் தான் செயலின் முடிவு குறித்தக் கடமையுணர்வு மேலோங்கியிருக்கும். இவற்றைத்தொழில்நிறுவனங்களில் பணிபுரிவோர்அந்நிறுவன வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வோடு பணியாற்ற வேண்டும். உதாரணமாக,பணிபுரியும் இடத்தில் தமக்கு வழங்கப்பட்ட மின்வசதி,குடிநீர்வசதி,கோப்புகள்,இயந்திரங்கள் போன்றவற்றை தமது உடைமை என்ற பொறுப்புணர்வுடன் சேதம் விளைவிக்காது பாதுகாக்க வேண்டும். ஒருவர், தனியாகச் செயலாற்றும்

போதும், குழுவின் அங்கத்தினராக இருந்தாலும் பொறுப்புணர்வே அவரைத் தனித்து அடையாளம் காட்டும்.

## ஒழுக்கம் அல்லது தொழில் ஒழுகலாறுகள்

Discipline என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ப்பதம் ஒழுக்கம் என்பதாகும். “ஒழுக்கம் விழுப்பம் தரும்.ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.பணிப்பண்புகளில் முக்கியமானது சுயஒழுக்கம் ஆகும்.தனிமனிதனாக செயல்படும் போதும்,குழுவில் சேர்ந்து பணியாற்றும் போதும் தனக்காக வேலை விதிகளைத் திட்டமிட்டு பணிநடைமுறை ஒழுகலாறுகளை சரியாக நிறைவேற்றவேண்டும்.தம்முடன் பணிபுரியும் பெண்தொழிலாளர்களை, நிறுவனத்தின் தலைமையாளர் முதல் சகதொழிலாளர்கள் வரை கண்ணியமாக நடத்தவேண்டும்.பணிபுரியும் இடத்தில் மது அருந்துதல்,புகைப்பிடித்தல் கூடாது.இத்தகைய சுயஒழுக்கம் மட்டுமின்றி தொழிலில் ஏற்றத்தாழ்வு பார்த்தல் கூடாது.முடிதிருத்தும் தொழிலகமாக இருந்தாலும் உயர்ந்த கணினித்தொழில்நுட்ப வேலையாக இருந்தாலும் பணியின் உயர்வு தாழ்வு பாராமல் தொழில் நியதிகளைப் பேணவேண்டும். இனிமையான பணிச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காதவரே தொழில் நிறுவன ஒழுகலாறுகளை முழுமையாகப் பின்வற்றுவர். பணி அறத்தைக் கடைப்பிடிப்பவரால் மட்டுமேசமூக வளர்ச்சிக்கு நன்மையளிக்க முடியும். இத்தன்மையுடையோர் எடுத்துக்கொண்ட வேலையை உயர்வாக எண்ணி கர்வம்கொள்வதும் இல்லை. தாழ்வாக எண்ணி மனம்வெதும்புவதும் இல்லை.

நிறுவன ஒழுக்கம் என்பது பணியிடத்தின் இரகசியங்களைப் பாதுகாப்பதில் அடங்கியுள்ளது. மருத்துவமனைகளில் தமது நோய்களுக்கு மருத்துவம் பார்க்கும் நோயாளிகளின் இரகசியங்களைப் பாதுகாப்பது அங்குள்ள பணியாளர்களின் கடமையாகும்.கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று அறிக்கையை வெளியிடக்கூடாது என்றால் பணியாளர்கள் இரகசியங்களைக் கூறக்கூடாது. அதனைப் போன்று தொழில்துறையின்

ஒப்பந்தங்கள்,உற்பத்திப் பொருளின் தரம் குறித்த நிறுவன இரகசியங்களை பாதுகாத்தல் அவசியம்.

**கூட்டு முயற்சி**



கூட்டுமுயற்சி என்பதனை ஆங்கிலத்தில் Cooperation என்பர்."தனிமரம் தோப்பாகாது" என்று கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தைக் கூறுவர். நான் என்ற உணர்வை அகற்றி நாம் என்ற எண்ணம் வலிமைபெற்றிருக்க வேண்டும். பெரிய தொழில் நிறுவனங்களில் பேரளவு உற்பத்தி செய்ய வேண்டியிருக்கும். ஆதலால், அங்கு கூட்டு முயற்சியே உற்பத்தியில் மிகப்பெரிய பயனளிக்கும். ஒருகை ஓசையை விட பலகை ஓசை அதிக சத்தம் தரும் என்பது போன்று குழுவின் ஒருங்கிணைப்பு பல்வேறு புதிய எண்ணங்களைத் தருவதுடன் ஒருவருக்கொருவர் இணைந்து செயலாற்றும் வேகத்தையும் அளிக்கின்றது.

"கூட்டமாகச் சுற்றித்திரிந்த பறவைகள்ஒருநாள் வேடுவன் விரித்த வலையில் அகப்பட்டுக்கொள்கின்றன. அனைத்துப் பறவைகளும் தன் முழு ஒத்துழைப்பையும் அளித்து ஒருசேரப் பறந்தவுடன் வலையிலிருந்து விடுதலையடைகின்றன." என்ற கதையானது "ஒற்றுமையே பலம்" என்பதனை உணர்த்துகின்றது.

குழு ஒருங்கிணைப்பில் மிகமுக்கியமானது பேதம் கடந்த நிலையாகும். சாதி,மதம்,இனம் போன்ற வேறுபாடுகளைக் கடந்த பொதுமைவுணர்வுடன்பணியாளர்கள் பணியாற்றவேண்டும். எந்தத் தொழிலாக இருந்தாலும் அதன் முழுமைக்கு பலவேறு தொழிலாளர்களின் பங்களிப்பு அவசியமாகின்றது. குறிப்பாக உணவுவிடுதியில் நாம் உணவு அருந்தச்சென்றால், அங்கிருக்கும் உணவு மட்டுமே நமக்கு முழுமையான திருப்தியளிக்காது.காரை நிறுத்துமிடத்தில் நம்மை உபசரிக்கும் பணியாளன் தொடங்கி வாயிலில் நின்று வரவேற்போர் கடந்து உணவருந்தும் இடத்தைத் தூய்மை செய்யும் பணியாளன் முதல் உணவினைக் கேட்டுச்சென்று அதனை விரைவாக இன்முகத்தோடு பரிமாறும் பணியாள் என்றுதொடர்ச்சியாக நாம் பணத்தை செலுத்தும் இடத்தில் நடந்துகொள்ளும் தன்மை வரை அத்தனை பணியாளர்களின் கூட்டுமுயற்சியே நம்மை மீண்டும் அந்த உணவகத்தை நாடவைக்கும்.இதில் நம்கண்ணுக்குப் புலப்படாது சுவை வாயிலாக

உணரப்படும் சமையல் பணியாளர் மிகவும் முக்கியமானவர். சமையல் பணியாளரின் தயாரிப்போடு ஒட்டுமொத்தகுழுஒருங்கிணைப்பால் தான் நம்மை இனியசுவையை உணரவைக்க முடிந்தது.உணவுவிடுதியில் நாம் பயன்படுத்தும் கழிப்பறையின் சுகாதாரத்தை மேம்படுத்தும் தூய்மைப்பணியாளர்களின் கூட்டுழைப்பும் அந்த உணவு விடுதியைநாம் தேர்ந்தெடுக்கத் தூண்டுகோலாகும். ஆகையால் ஒரு நிறுவன வெற்றி பணியாளர்களின் கூட்டு முயற்சியால் மட்டுமே சாத்தியப்படும் என்பதனை நாம் உணரவேண்டும்.

**நடுநிலைமை**



Neutrality என்ற ஆங்கிலச்சொல் நடுநிலைமை என்ற பொருண்மை உடையது.பணிபுரியும் அனைவரையும் சமமதிப்புடன் நடத்தும் உயர்ந்த குணநலன் நடுநிலைமையாகும். தொழிலகத்தின் தலைவர் அல்லது நிறுவனமேலாளர் தனக்குக்கீழ்பணிபுரியும் பணியாளர்களிடம் எந்தவொரு ஏற்றத்தாழ்வும் இல்லாது சமமாக பணிப்பகிர்வு செய்திட வேண்டும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க் கணி (திருக்குறள்,நடுநிலைமை,118)

என்ற குறட்பாவின் அறிவுறுத்தல் தொழில் நிறுவனத்தில் பணிபுரியும் சான்றோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாகும். பணியாளர்களில் தனக்கு வேண்டப்பட்டவர்,வேண்டாதவர் என்ற பாகுபாடு காட்டாமல் அனைவரையும் சமமாகப் பாவித்தல் தொழில் நிறுவன மேலாளரின் உன்னதப் பண்பாகும்.இது நிறுவனத்திற்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் இடையே நட்புணர்வை மேம்படுத்தும். வங்கி போன்ற பெருநிறுவனங்களில் கல்வித்தகுதிக்கு ஏற்ப பணியாளர்கள் பணியமர்த்தப்படுவர். அங்குள்ள மேலாளர் உயர்பதவியில் இருப்பவரை மதிப்புடன் நடத்துவதும்,கடைநிலை தொழிலாளியான காவல்காப்போரை தாழ்வாக எண்ணுவதும் தவறானது. வங்கிப் பாதுகாப்பின் பெரும்பங்களிப்பு காவலாளிக்கு உரியது என்பதனை உணர்ந்து அவர்களின் பணியினை இழிவாகக் கருதாமல் சமமதிப்புடன் நடத்துதல் வேண்டும்.இது மேலாளரின் நடுநிலைமைப் பண்பாகக் கருதப்படுகின்றது.

**மனஅமைதி காத்தல்**

Peace of Mind என்ற ஆங்கிலச்சொல்லுக்கு நிகரான தமிழ்ப்பதம் மனஅமைதிக் காத்தல் என்பதாகும். நிறுவன மேலாண்மையில் முக்கியமானது மனஅமைதிக் காத்தல். இதனை “பதற்ற மேலாண்மை” என்றும் அழைப்பர்.அலுவலகப் பணிச்சூழலில் நாம் எதிர்பார்த்ததும்,எதிர்பாராததும் நிகழலாம்.பணியாளன் இந்த இரண்டு நிகழ்வினையும் எதிர்கொள்ளும் மனநிலையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.பணியில் ஏற்படும் பதற்றமானது நம் உடல்நலத்திற்கு கேடுவிளைவிக்கும்.ஆதலால் அதனை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து பணியைச் சமார்த்தியமாக செய்து முடித்தலே மனஅமைதிக்கு வழிவகுக்கும்.இதுவே திறமையான நிர்வாகிக்கு அழகாகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் ( திருக்குறள்,வலியறிதல்.475)

பணிச்சுமையால் ஏற்படும் மனஅழுத்தத்திற்கு மேற்கண்ட குறட்பா சிறந்த சான்றாகும்.மயில்பீலி தானே என்று பெரும்பாரத்தை அளவுக்கு அதிகமாக ஏற்றும் போது அந்த வண்டியின் அச்சாணி முறிந்து விடும். அதுபோல அதிக பணியின் சுமையால் நமக்குள் மனஅழுத்தம் ஏற்படும். அதனால் அதிக பணியின் போதுசோர்ந்து விடாமல் மனஅமைதிகாத்தல் அவசியாகும். புறச்சூழல்கள் நம் பணியில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும்போது அவைகள் எந்த வகையிலும் பணியின் தன்மையைப் பாதிக்கக்கூடாது. இயற்கையான இடர்பாடுகள் அல்லது பணியாளர்களால் வரும் இடர்பாடுகள் ஆகியவற்றையும் சினமின்றி கையாள வேண்டும்.

சிறு வயது முதலே உணர்ச்சித் திறனை மேம்படுத்தும் வகையில் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதுஅவசியமாகும். முதல் மதிப்பெண் எடுக்காவிட்டால், தொலைத்துவிடுவேன் என்கிற பெற்றோரும், போட்டியில் முதல் பரிசு பெறாவிட்டால் வீட்டிற்குள் நுழையாதே எனக் கண்டிக்கும் அப்பாக்களும், குழந்தைகள் மனத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி அவர்கள் உணர்ச்சித்திறனை மழுங்கடிக்கிறார்கள். முதல் மதிப்பெண் பெற்றவர்கள் எத்தனை பேர் வாழ்க்கையில் மின்னுகிறார்கள் என்கிற ஆய்வை நடத்தினால் அதில் பலர் மிகச் சாதாரணமாகவும், மகிழ்ச்சியற்றும் வாழ்வதைப் பார்க்கமுடியும்.ஆதலால்,பதற்றத்தைச் சரியாகக் கையாளும் பணியாளன் எச்சூழ்நிலையையும் சமாளிக்கும் திறன்பெறுவான்.

**மனஉறுதி கொள்ளல்**



Will Power என்ற ஆங்கிலச்சொல்லினை தமிழில் மனஉறுதி என்றழைப்பர். பணியில் ஆபத்து வருகிறபோது ஓடி ஒளியாமல் நிலைமையைச் சமாளிப்பவனே புத்திசாலி. எடுத்துக்கொண்ட பணியினை எந்தொரு இடையூறும் கண்டு கலங்காது மேற்கொள்பவனே மனஉறுதி உடையவன்.நெருக்கடியான பணிச்சூழல்,எதிர்மறையான எண்ணங்கள்,நம்பிக்கையைக் குலைக்கும் நிகழ்வுகள் என்று நமது பணியினை அச்சறுத்தும் இடையூறுகளைக் கண்டு பயந்து பின்வாங்கக் கூடாது.நம்பிக்கையே முதல் மூலதனம் என்பதனை மனதில் கொள்ளுதல் அவசியம்.

ஜென் இலக்கியத்தில் ஒரு கதை உண்டு. புகழ் பெற்ற ஒரு புத்த மடாலயத்தில் இளம் துறவி ஒருவர் இணைவதற்காக வந்தார். அந்த மடத்தின் தலைவர் முடியாது என்று மறுத்தார். ஆனால் இளந்துறவியோ அங்குதான் பயிற்சியைத் தொடர்வது என்பதில் உறுதியாக இருந்தார். உயிரைப் பணயம் வைக்குமளவு அந்த இளைஞர் தயாராக இருக்கிறாரா என்பதை அறிந்து கொள்ள நினைத்தார் தலைமைத் துறவி. எனவே அவர் அந்த மடாலயத்திலேயே சிறப்பாகச் சதுரங்கம் விளையாடும் துறவியை அழைத்தார்.

அந்த இளைஞரைப் பார்த்து ‘எங்கள் மடத்தில் சிறப்பாகச் சதுரங்கம் விளையாடும் துறவியோடு நீ சதுரங்கம் விளையாட வேண்டும். நீ வெற்றி பெற்றால் உன்னை மடத்தில் இணைத்துக்கொள்கிறோம். தோல்வியுற்றவர் தலை துண்டிக்கப்படும் என்று அறிவித்தார். சவாலை அந்த இளைஞர் ஏற்றுக்கொண்டார்.

இளைஞரும் துறவியும் சதுரங்கம் விளையாட ஆரம்பித்தார்கள். ஒவ்வோர் அசைவையும் இருவரும் உன்னிப்பாக எடுத்துவைத்தனர். இரண்டு பக்கமும் சமமாகவே நெடுநேரம் நீடித்தது. அதீத விழிப்புணர்வு அங்கே கொடிகட்டிப் பறந்தது. விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த அத்தனை துறவிகளும் ஆச்சரியமடைந்தார்கள். அப்போது திடீரென அந்த மடத்தின்

துறவி ஒரு தப்பான அசைவை ஆடினார். முக்கியமான காய் வெட்டப்பட்டது. துறவியை இளைஞர் எளிதில் வெற்றி கொள்ளலாம் என்கிற நிலை ஏற்பட்டது. அப்போது அந்த இளைஞர் வேண்டுமென்றே காய்களை வெட்டுக் கொடுத்துத் தோற்பதற்காக ஆடினார் என்பது தலைமைத் துறவிக்குப் புரிந்தது.

ஏற்கெனவே மடத்தில் இருக்கும் துறவியின் தலை வெட்டப்படக்கூடாது என்கிற மனநிலையும், சந்நியாசத்தின் மீதிருந்த மரியாதையும் தான் அந்த இளைஞனை அவ்வாறு ஆட வைத்தது. உடனே, தலைமைத் துறவி "போதும் நிறுத்துங்கள் என்று விளையாட்டை நிறுத்தி அந்த இளைஞரைச் சேர்த்துக் கொண்டார். சந்நியாசத்திற்குக் கூட உயிரைப் பணயம் வைப்பது போன்ற துணிச்சல் தேவை என்பதையும் விழிப்புணர்வுடன் இருப்பவர்கள் எந்த ஆபத்தான நிலையையும் எதிர்கொள்ளலாம் என்பதையும் இச்சம்பவம் உணர்த்துகிறது. (இக்கதை இறையன்புவின் இலக்கியத்தில் மேலாண்மை நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது.)

இன்றைய சூழலில் நிறுவனங்களை நிர்வகிக்க வெறும் மேற்பார்வை மட்டும் போதாது, தலைமைப் பண்பும் தேவை. உணர்ச்சித்திறன் இல்லாமல் நுண்ணறிவு மாத்திரம் இருந்தால் முடிவுகள் எடுப்பதிலும், எதிர்ப்புகளைத் தாங்குவதிலும், நெருக்கடிகளைச் சமாளிப்பதிலும் பலவீனமடைந்து தோல்வியடைந்து விடுவார்கள். சிறுபிரச்சினைக்களுக்கு தொட்டாச்சிணுங்கிப் போலச் சுருங்கும் மனம் உடையவர்கள் எவ்வளவு அறிவும், திறமையும் இருந்தாலும் நிறுவனத்தில் நிலைத்திருக்க முடியாது.

## இடைவிடாத உழைப்பு





Non-stopWork என்று ஆங்கிலத்தில் கூறும் சொல்லாக்கம் ஓயாத உழைப்பு என்று தமிழ்ப்பதத்தைத் தருகின்றது."உழைப்பே உயர்வு" என்பது முன்னோர் வாக்கு. நாம் எக் காரியத்தை திட்டமிடுகிறோமோ அக்காரியத்தை நோக்கி ஓயாத உழைப்பை அளிக்க வேண்டும். தொழில்முனைவோர் தமது இலக்கினை திசைமாற்றும் பல தடைகளையும் உழைப்பால் முறியடிக்க வேண்டும். வெற்றி பெற்ற பல தொழிலதிபர்களின் கதைகள் இடைவிடாத உழைப்பின் மேன்மையை நமக்கு உணர்த்துகின்றது.

வி. ஜி. பன்னீர்தாஸ் என்பவர் நெல்லை மாவட்டம் வள்ளியூருக்கு அருகில் உள்ள அழகப்பாபுரத்தில் பிறந்தவர்.அவரின் குடும்பச் சூழல் வறுமை நிறைந்தது. அந்த வறுமையை தன் இடைவிடாத உழைப்பால் வெல்ல நினைத்த மாமனிதர் அவர். பிழைக்க வழிதேடி தன் பன்னிரண்டாவது வயதில் இருபத்தைந்து ரூபாயுடன் சென்னைக்கு செல்கின்றார். அங்கு முதலில் மளிகைக் கடையில் வேலைக்குச் சேர்ந்தவர். அதன் பின் தன் அயராத உழைப்பால்சொந்தமாக டீக்கடையும் பக்கத்தில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையும் தொடங்குகின்றார்.மக்களின் பொருட்தேவைகளை அறிந்து அதற்கேற்ற வியாபாரம் செய்வதில் வல்லவர் ஆகிறார். ஆதலால், தன் வெற்றிலை பாக்குக் கடையில் சிவகாசியிலிருந்து மொத்தமாக காலண்டர்களை வாங்கி விற்று வருகிறார். அச்சமயம் “தாமரை” குறுக்கெழுத்துப் போட்டிக்கான கூப்பன்கள் விற்பனைஆயின. ஒரு ரூபாய் விற்றால் 25 பைசா கிடைக்கும் என்ற நிலையில், தன் தம்பியைத் துணைக்கு அழைத்துக்கொண்டு சென்னைமுழுவதும்சைக்கிள்மூலமாகசுற்றிவந்துகூப்பன்களைவிற்றனர்.அப் போதிருந்த தமிழக அரசு இது சூதாட்டம் என்று கூப்பன் முறையை ஒழித்தது. அதற்கு அவர்கள் அச்சமடையவில்லை. தன் தொழில் மீதிருந்த பற்றுதலால் ஓயாது உழைத்தனர். இரவில் ஒளிவீசும் ரேடியம் பொருத்தப்பட்ட கடிகாரத்தை சந்தாமுறையில் விற்றனர். மேலும்,

மக்களின் அன்றாடவாழ்க்கைக்குத் தேவைப்படும் வீட்டுப்பொருட்களை தவணைமுறையில்விற்கஆரம்பித்தனர். பின்மாதந்தோறும் 10 ரூபாய்வீதம் 12 மாதம்பணம் செலுத்தும் சீட்டுமுறையைஆரம்பித்தனர். கணிசமான இலாபம் கிடைத்தது. இதற்கும் தமிழக அரசு தடைவிதித்தது. ஆயினும், அவர்கள் சோர்ந்து போகவில்லை. நிலவிற்பனை செய்ய ஆரம்பித்தனர். அந்தத் தொழில் அவர்களை உச்சத்திற்குக் கொண்டு சென்றது. சென்னை கிழக்குக்கடற்கரைச் சாலையில் 109 ஏக்கர்நிலத்தில்வி. ஜி.பியுனிவர்சல்கிங்டம் எனும் தீம்பார்க் தொடங்கி இன்று உலகம் போற்றும் வகையில் சிறந்து விளங்குகின்றார்கள். சில்லறை வர்த்தகம் தொடங்கி ரியல் எஸ்டேட்வரை தனது ஓயாத உழைப்பால்வெற்றி கண்டவர்வி.ஜி.பன்னீர்தாஸ். (இக்கதை தமிழகத்து பிசினஸ்மேன்கள் சாதித்த தொழிலதிபர்களின் சரித்திரம் என்ற நூலிருந்து எடுக்கப்பட்டது.)

**காலந்தவறாமை**



Timeliness என்ற ஆங்கிலப்பதத்திற்கு காலந்தவறாமை என்று பொருள். காலம் பொன் போன்றது என்று நடைமுறைவாழ்வில் கூறுவர். பணியாளரின் பணிப்பண்புகளில் முக்கியமானது நேரத்தின் அருமை அறிதலாகும். நாள்தோறும் அலுவலகப் பணிக்குச் செல்லும் காலஅட்டவணையைத் திறம்பட பின்பற்றும் பணியாளனே குறித்த வேலையை குறித்த காலத்திற்குள் முடித்துவிடுவான். தொழில் நிறுவனத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய வேலைகள் முடிக்கப்படாவிட்டால்,கிடைக்க வேண்டிய இலாபம் கிடைக்காமல்,இழப்பு ஏற்படும் அபாயநிலை உண்டாகலாம்.உற்பத்திப் பொருளை ஒப்படைக்க வேண்டிய காலக்கெடு முடித்துத் தாமதமாக ஒப்படைத்தால் நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாகும்.ஆதலால் தான் “காலத்தே பயிர் செய்” என்று விவசாய வேலைக்கான பருநிலையறிதல் குறித்து முன்னோர்கள் கூறியுள்ளனர்.

### புதிய சிந்தனைகளை அறியும் ஆர்வம்

Intrested in learning new ideas என்ற ஆங்கில வார்த்தை புதிய சிந்தனைகளை அறியும் ஆர்வத்தைக் குறிக்கின்றது. இன்றைய கணினி உலகில் பணியாளர்கள் அவற்றின் செயல்திறனை அறிந்து அதிவேகமாகப் பணிபுரியக் கற்றுக்கொள்ளவேண்டும். காலமாற்றங்களுக்கு ஏற்ப நாம் உண்ணும் உணவும் உடுத்தும் உடையும் மாறவில்லை. ஆயினும் உணவு வகைகளின் மாற்றம், உடைகளின் வண்ணம், வடிவம் போன்றவற்றில் நவீனத்துவம் புகுந்துவிட்டன. ஆதலால், மாறிவரும் அறிவியல் சிந்தனைகளின் புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமோடு கற்றுத்தேர்ந்து தொழிலின் உற்பத்திப்பெருக்கத்திற்கும், பணியின் விரைவிற்கும் வழிவகுக்க வேண்டும். போட்டிகள் நிறைந்த வர்த்தக உலகில் ஒரு நிறுவனம் தன்வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள புதிய புதிய உத்திமுறைகளைப் பின்பற்றுதல் அவசியம். உதாரணமாக தேநீர் வியாபாரியின் கதையைக் கூறலாம்.

“விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தன்னுடைய தேயிலையை விற்பதற்காக கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எல்லாக் கடைகளிலும் அவருடைய தேயிலைதான் விற்கப்பட வேண்டுமென்பது அவருடைய கனவு. ஆனால் அந்தப் பகுதியில் அந்தத் தேயிலை அவ்வளவு பரிட்சயமில்லை. அவருடைய வற்புறுத்தல் தாங்க முடியாமல் ஒரு சிலர் இரண்டு மூன்று பாக்கெட்டுகளை வாங்கிப் பார்வைக்கு வைத்தார்கள். ஆனால் ஒருவர் மட்டும்

எவ்வளவு வற்புறுத்தியும் இசைந்து கொடுக்கவில்லை. அந்தப் பிரதிநிதி தன் விற்பனையை அதிகரிக்க புதிய சிந்தனையை கையாள நினைத்தார். தான் நினைத்த விற்பனை உத்தியை செயல்படுத்த, தன்னுடைய மகளை அந்தக் கடைக்கு அனுப்பி, அந்தத் தேயிலை இருக்கிறதா? என்று கேட்டு வாங்கி வரச் சொன்னார். இரண்டாவது நாள் வேறொரு சிறுவன், மூன்றாவது நாள் மற்றொரு மாணவி என்று குறிப்பிட்ட அந்தக் கடையை நோக்கியே பலரும் படையெடுக்க ஆரம்பித்தனர். இவ்வாறான புதிய வழிமுறையால் தேயிலைப் பொட்டலங்களை அதிகமானோர் விரும்பி வாங்க ஆரம்பித்தனர். அவருடைய கடையிலும் அந்தத் தேயிலைப் பொட்டலங்கள் இருப்பதைப் பார்த்ததும்அங்கும் கூட்டம் கூடியது.

பிரதிநிதி பல தேநீர்க் கடைகளில் அந்தத் தேயிலையின் மூலம் இலவசமாகத் தேநீர் தயாரித்து குடிக்க விரும்புகிறவர்களுக்குக் கொடுத்து அதன் ருசியைப் புரிய வைத்தார். நாளடைவில் அந்தத் தேநீர் சுவையான தேநீர்தான் என்பது பரவலாக மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

வியாபாரச் சலுகையாக அதிகமாக தேயிலை வாங்கும் கடைகளுக்குத் தள்ளுபடியும், இலவசத் தட்டும் வழங்கினார். பெண்களுக்குத் தேநீர் தயாரிக்கும் பயிற்சி முறை கற்றுக்கொடுக்க முனைந்தார். உபயோகித்தவர்களிடையே வாசகப் போட்டி என்று பல்வேறு விதங்களில் மக்களின் ஆழ்மனத்தில் அந்தத் தேயிலையைப் பதிய வைத்தார். இரண்டே ஆண்டுகளில், தனக்குப் போட்டியாக இருந்ததேயிலை விற்பனையாளரை வென்று காட்டினார். அந்தப் பிரதிநிதி வேறுபாடுமல்ல என் தந்தைதான். என்று இறையன்புஉண்மையாக நிகழ்ந்த தொழில் அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார். (இக் கதை இறையன்புவின் பணிப்பண்பாடு என்ற நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது.)

கற்றுக்கொள்ளுவதில் ஆர்வம் இருப்பவர்கள் தாம் மேற்கொள்ளும் தொழிலின் புதுநுணுக்கங்களை தம் நிகழ்கால வியாபார அனுபவங்கள் மூலம் கற்றுக்கொண்டு வழக்கமான நடைமுறைகளை மாற்றி புதுமையான அறிவியல் நுட்பங்களைப் புகுத்தி வெற்றி காண்பர்.

**உடல்நலம் பேணல்**

Wellness health என்ற ஆங்கிலப் பதத்திற்கு உடல்நலம் பேணல் என்று பொருள். இன்றைய கணினி உலகில் அதிநவீன இயந்திரங்களோடு பணியாளர்கள் பணிபுரிய வேண்டிய பணிச்சூழல் அமைந்துள்ளது.நகரநாகரிகம்

பெருகியதால் இயற்கை சார்ந்த வாழ்வியல் மறையத்தொடங்கிவிட்டது. சுகாதாரமான காற்றும், சுகாதாரமான குடிநீரும் கிடைப்பதில்லை. இத்தகைய சூழலில் உடல்நலத்தைக் கவனத்தில் கொண்டால் தான் திறமையாகப் பணிபுரிய இயலும். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்ற பழமொழிக்கு இணங்க உடல்நலமே அனைத்திற்கும் அடிப்படை என்பதனை உணர்ந்து தன்னுடைய குடியிருப்புச் சூழல் மற்றும் பணியிடச் சூழலை சுகாதாரமாக வைத்துக்கொள்ளவேண்டும்.


" உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடலைவளர்த்தேன்உயிர்வளர்த்தேனே"

(திருமூலர், திருமந்திரம், மூன்றாம் தந்திரம்,காயசித்தி உபாயம்,பாடல்.1)

திருமூலரின் உடலோம்பல் தத்துவம் உடலின் உன்னதத்தைக் கூறுகிறது. இதனை இன்றைய காலத்தில் தொழிலாளர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். சீனாவில் இருந்து பரவிய கோவிட் -19 என்ற நுண்தொற்றுக் கிருமி உலகநாடுகள் அனைத்திற்கும் பரவியதால், பல்வேறு நாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உயிரிழப்பும் வேலையிழப்பும் நாம் கண்கூடாக காண்கின்ற நடப்பியல் உண்மையாகும். ஆதலால், பணியாளர்களின் உடல்நலம் வெற்றிகரமான பணிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

**அறியாமை அகற்றல்**



Removal of ignorance என்ற ஆங்கில வார்த்தை அறியாமை அகற்றல் என்ற பொருண்மை உடையது. "அறியாமை என்பது நோய்"என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.எவரொருவரும் உலக அறிவு அனைத்தையும் அறிந்தவராக இருக்கமுடியாது. ஆயினும் தெரியாத செய்திகளைக் கற்றுக்கொள்வதில் தவறில்லை. நவீன உலகில் அறிவியல் உபகரணங்கள் பல்கிப்பெருகியுள்ளன. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நாமும் திறனை மேம்படுத்திக்கொள்ளவேண்டும்.பணியிடத்தில் தலைமைக்கு முழுஒத்துழைப்பை ஒவ்வொரு பணியாளர்களும் தந்தால் தான்

எடுத்துக்கொண்ட பணி சிறப்பாக முடிவடையும்.அறிவற்றவர்களை வைத்து மேற்கொள்ளும் பணியை "பரமார்த்தக் குருவும் முட்டாள் சீடர்களும்" என்ற கதை மிகநன்றாக எடுத்துரைத்துள்ளது.

பரமார்த்தகுரு தன் சீடர்களிடம் கிழிந்த ஆடைகளைத் தைக்கும் ஒருஊசி வாங்கி வரக் கூறுகின்றார். குருவின் கட்டளையை ஏற்ற சீடர்கள் ஊசியை வாங்க ஒவ்வொரு கடையாக ஏறிஇறங்குகின்றனர். அங்குள்ள கடைக்ககாரர் ஒருவர் ஊசியை எடுத்து சீடரிடம் தருகிறார். ஆனால் சீடரோ அது எம் குரு கேட்ட ஊசி அல்ல என்று வாங்க மறுக்கிறார்.அதனைப் பார்த்துக் கொண்டிருந்த பக்கத்துக் கடைக்காரார் அங்கு கிடந்த பனைமரக் கட்டையை ஊசி என்று கூறி அதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றுகிறான். முட்டாள் சீடர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணராமல் அந்த பனைமரக் கட்டையை தோளில் சுமந்து கொண்டு குருவிடம் செல்கின்றனர். அதனைப் பார்த்த குரு ஊசி எங்கே? என்று வினவுகிறார் சீடர்களும் குருவே இது தான் ஊசி என்கின்றனர். ஒரு அறிவாளிக் கடைக்காரன் இந்த ஊசியைக் கொடுத்தான் என்று ஐந்து சீடர்களும் ஒன்றாகச் சேர்ந்து கூச்சல் போடுகின்றனர்.அதனைக் கேட்ட பரமார்த்தக் குருவும் ஊசி இப்படித்தான் இருக்குமோ என்று யோசனை செய்ய ஆரம்பித்துவிட்டார். (இக்கதை பரமார்த்தக்குரு கதைகள் என்ற நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது)

நிறுவனம் அறிவார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட தலைமை முதல் கீழ்மட்டப் பணியாளர்கள் வரை அனைவரும் அவரவர் தொழில்குறித்த நுட்பங்களை தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். தொழில் பற்றிய புரிதல் இல்லாது அறியாமை உடையவர்கள் கொண்டு செய்யப்டும் பணி அந்த நிறுவனத்திற்கே கேடு விளைவிக்கும் என்பதனை மேற்கண்ட கதை நமக்கு உணர்த்துகின்றது.

## பணிச்சூழல் தகவமைவு

Workshop Adaptive என்ற ஆங்கிலச்சொல் பணிச்சூழல் தகவமைவு என்ற பொருளைத் தருகின்றது. நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு பணியாளர்கள் வேறுபட்ட கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் கொண்டிருப்பர். சிற்சில நிறுவனங்களில் அயல்நாட்டாரோடு கூட பணிபுரிய நேரிடும். அத்தகைய பணிச்சூழலை நேர்த்தியாக கையாளும் திறன் படைத்தவரே சிறந்த பணிச்சூழல் தகவமைவு பெற்றவராம். பணியாளர்கள் தனது தலைமைக்கும் சகபணியாளர்களுக்கும் ஏற்ற மனநிலைக்கு

ஒத்துப்போவது பல பிரச்சினைகளைத் தவிர்க்கும்.இதனை ஒரு குஜராத்திய நாட்டுப்புறக் கதை வாயிலாக அறியலாம்.

அந்த அரண்மனைக்கு புதிதாக வந்த சமையல் உதவியாளன் தலைமைச் சமையலர் வராதபோது கத்தரிக்காயைக் கொண்டு கறி சமைத்துவிட்டான். அதுவரை கத்தரிக்காயின் சுவை அறியாத மன்னன்அந்தப் புதுக்காயைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, ருசித்து ருசித்துச் சாப்பிட்டான். தனக்குக் கீழ்ப் பணிபுரிந்த மந்திரியிடம் “இந்தக் காய் மிகவும் நன்றாக இருக்கிறதே!”என்றான். மந்திரியும் ‘ஆமாம் ராஜா இது ராஜாக்காய் அதனால் தான் இதன் தலையில் கிரீடம் இருக்கிறது’. என்று கத்திரிக்காயின் காம்பைக் காட்டினான். அதற்குப் பிறகு தினமும் ராஜாவுக்கு கத்தரிக்காயில் விதவிதமான சமையல்கள் செய்து கொடுக்கப்பட்டன.நாளடையில் தினமும் அதையே சாப்பிட்டு மன்னனுக்கு அலுத்துப் போனது. வெறுத்துப்போன மன்னன் “இனிமேல் கத்தரிக்காயைச் சமைக்கக்கூடாது” என்று மந்திரியிடம் கூறினான். மந்திரியும் “ஆமாம்! மன்னா இது ருசியே இல்லாத காய்” என்றான். உடனே மன்னன் அன்று நான் சொன்னதற்கு ராஜாக்காய் என்று ஆமாம் போட்டீர்கள்,இன்று அப்படியே திருப்பி மட்டமான காய் என்று சொல்லுகிறீர்களேஎன்றார்.மந்திரியும் “உண்மைதான் ராஜா. எங்களுக்கு நீங்கள் தானே ராஜா, கத்தரிக்காய் ராஜா இல்லையே!” எனவே நீங்கள் சொன்னதைத்தானே நான் கேட்க வேண்டும்’ என்று குறிப்பிட்டார். (இக்கதை பீர்பால் அறிவுக்கதைகள் என்ற நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது) அதைப்போலவே சூழலுக்கு ஏற்ற தகவமைவினை ஒவ்வொரு பணியாளனும் கொண்டிருந்தால் நிறுவனத்தின் நன்மதிப்பையும் பெறலாம் நுகர்வோரின் தேவைக்கேற்ற விற்பனையை அளித்து நுகர்வோர் நன்மதிப்பையும் பெறலாம்.

## தொழில் சார்ந்த மதிப்புகளின் விளைவுகள்

தொழில்சார்ந்த மதிப்புகளைக் கற்றிந்தோர் உழைக்கும் ஆர்வத்தால் தமக்கானப் பணிகளைத் தாமே தேர்ந்தெடுப்பர். தனிமனிதப் பொருளாதாரம் தொடங்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குஇவர்கள் பெரும்பங்காற்றுவர். ஆசிரியர்கள் மாணவர்களின் திறன்மேம்பாட்டினைத் தூண்டும் விதமாக தொழில்சார் மதிப்புகளைக் கற்றுக் கொடுப்பதுடன் செயல்பாட்டிற்கும் வழிவகை செய்தல் வேண்டும். அவ்வாறுதொழில் சார்ந்த மதிப்புகளின்

தேவைகளை உணர்ந்து செயல்படும் மாணவர்களால் தான் பின்வரும் நல்விளைவுகளைச் சமுதாயத்திற்கு ஆற்றமுடியும்.

- சிறுதொழில் முதல் பெருவணிகம் வரை தன்னம்பிக்கையுடன் பணியாற்ற தொழில்மதிப்பு உதவிபுரியும்.

- அனைவரிடமும் ஏதாவது ஒரு தனித்திறன் இருக்கும். அது அவர்களின் சூழ்நிலை, நேரம், வயதுக்கு ஏற்ப வெளிப்படும். ஆதலால்,நாம் தொழில்மதிப்பினைக் கற்பித்தல் வழி உணர்த்த வேண்டும்.அதனைக் கற்போரும் தொழில் அறம் பேணி சமுதாயத்திற்குப் பயனளிப்பர்.

- மாணவர்கள் தமக்குள் இருக்கும் தனித்திறன்களான ஓவியம் வரைதல், கதை, கவிதை,கட்டுரை எழுதுதல், பேச்சாற்றலை வெளிப்படுத்துதல் என்ற திறன் வழியில் வேலைவாய்ப்பினைப் பெறமுடியும்.

- **பயிற்சி வினாக்கள்**

- **1. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்க**

- அ. தொழில் சார்ந்த மதிப்புகளின் தேவைகள் குறித்து எழுதுக

- ஆ. இடைவிடாத உழைப்பு, காலந்தவறாமை ஆகிய தொழில் சார்ந்த மதிப்புகள் குறித்து எழுதுக

- இ. மன உறுதி, நடுவுநிலைமை ஆகிய தொழில் சார்ந்த மதிப்புகள் குறித்து எழுதுக

- **2. கீழ்க்கண்ட வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக**

- அ. தொழில் சார்ந்த மதிப்புகளின் விளைவுகள் குறித்து விரிவாக விடையளிக்க

- ஆ. தொழில் சார்ந்த மதிப்புகளை உயர்த்திக் கொள்வதற்கான முதல் ஆறு வழிமுறைகள் குறித்து விரிவாக விடையளிக்க

- இ. தொழில்முறை சார்ந்த மதிப்புகளை உயர்த்திக் கொள்வதற்கான இறுதி ஆறு வழிமுறைகள் குறித்து விரிவாக விடையளிக்க

## கூறு 5 - மதிப்புகளைத் தொடர்ந்து வழியுறுத்தும் யுக்திகள்

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்

- **பெரியார்**

### பாடத்திட்டங்கள் வழி மதிப்புகளை வலியுறுத்தல்

உலகில் சிறந்த கல்விமுறையைக் கொண்டிருக்கும் பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை கல்வி கற்கத் தொடங்குகிறது. பதினாறு வயதில் முதல் தேர்வை எதிர்கொள்கிறார். இதைத் தொடர்ந்து இவர் தனக்கான துறையைத் தேர்ந்தெடுத்துப் பயில்வார். ஆனால் நம்நாட்டில் 2½ வயதில் கல்வி மற்றும் தேர்வுப் பயணம் தொடங்குகிறது. 16 மற்றும் 18 வயதில் தனக்கான துறையைத் தேர்ந்தெடுத்துப் பயில வேண்டும். இதற்குப் பந்தையக் குதிரையைப் போன்று மதிப்பெண்ணைப் பெறுவதற்கு (மெக்காலே கல்வி முறையில்) நித்தம் நித்தம் மனனம் செய்து ஒப்புவிக்கும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இக்கல்வியை நாலடியார், "**கல்விக் கரையில கற்பவர் நாள்சில**" என்கிறது. ஔவையார், "**கற்றதுகைம்மண்ணளவு கல்லாததுஉலக அளவு"** என்று குறிப்பிட்டு உள்ளார்.

மனிதன் தன் வாழ்வில் நாலில் ஒரு பங்கு அல்லது நாலில் இரு பங்கைக் கல்விக்காகச் செலவிடுகின்றான். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வி அவனது வாழ்வை வளமாக்குகிறதா? அர்த்தமுடையதாக்குகிறதா? என்று ஆராய்ந்தால் தெளிந்த பதில் கிடைப்பதில்லை. இச்சூழலில் " **ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது**" என்ற சொல்லடையே நினைவிற்கு வருகிறது. கல்வி நிறுவனங்கள் குறிப்பிட்ட ஒரு துறையின் செயல்பாட்டை / நுட்பத்தை / அறிவை மட்டுமே போதிக்கின்றன; போதிக்கவும் முடியும். ஆனால் மனிதனுக்குத் தன்னைச் சுற்றி அன்றாடம் நிகழும் நிகழ்வினை எதிர்கொள்ளும் ஆற்றல் வேண்டும். உலகின் போக்கிற்கேற்ப தன்னை வடிவமைத்துக்

கொள்ளும் திறன் வேண்டும். இதற்கு மனிதன் தன் மதிப்பையும், உலக மதிப்பையும் அறிந்திருத்தல் வேண்டும். '**மதிப்பு**' சார்ந்த கல்வியைப் பெறுவதற்கு நாம் கேட்கும்; பார்க்கும்; வாசிக்கும் அனைத்தையும் உற்று நோக்க வேண்டும். அது சார்ந்த மதிப்பை அறிந்து வாழ்வில் பின்பற்ற வேண்டும். மேலும், மதிப்பு என்பது காலந்தோறும் மாற்றத்திற்குரியது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த தலைமுறையினர் மனிதர்களோடு (உறவுகளோடு) வாழ்ந்தார்கள். பொருள்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்றைய இளம் தலைமுறையினர் பொருள்களோடு வாழ்கிறார்கள். அதற்கு மனிதர்களைப் (உறவுகளைப்) பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற எதார்த்த வாழ்வே சான்றாகும்.

குருகுலத்தில் குருவிற்கு மாணவர்,

" **உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**"

என்று கற்ற முறை பல பரிமாணங்களைக் கடந்துத் தற்போதைய கல்வி முறையில் நிலைபெற்று உள்ளது. இது பயன்பாட்டுக் கல்வி என்றில்லாமல் மதிப்பெண்ணை மையமிட்ட பட்டத்தை / பட்டயத்தை மட்டுமே வழங்குவதாக உள்ளது. வாழ்வியல் மதிப்பைக் கற்பிக்கும் வகையில் அறிவியல் துறையில் பாடத்திட்டம் வகுப்பதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும் மொழிப்பாடம், வரலாறு மற்றும் கலைத் துறையில் மதிப்பை வலியுறுத்தும் விதமாகப் பாடத்திட்டம் வரையறுக்க முடியும்.

போர், உடன்படிக்கை, வளர்ச்சி, வீழ்ச்சி, புரட்சி போன்றவற்றில் வளர்ந்த நாட்டின் செயல்பாடு எங்ஙனம் இருக்கிறது. பொருளாதார வளம் குன்றிய நாட்டின் செயல்பாடு எங்ஙனம் இருக்கிறது என்பதைப் பாடத்திட்டத்தில் விரிவாக எடுத்துரைத்தல் வேண்டும். வெற்றி பெற்றவனின் செயல்பாட்டையும் தோல்வியடைந்தவனின் செயல்பாட்டையும் மதிப்பிடும் ஆற்றலை மாணவச் சமூகம் பெற வேண்டும்.

பெருத்தப் படைவீரர்களையும், போர்க் கருவிகளையும் கொண்ட அலெக்ஸாண்டர், நெப்போலியன், கஜினி முகம்மது மற்றும் கிழக்கிந்தியக் கம்பெனிகள் இந்திய மன்னர்களை வீழ்த்தி விட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதையும் முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர் எழுந்த சூழல், நிறைவு பெற்றதன் பின்னணியையும் அனைவரும் அறிய வேண்டியதாகும். இருப்பினும் இத்தகைய போர்கள் உலகிற்குக் கற்றுத் தந்த பாடம் என்ன? போருக்குப்பின் வென்றவனின் வாழ்க்கைப் போக்கு; தோற்றவனின் வாழ்க்கைப் போக்கு புலப்படுத்தும் உண்மை என்ன? என்பதை வரலாற்று மாணவர்களைச் சிந்திக்கச் செய்யும் வகையிலும் ஒப்பீடு செய்யும் விதத்திலும் பாடத்திட்டம் இருத்தல் வேண்டும். மேலும் போரை விவரி ? புரட்சியை விளக்குக ? என்பதற்கு மாறாக இரண்டாவது உலகப் போரில் தோல்வியைத் தழுவிய ஜப்பானின் தற்போதைய இருப்பை விவரி ? ரஷ்யாவின் தற்போதைய இருப்பு நிலையை விவரி ? என்று தேர்வில் வினாக்களை வடிவமைத்தால் தோல்வியின் எதிரொலியையும் நிலையற்ற வெற்றியைத் தொடர்ந்த மாற்றங்களையும் மாணவர்களால் அறிய முடியும். இது வெற்றி, தோல்வியின் மதிப்பை உணரச் செய்யும்.

**பாடத்திட்டம் சாராத இதர துறைகள் வாயிலாக வலியுறுத்தல்**

ஒரு கல்வியாண்டு என்பது பள்ளிக்கூடத்திற்கு 220 நாள்கள். கல்லூரிக்கு 180 நாள்கள் ஆகும். ஒரு மாணவர் தினந்தோறும் கல்வி நிலையத்தில் சுமார் 3 இல் 1 பங்கு நேரம் இருக்கிறார். கல்வித் திட்டமும், தேர்வு முறையும் மனனம் செய்வதற்கு முக்கியத்துவம் தருவதாக உள்ளது. ஆசிரியர் பாடத்திட்டத்தை நிறைவு செய்வதையும் மாணவர் மனனம் செய்து மதிப்பெண் பெறுவதையும் இலக்காகக் கொண்டு செயல்படுகின்றனர். அதனால் கல்வி என்பது வாழ்வின் அடித்தளம் என்பதைக் கடந்து மதிப்பெண் பட்டியலே வாழ்க்கை என்றாகி விட்டது.

“**நான் ஒரு வாட்டி முடிவு பண்ணிட்டேனா என் பேச்ச நானே கேட்க மாட்டேன்** ” என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வரியை எந்த ஆசிரியர்

நடத்தினார். “ **ஹே என் கோலி சோடாவே என் கறிக் கொழம்பே உன் குட்டிப் பேபி நானே . . . . ஒன் ப்ளஸ் ஒன்னு டூ மாமா யூ ப்ளஸ் மி த்ரி மாமா**” என்ற தத்துவ வரிகள் எந்த வகுப்பில் மனப்பாடப் பகுதியாக இருந்தது. வயது வேறுபாடின்று பாலின வேறுபாடின்று அனைவரும் முணுமுணுக்கின்றனர். இதற்குக் காரணம் இவை எதுவும் பாடத்திட்டத்தில் இல்லை. மாறாக பாடத் திட்டத்தில் இருப்பதைப் படித்து, தேர்வு எழுதியவுடன் மறந்துவிட வேண்டும் என்ற பொது மனநிலை அனைவரிடமும் உள்ளது.

“**யாயும் ஞாயும் யாரா கியரோ**

**எந்தையும் நுந்தையும் . . . .** ” என்ற குறுந்தொகைப் பாடல் பாடத்திட்டத்தில் இருக்கும் பொழுது மாணவர்களால் மனப்பாடம் செய்ய முடியவில்லை. ஆனால் இன்று ‘**சகா’** திரைப்படத்தின் வாயிலாக சரண் மற்றும் சாரா இப்பாடலை நடத்தியதால் அனைவரது மனத்திலும் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. இதன்மூலம் பாடத்திட்டத்தில் ஒன்றை வைத்துக் கட்டாயம் படிக்க வேண்டும் என்றால் மனம் ஏற்பது இல்லை. மாறாக கதை, நாடகம், திரைப்படம் என்று பொழுதுபோக்கு வடித்தில் இருந்தால் எளிதாக மனத்தில் தங்கி விடுகிறது. அதனால் இளைஞர்களிடம் மதிப்பு சார்ந்த கருத்தைச் சேர்ப்பதில் பாடத்திட்டத்தைவிட பாடத்திட்டம் சாராத இதர துறைகளுக்குக் கூடுதல் மதிப்பும் வாய்ப்பும் உள்ளது.

காலம் காலமாகத் தமிழின் பெருமையை உலகிற்குப் பறை சாற்றி வரும் இலக்கியங்கள், உரைநடை வடிவிலான கதைகள், திருவிழாக்களை அலங்கரித்த நாடகங்கள், மக்களின் வண்ணக் கனவுகளுக்கு வடிகாலாக இருக்கும் திரைப்படங்கள் மற்றும் உடலையும், மனத்தையும் புத்துயிர் பெறச் செய்யும் விளையாட்டுக்கள் வழியே மக்களிடம் மதிப்புகளை வளர்த்தால் முழுமையான வெற்றி கிடைக்கும். சமூகமும் பண்பட்டதாகத் திகழும்.

## இலக்கியங்கள் வழி மதிப்பை வலியுறுத்துதல்

இலக்கியம் என்ற பெயர்ச்சொல் **இலக்கு + இயம்** என்று விரிந்து **இலக்கை இயம்புவது** என பொருள் தருகிறது. இலக்கியங்கள் அனைத்துமே ஏதோவொரு கருத்தைச் சமூகத்திற்குச் சொல்வதாகவே உள்ளன. விரைவான போக்குவரத்து வசதியும் தொழிநுட்ப வளர்ச்சியும் உள்ள தற்போதைய சூழலில் மக்களின் பொழுது போக்கிற்கு எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. ஆனால் கடந்த நூற்றாண்டு வரை இலக்கியங்களும், நாடகங்களும், விளையாட்டுகளுமே பொழுதுபோக்கு அம்சமாகத் திகழ்ந்தன.

இலக்கியக் கதாப்பாத்திரங்களும் அவற்றின் குணநலன்களும் உரையாடல்களும் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து இருந்தன. தாராள குணம் படைத்தவரைக் கர்ணப் பரம்பரை என்று புகழ்வதும், சிரித்துச் சிரித்து ஏமாற்றுபவரைச் சரியான சகுனியாக இருப்பான் போலும் என்று வசைபாடுவதும் உண்டு. குழந்தைகளுக்குப் பெயரிடும் பொழுதும் இலக்கியங்களில் உள்ள நேர்மறைப் பாத்திரங்களின் பெயரை மட்டுமே சூட்டுவர். எதிர்மறைப் பாத்திரங்களின் பெயரைச் சூட்டும் வழக்கம் இல்லை. அரிதிலும் அரிதாக இராவணன், மந்த்ரா என்பன போன்ற பெயர்களைச் சூட்டுவர். மக்கள் தன்னுடைய பெயரே தனக்கு ஒரு சமூக மதிப்பைப் பெற்றுத் தர வேண்டும்; சமூக அடையாளமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். அதனால்தான் பெரும்பாலானோர் சமூகத்தில் மதிப்பு பெற்றவர்கள்; தேசத் தலைவர்கள்; இனத் தலைவர்களின் பெயர்களைத் தமது பிள்ளைகளுக்குச் சூட்டுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**கர்ணன்**

மகாபாரதக் கதாப்பாத்திரமான கர்ணன், சூர்யபகவானின் அருளால் குந்திதேவிக்குப் பிறந்தவன் ஆவான். இவன் பீஷ்மரின் தேரோட்டி அதிரதன் என்பவரால் வளர்க்கப்பட்டான். சமூகம் இன்றுவரை கர்ணனை, '**கொடைத் தன்மை**'யின் அடையாளமாகக் குறிப்பிடுகிறது. ஆனால் அதையும் கடந்து கர்ணனின் பல மதிப்புமிக்க பண்புகள் இருந்ததைக் காண மறந்து விட்டது எனலாம். குறிப்பாக துரியோதனனுடன் கொண்ட நட்பை விவரிக்க வேண்டும்.

பொதுச் சபையில் அனைவரும் கர்ணா, உனது குலம் எது? என்று கேட்டு எனது வித்தைகளையும், ஆற்றலையும் புறக்கணித்த பொழுது துடிதுடித்தேன். அப்பொழுது துரியோதனன் தனது அங்க தேசத்தை எனக்கு வழங்கி, அதற்கு அதிபதியாக்கி எனது மானத்தைக் காத்தான். அன்று மட்டும் அவன் அவ்வாறு செய்யவில்லை எனில் உயிரையே விட்டு இருப்பேன். துரியோதனனின் நட்பால் மீண்டும் பிறந்தது போல் உணர்ந்தேன்; வாழ்வில் உயர்வு பெற்றேன். அதனால் எச்சூழலிலும் இந்நட்பை விட்டு விலக மாட்டேன் என்று தாய் குந்தியின் அழைப்பை ஏற்கக் கர்ணன் மறுத்து விட்டான்.

எனக்குச் சமூக மதிப்பைப் பெற்றுத் தந்தவன் எத்தகைய தீய பண்புகளைக் கொண்டிருந்தாலும் அவனுக்காக எனது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன் என்று நட்புக்கு இலக்கணமாகக் கர்ணன் திகழ்கிறான். தாய் அழைத்தும் சகோதரனால் மரணம் நிச்சயம் என்பது தெரிந்தும் நட்பை விட்டுத் தராமல் நட்பு பாராட்டும் உள்ளம் கொண்டவன் என்றவொரு முகமும் கர்ணனுக்கு உள்ளது.

கர்ணன் இறந்த பிறகு மேலுலகம் செல்கிறான். அங்கு அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டான். எவருக்கும் பசிக்கவில்லை. மாறாக தனக்கு மட்டும் பசிப்பதை உணர்ந்தான். அங்கிருந்த உணவை உண்டான். ஆனாலும் கர்ணனின் பசி அடங்கவில்லை. இது குறித்து இந்திரனிடம் வினவுகிறான். அதற்கு அவர், நீ உன்னுடைய வலது கையில் உள்ள ஆள்காட்டி விரலைச் சூப்புவாயாக என்றார். அதன்படி செய்தவுடன் கர்ணனின் பசி அடங்கி விட்டது. வியப்படைந்த கர்ணன் இந்திரனைப் பார்த்தார். அப்பொழுது அவர், "கர்ணா நீ மண்ணுலகில் பல தான தர்மங்களைச் செய்து உள்ளாய். ஆனால் அன்னதானம் செய்யவில்லை. ஒரு முறை துரியோதனன் தன் அரண்மனையில் விருந்து அளித்தான். அங்கு வந்த ஒரு ஏழைக்கு நீ விருந்து நடக்கும் இடத்தினைச் சுட்டிக் காட்டினாய். அதனால் அன்னதானம் செய்ததற்கான பலன் அந்த விரலுக்கு வந்து சேர்ந்தது. இப்பொழுது இந்த விரலைச் சுவைத்தவுடன் உனது பசி தீர்ந்தது" என்றார். இதைக் கேட்ட கர்ணன் விருந்தோம்பலின் பெருமையை உணர்ந்து

கொண்டதாகக் கதை அமையப் பெற்று உள்ளது. நம் நாட்டில் மறுபிறப்பு குறித்த நம்பிக்கை காலம் காலமாக மக்களிடையே உள்ளது. அதனால் கர்ணன் குறித்தப் பதிவு இளம் தலைமுறையிடம் நல்லதொரு மதிப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

**துரியோதனன்**

மகாபாரதத்தில் முக்கியமானப் பாத்திரமாகத் துரியோதனன் திகழ்கிறான். இவன் அனைவராலும் எதிர்நிலைப் பாத்திரமாகக் கணிக்கப்பட்டவன் ஆவான். ஆனால் இவனது மென்மையான / வெண்மையான மனத்தைச் சமூகம் அடையாளம் காணவில்லை என்றே கூறலாம்.

அதியமானுக்காகத் தூது சென்று போர்ச் சூழலை அகற்றிய ஔவையார் நட்பு; பாரியின் மறைவுக்குப் பின் அவனது பிள்ளைகளான அங்கவை, சங்கவையைக் காத்த கபிலர் நட்பு; கோப்பெருஞ்சோழனைக் காணமலே நட்பு கொண்டு, இறப்பிலும் பின் தொடர்ந்த பிசிராந்தையார் நட்பு என இந்த நிகழ்வுகளைப் பலரும் அறிவர். ஆனால் கொடைத் தன்மை கொண்டவன் என்ற ஒற்றைப் புள்ளியில் அடக்கப்பட்ட கர்ணன், கொடூர மனம் கொண்ட எதிர்நிலைப் பாத்திரமாகவே அனைவராலும் அறியப்பட்ட துரியோதனனின் நட்பை நினைவுகூர வேண்டியுள்ளது.

எதார்த்த வாழ்வில் நாயகன் (ஹீரோ) என்று ஒருவர் கிடையாது. வில்லன் என்றும் ஒருவர் கிடையாது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளே ஒரு மனிதனை வில்லனாகவும், நாயகனாகவும் காட்சிப்படுத்துகிறது. ஆனால் இலக்கியங்களும், திரைப்படங்களும் ஒருவரை அறிமுகப்படுத்தும் பொழுதே நாயகன் என்றும், எதிர்மறை நாயகன் என்றும் சுட்டிக்காட்டி விடுகின்றன. அதனால் வாசகன், ரசிகன் வில்லனிடம் இருக்கும் நற்பண்புகளை ஏற்க மறுக்கிறான். இதன் விளைவாக நாயகன் செய்வது முழுமையும் சரி என்றும் வில்லன் செய்வது முழுமையும் தவறு என்றும் பார்வையாளர்களின் மனத்தில் ஆழப்பதிந்து விடுகிறது. இதற்குத் துரியோதனன் சிறந்த சான்று ஆவான்.

நல்லவன் கெட்டவன் என்ற உலகப் பொதுப் பார்வையை மாற்றி, செயல்பாடுகளின் அடிப்படையில் நோக்கும் போக்கு இளைய சமுதாயத்திடம்

வளர வேண்டும். தேரோட்டியின் மகன் என்பதால் போர்ப் பயிற்சியில் தேர்ந்தவனாக இருந்தும் கர்ணனுக்குச் சமூக அங்கீகாரம் கிடைக்கவில்லை. பொதுச் சபையில் அவமானப்படுத்தப்படுகிறான். இந்த நெருக்கடியான சூழலில் துரியோதனன் தனக்குக் கர்ணன் பக்க பலமாக இருப்பான் என்ற (சுயநல) எண்ணத்தோடு அவனை அங்க தேசத்திற்கு அதிபதியாக்கினான். இருப்பினும் கர்ணனிடம் கொண்ட நட்பு போற்றுதலுக்கு உரியதாக இருந்தது. அதற்குச் சான்றாக இரண்டு நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

முதலாவதாக துரியோதனனின் உணவு உண்ணும் வழக்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தைச் சுட்டலாம். துரியோதனன் ஒரு தட்டில் ஒரு கவளம் உணவு மட்டுமே உண்ணும் வழக்கம் உடையவன் ஆவான். அதாவது அவன், தன் கைப்பட்ட உணவையே எச்சில் என்று மறுமுறை உணவு எடுக்க மாட்டான். பழமாக இருந்தாலும் ஒரு கடி மட்டுமே உண்பான். அதனால் துரியோதனனுக்குப் பல தட்டுகளில் ஒரே மாதிரியாக உணவு பரிமாறப்பட்டு இருக்கும். ஒவ்வொரு தட்டிலும் ஒரு கை உணவு மட்டுமே எடுத்து உண்பான். ஆனால் கர்ணனின் மீது கொண்ட அதீத நட்பால் அவனது தட்டில் மட்டும் தானாகவே எடுத்து உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். சமூக மதிப்பில் எதிர்எதிர் துருவங்களாக இருக்கும் துரியோதனனும், கர்ணனும் நட்பு என்ற நிலையில் ஒற்றைப் புள்ளியில் இணைந்து விடுகிறார்கள்.

இரண்டாவதாகக் கர்ணன்பால் கொண்ட நம்பிக்கையைச் சுட்டும் நிகழ்வைக் குறிப்பிட வேண்டும். கர்ணன், துரியோதனனின் மனைவி பானுமதியுடன் அவர்களது அரண்மனையில் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கிறான். கர்ணன் உள்அறையைப் பார்த்தவாறும், பானுமதி வாயிலைப் பார்த்தவாறும் அமர்ந்து இருக்கின்றனர். ஆட்டத்தின் சூழல் கர்ணன் வெல்லும் நிலையிலும்; பானுமதி தோற்கும் நிலையிலும் இருந்தது. அப்பொழுது துரியோதனன் வருகிறான்.

மரியாதையின் பொருட்டு பானுமதி எழுகிறாள். கர்ணனோ பானுமதி தோல்வி பயத்தால் எழுவதாக எண்ணி அவளை இழுக்க முயற்சிக்கிறான். அப்பொழுது கர்ணனின் கரங்கள் அவளது இடையில் அணிந்திருந்த முத்து மாலையில்பட்டு முத்துக்கள் கீழே விழுந்து சிதறுகின்றன. இச்சூழலில்

துரியோதனனைக் கண்ட கர்ணனும், பானுமதியும் செய்வது அறியாது திகைத்து நிற்கின்றனர்.

துரியோதனன் எவ்விதமான பரபரப்புமின்றி, “**இந்த முத்துக்களை எடுக்கவோ கோர்க்கவோ**” என்று புன்கையுடன் கேட்கிறான். அவனது புன்னகையின் பின்னால் நண்பன் கர்ணன் மற்றும் மனைவி பானுமதியின் மீது கொண்ட நம்பிக்கையே இருக்கிறது எனலாம்.

“**மனிதன் பாதி; மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான்**” என்ற வைரமுத்துவின் வரிகள் அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். அதனால் ஒவ்வொரு தனிமனிதனும் சக மனிதர்களிடம் இருக்கும் பின்பற்றத்தக்க மற்றும் மதிப்புமிக்க பண்புகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**கும்பகர்ணன்**

இன்று சமூகத்தில் கும்பகர்ணனின் அடையாளமாக இருப்பது அவனது தூக்கம் மட்டுமே ஆகும். அதிகமான நேரம் தூங்குபவர்களைக் கும்பகர்ணன் மாதிரி துங்குகிறாயே என்று கேலி செய்வர். கும்பகர்ணன் தூக்கத்தின் குறியீடாகச் சுட்டப்பட்டு உள்ளான். ஆனால், கும்பகர்ணனிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பண்பு (மதிப்பு) களும் உள்ளன.

பகைவனும் (இராமனும்) “**தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின்**

**நாள் பல கழியுமால் ; நடுவன் நின்றது ஓர்**

**தாளுடை மலைகொலாம். . . .** ”

என்று வியக்கும் தோற்றத்தைக் கொண்டவனாகக் கும்பகர்ணன் உள்ளான். சீதையைக் கவர்ந்து வந்ததன் காரணமாகப் போர்ச் சூழல் ஏற்பட்டு உள்ளது. சகோதரனுக்குத் (இலங்கை வேந்தனுக்குத்) தன்னால் முடிந்தவரை அறிவுரை கூறி போரைத் தடுக்க முயல்கிறான். ஆனால் ராவணன் சீதையை விடுவிப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்ததால் ராமனுடன் போர் புரிய உடன்படுகிறான். இராமனுடன் போரிட்டு மீண்டு வர வாய்ப்பு இல்லை.

“**வென்று இவன் வருவன் என்று உரைத்தி லேன் விதி**

**நின்றது பிடற்பிடித்து உந்த நின்றது . . . .** ”

என்று கும்பகர்ணன் மரணம் நிச்சயம் என்பது உறுதியாகத் தெரிந்தே போர்க்களம் செல்கிறான். மேலும் நான் போரில் மாண்ட பின்னாவது 'சீதையை விட்டுவிடு. நன்றாக இரு' என்று அறிவுரை கூறும் மனப் பக்குவம் கொண்டவனாகக் கும்பகர்ணன் இருந்தான்.

இராமனுடன் இணைந்து கொள்வோம் என்று வீடணன் அழைத்தபோதும் மரணம் உறுதி என்றாலும் பரவாயில்லை. எனக்கு உணவிட்டு, காத்தவன் இராவணன். ஆதலால் செஞ்சோற்றுக் கடனுக்காக இறக்கிறேன் என்று துணிந்தவனாகக் கும்பகர்ணன் உள்ளான். தலைமுறை தலைமுறையாக முன்னோர்கள் இருந்த கட்சியைவிட்டு பதவி, ஆட்சி மாற்றம், தேர்தலில் சீட்டுக்காக, அதிகாரத்திற்காகக் கட்சி மாறுபவர்கள் கும்பகர்ணனின் (மதிப்பை) வரலாற்றை வாசித்து இருந்தால் ஒரு வேளை கட்சித் தாவல்கள் இல்லாமல் இருந்திருக்கும். அது கேவலமான செயல் என்ற எண்ணம் தோன்றும்.

இன்றும் நெருக்கடி காலத்தில் எதிரணியில் இணைந்து தற்காத்துக் கொண்டவன் வீடணன் என்ற சொல்லடை / கேலிப் பேச்சு வழக்கத்தில் உள்ளது. தனிமனிதச் செயல்பாடுகளே அவனது மதிப்பைச் சமூகத்திற்குப் பறைசாற்றும் காரணியாகும். அதனால் காலம் கடந்தும் இம்மண்ணில் நாம் (நேர்மறையான) பேசுபொருளாக இருக்க வேண்டுமானால் மதிப்புமிக்கச் செயல்களைச் செய்ய வேண்டும்.

இலக்கியங்கள் சமூகத்திற்கு வாழ்வியல் முறையைப் போதிக்கும் சாதனம் எனலாம். எனவே இலக்கியக் கதாப்பாத்திரங்களின் பின்பற்றத்தக்க பண்புகளை மனத்திற் கொள்வோம். ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டமைப்போம்.

**மதிப்புணர்ச்சியைக் கதைகள் வாயிலாக வளர்த்தல்**

தொலைக்காட்சி, கணினி மற்றும் இணையங்களின் வருகைக்கு முன் மூன்றாம் தலைமுறைக்கும், முதல் தலைமுறைக்கும் இடையேயான உறவைப் பலப்படுத்தியதும் இளம் தலைமுறையின் மனத்தைப் பக்குவப்படுத்தியதும் கதைகளே ஆகும். கடந்த நூற்றாண்டின் இறுதிவரை தாத்தா, பாட்டி தமது கதை சொல்லும் திறத்தால் பேரப் பிள்ளைகளைத் தன் வசப்படுத்தி

வைத்திருந்தனர். கிராமங்களில் தனது கதை சொல்லும் திறத்தால் இளம் சிறார்களின் மனத்தில் சிம்மாசனம் இட்டு அமர்ந்திருந்த பல கதை சொல்லிகள் இன்று கேட்பாரற்று இருக்கிறார்கள். மேலும், தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சி தலைமுறை இடைவெளியை மிகைப்படுத்திவிட்டது.

**முதல்கதை**

பல் முளைக்காத இளம் குழந்தை முதல் பல் விழுந்த முதிய குழந்தை வரை அனைவரும் அறிந்த ஒரு கதை; ஒரே கதை என்றால் அது, '**பாட்டி வடை சுட்ட கதை'** ஆகும். இதில் பாட்டி , காகம் மற்றும் நரி என மூன்று கதாப்பாத்திரங்கள் இடம்பெற்று உள்ளன. "**கதையின் தொடக்கத்தில் சுவரின் மீது ஒரு துப்பாக்கி தொங்கிக் கொண்டு இருக்கிறது என்று எழுதுவாயானால் அது கதை முடிவதற்குள் வெடித்து ஆக வேண்டும்**" என்ற சிறுகதையின் இலக்கணத்தைப் போன்று இக்கதையில் வரும் 'வடை'யே கதையின் மையப் பொருளாக உள்ளது. கதை வழியே புலப்படும் நீதி / மதிப்பு என்ன ? மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப சமூக மதிப்பும் காலந்தோறும் மாறிய வண்ணம் உள்ளது. இதனால் இக்கதையும் பல பரிணாமங்களைக் கடந்து நீதியைப் போதித்து காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு இன்றும் நிலைத்து நிற்கிறது.

முதலீடு செய்து வடை சுட்டு விற்கும் உழைப்பாளியான பாட்டி, காகம் வடை எடுத்தது தெரியாமல் ஏமாந்து இருக்கிறார். உழைப்பாளியான பாட்டி அறியாவண்ணம் அவரிடம் இருந்து வடையைத் திருடிய காகம் நரியிடம் ஏமாந்து நிற்கிறது. எவ்வித உழைப்புமின்றி தன்னைவிட வலிமை குறைந்த திருட்டுக் காகத்தை ஏமாற்றி நரி வடையை அபகரித்துக் கொண்டது. **இளம் வயதினரை ஆக்கப்பூர்வமாக நெறிப்படுத்தக்கூடிய கல்வி, மதிப்புக் கல்வி** என்று அழைக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கதையை அணுகுவோம். இக்கதையில் இடம்பெற்றுள்ள பாட்டி. காகம், நரி ஆகிய மூவருள் குழந்தைகள் பின்பற்றத்தக்கவராக யாரைக் குறிப்பிடலாம்.

குழந்தைகள் இக்கதையின் வழியே (i) நாம் ஒருவரை ஏமாற்றினால் நம்மை ஒருவர் ஏமாற்றுவார் அல்லது ஏமாறாதே ஏமாற்றாதே (ii) ஏமாற்றுபவரை ஏமாற்றினால் தவறில்லை அல்லது நரி போல் தந்திரமாக இருக்க வேண்டும் என்பன போன்ற மதிப்புகளைப் பெறலாம். **தந்திரம் என்றால் என்ன? சூழ்ச்சி என்றால் என்ன?** சுருக்கமாகக் கூறவேண்டுமானால் நாம் பிறரைத் திட்டமிட்டு ஏமாற்றினால் அது தந்திரம் ஆகும். பிறர் நம்மைத்

திட்டமிட்டு ஏமாற்றிவிட்டல் அதை நாம் சூழ்ச்சி என்கிறோம். இம்மதிப்புகள் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குமா? என்றால் நிச்சயமாக இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

இக்கதை பல மாற்றங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. அவற்றுள் சில,

(i) காகமே, நீ அழகாக இருக்கிறாய். நீ ஒரு பாட்டுப் பாடு என்று நரி கூறியவுடன் காகம் தன் காலில் வடையை வைத்துக் கொண்டு பாடியது. நரி ஏமாந்தது. [ **நீதி / மதிப்பு**; உலகில் ஏமாற்றுபவர்கள் உண்டு. அதனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்]

(ii) காகமே, நீ அடிக் கொண்டே பாடினால் நன்றாக இருக்கும் என்று நரி கூறியவுடன் காகம் அவ்வாறே செய்தது. வடை கீழே விழுந்தது. நரி வடையைத் தூக்கிக் கொண்டு ஓடியது. [ **நீதி / மதிப்பு**; புகழ்ச்சிக்கு மயங்காதவர் எவருமில்லை. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.]

(iii) நரியே, என்னை ஏமாற்றாதே. எனது புற அழகு, குரல் வளம், நடையழகு எனக்குத் தெரியும். இந்த ஒரு வடைக்காக என்னை ஏமாற்றாதே. இந்தா பாதி வடையை நீ சாப்பிடு. [ **நீதி / மதிப்பு**; முகஸ்துதிக்குப் பின்னால் சூழ்ச்சி இருக்கும். எதிராளியின் தேவையை உணர். பங்கிட்டு வாழ்]

மேற்கண்ட நான்கு கதை வடிவத்திலும் நேர்மையான பாட்டி குறித்தப் பதிவுகள் இல்லை. நேர்மையாக இருந்தால் ஏமாறத்தான் வேண்டும்; நேர்மையாக இருந்தால் மட்டும் போதாது. எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பன போன்ற நீதி / மதிப்பு சமூகத்தை வளப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் கதைக்கு நிறைவாக ஒரு வடிவம் தர முயற்சிப்போம்.

வடை சுடுவதற்குத் தயாராகும் பாட்டி, தம்மை நோட்டமிடும் காகத்தை அழைத்து என்ன வேண்டும் என்று கேட்கிறார். எனக்கு வடை வேண்டும் என்றது காகம்.அதற்குப்பாட்டி, வடை சுடுவதற்கு மரக்குச்சிகளைக் கொண்டு வந்து கொடு; நான் வடை தருகிறேன் என்றார். காகமும் பாட்டியின் கருத்திற்கு உடன்பட்டு மரக்குச்சிகள் கொண்டு வந்து தருகிறது. பாட்டி அதற்கு மாற்றாகக் காகத்திற்கு வடை தருகிறார். வடையை உண்ணத் தொடங்கும் காகத்தின் அருகே நரி ஒன்று வந்து நிற்கிறது. நரியைக் கண்ட காகம் உனக்கு நான்

வைத்திருக்கும் வடை வேண்டுமா? என்று கேட்டது. அதற்கு நரி ‘ஆம்’ என்றது. உடனே காகம் வடையை நரியுடன் பங்கிட்டுக் கொண்டது.

இக்கதையில் எவரும் ஏமாறவில்லை. யாரும் யாரையும் ஏமாற்றவும் இல்லை. உழைக்கிறார்கள். பங்கிட்டுக் கொள்கிறார்கள். விட்டுக் கொடுக்கிறார்கள். ஒற்றுமையாக இருக்கிறார்கள். உறவு வளர்கிறது. இதையொரு முன்மாதிரியான சமூகமாகக் காணுங்கள். இத்தகைய கதைப் போக்கே சமூகத்தைப் பண்படுத்தும். வளரும் பிள்ளைகளின் மனத்தில் உழைக்க வேண்டும்; பிறருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அது தான் மகிழ்ச்சியான வாழ்வின் அடையாளம் என்ற எண்ணம் ஆழப் பதியும். **விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும். இல்லையே. விதைத்தது தானே முளைக்கும்.** அதனால் மாணவச் சமூகம் நேர்மறையான நிகழ்வுகளைத் தொடர்ந்து கேட்டால்; படித்தால் எதிர்காலம் ஒற்றுமையானதாகவும்; விட்டுக் கொடுக்கக் கூடியதாகவும் மகிழ்ச்சியானதாகவும் இருக்கும்.

கதை கேட்கும் குழந்தைகள் ஏன்? எதற்கு? என்பன போன்ற கேள்விகளைக் கேட்கும் ஆற்றலைப் பெறுவர். அதற்கேற்ப சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவர். பிறர் பேச்சைக் கவனிப்பார்கள். அதனால் குழந்தைகளின் மனத்தைப் பக்குவப்படுத்தும். கதை சொல்லிகள் ஒரு பொக்கிஷம் ஆவர். ஆனால் தற்பொழுது மின் ஊடகங்களின் பெருக்கத்தாலும், அதன் கவர்ச்சியாலும் குழந்தைகள் தாத்தா, பாட்டி, ஆசிரியர், வயது முதிர்ந்தோர் போன்ற கதை சொல்லிகளின் அரவணைப்பிற்குள் வருவதில்லை. இதன் விளைவாக கதை சொல்லிகள் காலத்தோடு கரைந்து வருகின்றனர். வளர்ந்த நாடான ஜப்பானில் குழந்தைகள் இன்றும் தாத்தா, பாட்டிகளிடம் கதை கேட்பதில் ஆர்வமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நாடகங்கள் வழியே மதிப்புகளை வளர்த்தல்**



கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி அங்குள்ள கோவில் திருவிழாக்களில் நடத்தப்படும் தொடர் மேடை நாடகங்கள் தமிழின்; தமிழகத்தின் அடையாளம் என்று கூறலாம். ஆண்டுதோறும் கோவிலில் திருவிழாக்கள் நடைபெற்றாலும் குறிப்பாக பங்குனி, சித்திரை மற்றும் ஆடி மாதங்களில் அதிகநாள்கள் கொண்டாடப்படும்.

அந்நாள்களில் இரவு முதல் அதிகாலை வரை மேடை நாடகங்கள் நடைபெறும். இந்நாள்களிலேயே உழைக்கும் மக்கள் சற்று இளைப்பாறவும் பொழுதுபோக்கில் நாட்டம் கொள்ளவும் செய்வர். இத்திருவிழாக்களில் பக்தி, வரலாறு மற்றும் புராண நாடகங்களே நடத்தப் பெறும்.

ஆண்டுதோறும் தொடர்ந்து தமது ஊர் மற்றும் அருகாமையில் உள்ள ஊர்த் திருவிழாக்களுக்குச் சென்று நாடகம் பார்த்தமையால் நாடக உரையாடல்களை முழுமையாகச் சொல்லக்கூடியவர்களாக பலர் இருந்தனர். இதன் ஈர்ப்பால் நடிக்கச் சென்றவர்களும் உண்டு; நாடகக் கதாப்பாத்திரங்களின் பெயர்களைத் தமது பிள்ளைகளுக்குச் சூட்டியவர்களும் உண்டு; தனக்கு அடைமொழியாகச் சூட்டிக் கொண்டவர்களும் உண்டு. தற்பொழுது திரைப்பட நடிகர்களின் பெயர்களை அடைமொழியாக வைத்துக் கொள்வதும் இதன் எச்சமே ஆகும். கால மாற்றம் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் மேடை நாடகம் தொலைக்காட்சியில் நீண்ட தொடர் நாடகமாக மாற்றம் பெற்று உள்ளன. இதன் காரணமாக உடை அலங்காரமும், மேடை வடிவமைப்புமே மேம்பட்டு இருக்கிறது. ஆனால் மக்களிடம் ஏற்படுத்தும் தாக்கத்தின் அளவில் எவ்வித மாற்றமும் குறைவும் இல்லை எனலாம்.

தற்பொழுது தொலைக்காட்சியில் தொடர் நாடகங்கள் தான் பிரதான நிகழ்ச்சியாக இடம் பெற்று உள்ளன. நாடகத்தின் களமாக உள்ள வீடுகள், கதாப்பாத்திரங்கள் அணியும் நகைகள் ; ஆடம்பர உடைகள் மற்றும் வாழ்க்கை முறை நேயர்களை ஈர்க்கும் வகையில் உள்ளன. இந்நாடகங்கள் நேயர்களிடம் நேர்மறை மதிப்பை ஏற்படுத்தவது குறைவு எனலாம். மாறாக எதிர்மறைத் தாக்கத்தையே மக்கள் மனத்தில் ஏற்படுத்துகிறது. மனிதனின் ஆழ்மனத்தில் புதைந்து இருக்கும் வக்கிர எண்ணத்தைக் கிளர்ந்து எழச் செய்யும் விதமாகவே நாடகங்களின் கதைக் களம் அமைந்திருப்பது துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். இருப்பினும் பழங்காலம் முதல் இன்று வரை மக்களைத் தன்வசப்படுத்தும் வலிமை பெற்ற ஊடகமாக நாடகங்கள் உள்ளன என்பது உறுதியாகும்.

உலக நாடுகளில் இந்தியாவின் அடையாளமாகவும், அகிம்சா வழிப் போராட்ட முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தியவருமான காந்தியடிகளின் வாழ்வில் நாடகம் ஏற்படுத்திய தாக்கம் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது.

இன்றும் யாராவது, 'நான் பொய் சொல்லவில்லை. நான் சொல்வது உண்மை தான்' என்று சொன்னால் உடனே '**ஆமா. ஆமா. நீ பெரிய அரிச்சந்திரன்** என்றோ, **நீ என்ன அரிச்சந்திரன் பரம்பரையா? நீ என்ன**

**அரிச்சந்திரன் வீட்டுக்குப் பக்கத்து வீடா?**’ என்றோ கேட்பர். அந்த அளவிற்கு உண்மைக்கும், அரிச்சந்திரனுக்கும் இடையே தொடர்பு உள்ளது. இதே தொடர்பு அரிச்சந்திரனுக்கும், மகாத்மா காந்திடியகளுக்கும் இடையே ஏற்பட்டு இருக்கிறது.

**அரிச்சந்திர நாடகம்**




அரிச்சந்திரன் ஒரு நாட்டு மன்னன் ஆவான். அவன் எத்தகைய நெருக்கடியான சூழலிலும் உண்மையே பேசக் கூடியவன் ஆவான். இதை அறிந்த விஷ்வாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைக்க எவ்வளவோ முயற்சி செய்கிறார். அரிச்சந்திரன் தனது நாட்டை இழந்தும் பொய் சொல்லவில்லை. மனைவி, மகன் உறவுகளை இழந்தும் பொய் சொல்லவில்லை. இதில் விஷ்வாமித்திரர் தோல்வியைத் தழுவுகிறார். இதைக் காந்தியடிகள் தமது இளமைப் பருவத்தில் நாடகத்தின் வழியே காண்கிறார். இறுதி வரை உண்மையே பேச வேண்டும் என்ற அர்ச்சந்திரனின் செயல்பாடு காந்தியடிகளின் மனத்தில் ஆழப்பதிகிறது. அதன் தாக்கத்தால் நாடகக் கதாப்பாத்திரமான அரிச்சந்திரனாகவே காந்தியடிகள் வாழத் தொடங்கி இருக்கிறார்.

இது காந்தியடிகளின் வரலாற்றுப் பதிவாகும். அரிச்சந்திரனின் பண்பு காந்தியடிகளை ஈர்த்ததற்குக் காரணம், ஒன்று நாடகத்தில் இடம்பெற்று இருந்த உரையாடலாக இருக்கலாம். இரண்டு நாடக நடிகரின் எதார்த்தமான நடிப்பாகவும் இருக்கலாம். மொத்தத்தில் நாடகம் ஏதோவொரு விதத்தில் காந்தியடிகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. மனிதன் அன்றாட உலக நிகழ்வுகளால் தாக்குண்டு, கற்றுக் கொள்ள முடியுமா? என்று சிந்திக்கும் பொழுது விவேகானந்தரின், “ **ஒருவருக்கு மற்றவர் உண்மையிலேயே கற்றுக் கொடுக்க முடியாது. ஒவ்வொருவரும் அவர்களாகவே கற்றுக் கொள்ள வேண்டும். வெளியிலுள்ள ஆசிரியர் ஆலோசனையை மட்டும் தான் தருவார். அது உள்ளுக்குள் இருக்கக்கூடிய ஆசிரியரை வேலை செய்யத் தூண்டி விஷயங்களைப் புரிந்து கொள்ளச் செய்யும்**” என்ற கூற்று நினைவு

கூரத்தக்கதாக இருக்கிறது. அரிச்சந்திரனின் உண்மை பேசும் பண்பு காந்தியடிகளைக் கவர்ந்து இருக்கிறது. அதற்கு அவர் உடன்பட்டதால், அரிச்சந்திரனைப் பின்பற்றக்கூடிய மனநிலை காந்திக்கு ஏற்பட்டு இருக்கிறது.

அதனால் மனிதன் குறிப்பாகக் குழந்தைகள், மாணவர்கள் காணும் நிகழ்வுகள்; கேட்கும் சொற்கள்; வாசிக்கும் வார்த்தைகள் என அனைத்தும் நேர்மறையானதாக / நல்ல மதிப்பு கொண்டதாக இருக்க வேண்டும். நற்பண்புகளை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். மனிதன் தான் செய்கின்ற தவறுகளுக்கும், குற்றங்களுக்கும் வருத்தம் கொள்வதற்கு மாறாக; திருத்திக் கொள்வதற்கு மாறாக; மன்னிப்புக் கேட்பதற்கு மாறாகக் காரணம் கற்பிக்கவே முயற்சிக்கிறான். நீங்கள் குரங்கை நினைக்காமல் இந்த மருந்தைச் சாப்பிட்டால் தான் நோய் குணமாகும் என்று மருத்துவர் கூறினால், உங்களுக்கு மருந்தைப் பார்த்தவுடன் நோயைவிட குரங்கு தான் நினைவிற்கு வரும் என்பது எதார்த்த உண்மையாகும். அதனால் எவ்விதமான நெருக்கடியும் இன்றி இன்முகத்துடன் மதிப்புமிக்க கருத்துக்களை மனத்தில் பதியச் செய்தல் வேண்டும். காந்திக்கு நாடகம் பார்க்கும் புறச்சூழல் அமைந்திருக்கிறது. மனம் உண்மையை விரும்பி இருக்கிறது. அதனால் அவர் உண்மையைப் பின்பற்றி இருக்கிறார்.

மனிதர்கள் அனைவருமே காந்தியடிகளைப் போன்று நேர்மறையான புறச் சூழலால் தாக்கப்படும் பொழுது அதற்கு உடன்பட்டு, அது குறித்துச் சிந்தித்தால் சமூகம் நல்ல மதிப்பு வாய்ந்ததாக மலரும் என்பது திண்ணம்.

## திரைப்படத்தின் வழியே மதிப்புகளை வளர்த்தல்

மேடை நாடகம் மற்றும் புகைப்படத்தின் வளர்ச்சியே திரைப்படம் ஆகும். இது பேசாப் படமாக அவதரித்துப் பேசும் படமாக வளர்ந்து தற்பொழுது கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என்ற நிலையில் இருக்கிறது. திரைப்படத்தின் வலிமையை 50 ஆண்டு கால தமிழக அரசியல் வரலாற்றை வாசித்து அறியலாம். தற்பொழுது இந்திய அரசியலிலும் இதன் தாக்கத்தைக் காண முடிகிறது. தமிழ்த் திரைத் துறையில் வென்றவர்களின் புகலிடமாக அரசியல் உள்ளது. எந்தவொரு விழிப்புணர்வு நிகழ்விலும் திரைத் துறையின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும். இவர்களின் கவர்ச்சிக் குரல் எளிதில் மக்களைச் சென்று அடைவதே இதற்குக் காரணமாகும்.

போர்க்காலத்தில் வேண்டப்படும் போர் நிதி, இயற்கைப் பேரிடர் மற்றும் நெருக்கடியான சூழலில் தேவைப்படும் மக்களின் ஒத்துழைப்பு போன்றவற்றிற்கு முதல் தேர்வாக திரை நட்சத்திரங்களே இருப்பர். இத்தகைய சக்தி வாய்ந்த ஊடகமாகத் திரைப்படம் உள்ளது. திரைப்பட நடிகர்களின் மேல் கொண்ட ஈர்ப்பால் இளைஞர்கள் தமது பெயரோடு அவர்களின் பெயரையும் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் காலம் காலமாக நடைமுறையில் இருக்கிறது. சில நடிகர்களின் கதாப்பாத்திரங்களின் பெயரும் மக்கள் மத்தியில் பிரபலமடைவது உண்டு. மேலும், அவர்கள் பேசும் வசனம், அணியும் ஆடை, ஆபரணம், பயன்படுத்திய வாகனம், பொருட்கள் என சகலமும் ரசிகர்களின் பேசு பொருளாகவும், தேடு பொருளாகவும் இருக்கிறது.

இளைஞர்களுக்குக் காவல்துறை மற்றும் இராணுவப் பணி மீது எப்பொழுதும் தனியாதவொரு காதல் உண்டு. அதற்குத் திரைப்படத்தில் தமது விருப்பத்திற்குரிய நடிகரின் நடிப்பின் தாக்கம் என்றும் கூறலாம். சான்றாக, தங்கப்பதக்கம் (சிவாஜி கணேசன்) காவல்காரன் (எம்.ஜி.ஆர்) மூன்றுமுகம் (ரஜினிகாந்த்) காக்கிச்சட்டை (கமல்ஹாசன்) சத்ரியன், கேப்டன் பிரபாகரன் (விஜயகாந்த்) வால்டர் வெற்றிவேல் (சத்யராஜ்) சூரியன் (சரத்குமார்) ஜெய்ஹிந்த் (அர்சூன்) சாமி (விக்ரம்) சிங்கம் (சூர்யா) என்று பட்டியல் நீண்டு கொண்டிருக்கிறது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் 18 முதல் 30 வயதுள்ள இளைஞர்கள் 16 மாதங்கள் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபட வேண்டும் என்ற நடைமுறை வழக்கத்தில் உள்ளது. இந்தியாவும் சுமார் 3 ஆண்டுகள் இளைஞர்களைக் கட்டாய இராணுவப் பணியில் ஈடுபடுத்த முயற்சி மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் தமிழகத்தில் சீருடைப் பணிக்குப் பள்ளிப் பருவத்திலேயே தம்மைத் தயார்படுத்தும் மாணவ/ மாணவிகள் எண்ணற்றோர் உள்ளனர். இதற்குத் திரைப்படங்களில் போலீஸாகவே வாழ்ந்து இருக்கும் நடிகர்களின் எதார்த்த நடிப்பும் ஒரு காரணம் எனலாம். காவல்துறையின் மதிப்பை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் திரைப்படங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது எனலாம்.

**ஊக்குவிக்கும் வினையூக்கி**

திரைப்படம் ஒரு பொழுதுபோக்குச் சாதனமாக இருப்பினும் மனித மனத்தை எளிதில் தன்வயப்படுத்தும் அபூர்வ சக்தி வாய்ந்ததாகும். வயது, பாலின வேறுபாடு இன்றி அனைவரையும் தன்பால் ஈர்க்கக்கூடிய வலிமை படைத்ததாகும். **ஊக்குவிப்பார் ஊக்குவித்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்** என்றொரு சொல்லடை மக்களிடம் புழக்கத்தில் உள்ளது. தாய்,

தந்தை, மாமன், சிற்றப்பன் சொல்லிக் கேட்காதவன் ரஜினி, கமல், விஜய், அஜித் , சூர்யா போன்ற நட்சத்திரங்களின் குரலுக்கு இசைவார்கள். உன் நண்பனைச் சொல். நீ யார் என்று சொல்கிறேன். உன் எதிரி யார் என்று சொல். நீ யார் என்று சொல்கிறேன் என்று காலம் காலமாக ஒருவரது தோழமையைக் கொண்டே அவரது பண்பு நலனைக் கணிக்கும் வழக்கம் இருக்கிறது. ஆனால் சினமா எவ்வித வேறுபாடும் இன்றி அனைவரின் மகிழ்ச்சிக்கும் பொறுப்பாக உள்ளது. மேலும், அனைவரின் தனிமையையும், சோகத்தையும், தோல்வியையும் மாற்றக்கூடியதாக உள்ளது.

தோல்வியின் துயரத்தில் துடித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்குத் திரைப்படப் பாடல் வரி உற்றத் தோழனாக இருந்து அறிவுரை கூறி நெறிப்படுத்தும் என்பதற்குச் சான்றாக '**ஆட்டோகிராப்**' திரைப்படத்தில் இடம்பெற்று இருந்த,


"**உளி தாங்கும் கற்கள் தானே மண் மீது சிலையாகும்**
**வலி தாங்கும் உள்ளம் தானே நிலையான சுகம் காணும்**
**யாருக்கில்லை போராட்டம் / கண்ணில் என்ன நீரோட்டம்**
**ஒரு கனவு கண்டால் அதை தினம்**
**முயன்றால் ஒரு நாளில் நிஜமாகும்**" என்ற வரிகளைக் கூறலாம்.

**குறைசொல்லத் தெரிந்த ஊருக்கு வழி சொல்லத் தெரியாது** என்பதற்கேற்ப ஊரார் குறை சொல்வதை விட்டு வழி சொல்ல மாட்டார்கள். "**நீ வெற்றிக்காகப் போராடும் போது வீண்முயற்சி என்று சொல்பவர்கள். நீ வென்ற பின் விடாமுயற்சி என்பார்கள்"** என்ற கண்ணதாசனின் வரிகள் பலரது அனுபவத்தைத் தாங்கியது என்றால் அது மிகையாகாது. முயற்சியில் என்ன வீண்முயற்சி, நன்முயற்சி. 'முயற்சி திருவினையாக்கும்' என்பது வள்ளுவனின் வாக்காகும்.

" **எல்லாப் புகழும் ஒருவன் ஒருவனுக்கே**
**நீ நதி போல ஓடிக் கொண்டிரு**
**எந்த வேர்வைக்கும் வெற்றிகள்வேர் வைக்குமே**"

என்ற வரிகள் உழைப்பிகேற்ற ஊதியம் உண்டு என்பதைப் புலப்படுத்துவதாய் உள்ளது.

‘உலை வாயை மூடி விடலாம். ஊர் வாயை மூட முடியுமா?’ என்பது பேச்சு வழக்கில் உள்ளது. அதனால் ஊராரின் வெற்றுப் பேச்சுக்கெல்லாம் செவி சாய்க்க வேண்டாம் என்பதை, “ இந்த உலகமே உன்னை எதிர்த்தாலும் எல்லாச் சூழ்நிலையிலும் நீ தோத்திட்ட தோத்திட்டேனு ஓ முன்னாடி நின்னு அலறினாலும் நீ ஒத்துக்கிற வரைக்கும் எவனாலும் எங்கேயும் எப்போதும் உன்னை ஜெயிக்க முடியாது” என்ற வரி மெய்ப்பிக்கும்.




## பெண்கள் / மகளிர் / பூவையர் / மெல்லியர்

திரைப்படங்கள் பெண்களின் வருகையை மனத்தில் கொண்டே வடிவமைக்கப் படுகின்றன. இருப்பினும் திரைப்படத்தில் ஆண்களின் ஆதிக்கமே அதிகமாக இருக்கும். பெண்கள் காதல் , பாடல் , சென்டிமெண்ட் காட்சிகளுக்கு மட்டுமே என்ற நிலையே பெரும்பாலும் உள்ளது. ஆனால் விதிவிலக்காக சில படங்கள் பெண்களின் பிரச்சினையை மையமிட்டு வருவது உண்டு. பெண்களின் திறமையை உலகறியச் செய்ய வருவதும் உண்டு.

நாம் நம் நாட்டில் பெண்கல்வி உயர்ந்து விட்டதாக மார்தட்டிக் கொண்டாலும் பணியிடங்களில் பெண்கள் ஆண்களை எதிர்கொள்வது சிரமமாகவே உள்ளது. அது மாவட்டத்தையே நிர்வகிக்கும் ஆட்சியராக இருந்தாலும் சரி என்பதை உணர்த்துவதாக, நயன்தாரா நடித்த ‘**அறம்**’ என்ற திரைப்படம் அமைந்துள்ளது. பெண்ணின் ஆழ்ந்த சிந்தனை, தொலைநோக்குப் பார்வை, சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்தல் என்பன போன்றவற்றைத் திரைப்படத்தில் காணலாம்.

குடும்பத்தின் நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காகப் பணிக்குச் செல்லும் பெண்கள் குடும்பத்தில், அலுவலகத்தில் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் ‘**காற்றின் மொழி**’ மற்றும் ‘ **36 வயதினிலே**’ போன்ற படங்களில் ஜோதிகாவின் நடிப்பின் வழியே அறியலாம். இப்படத்தைப் பார்க்கும் எத்தனையோ பெண்கள் ஜோதிகா கதாப்பாத்திரத்தில் தம்மைப் பொருத்திப் பார்த்து இருப்பார்கள். பணிக்குச் செல்லும் பலர் இதைப் பார்த்து உத்வேகம் கொண்டு இருப்பார்கள். பணிக்குச் சென்று தனக்கான அங்கீகாரத்தைப் பெற போராடியவர்கள் மற்றும் தன்மானத்துடன் தனித்து

வாழ்பவர்கள் பெருமிதம் கொண்டு இருப்பார்கள். இவை பெண் இனத்தின் மதிப்பை உயர்த்திய படங்கள் என்றே கூறலாம். இத்தகைய படங்கள் வளர் இளம் பெண்களுக்கு ஒரு வழிகாட்டி என்றால் அது மிகையாகாது.

ரசிகன் மிக்க மகிழ்ச்சியில் இருந்தாலும் அதைக் கொண்டாடத் திரையரங்கிற்குச் செல்வான். துக்கத்தில் இருந்தாலும் அதிலிருந்து மீள்வதற்குத் திரைப்படத்தைக் காணச் செல்வான். திரைப்படத்திற்குப் பார்வையாளர் வருகையின் நோக்கம் பல்வேறுபட்டதாகும். இருப்பினும் அனைவரையும் மகிழ்விக்க வேண்டிய பொறுப்பு திரைப்படத்திற்கு இருக்கிறது.

இந்த உலகில் எப்பொழுதும்; எங்கும் இலவசமாகக் கிடைப்பது அறிவுரை மட்டுமே என்று பெரும்பாலான இளைஞர்கள் வெறுப்புடன் கூறுவர். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அறிவுரை தேவைப்படும் பொழுது காசு கொடுத்தாலும்; எவ்வளவு நேரம் செலவிட்டாலும் கிடைப்பதில்லை என்பதுதான் உண்மை. இத்தகைய சூழ்நிலையில் திரைப்படங்களே அருமருந்தாக; ஆதரவாக இருந்து காக்கின்ற எனலாம்.

**விளையாட்டுக்கள் வாயிலாக மதிப்புகளை வளர்த்தல்**



**'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்'** என்ற பழமொழிக்கேற்ப மாணவப் பருவத்தில் விளையாட்டும் அது சார்ந்த விழிப்புணர்வும் தேவையான ஒன்றாகும். கடிவாளம் கட்டிய குதிரையைப் போன்று வீடு – பள்ளி – டியூசன் சென்டர் – வீடு என்று வளரும் குழந்தைகள் எதார்த்த வாழ்க்கையின் அடித்தளத்தை இழந்து விடுவர். அடுக்குமாடிக் குடியிருப்பு, வீடியோ கேம், கம்ப்யூட்டர் கேம் என்று குறுகிய வட்டத்திற்குள்ளும் இயந்திரத்துடனும் வாழும் வாழ்க்கை முறையில் இன்றைய இளைய தலைமுறை இருக்கிறது.



கடந்த நூற்றாண்டின் இறுதியில் இருந்து பல கள விளையாட்டுக்கள் மறைந்து வருகின்றன. தொட்டுப்பிடித்து, தாயம், ராஜா ராணி, கள்ளன் போலீஸ், சில்லாங்கல்,

தட்டாங்கல், நொண்டி, செதுக்காங்கல், கிட்டிப்புள், கண்ணாமூச்சி, கிச்சிகிச்சித் தாம்பூலம், பச்சக்குதிரை, ஊஞ்சல் என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இவ்விளையாட்டுகள் குடும்பப் பொருளாதாரத்தை மதிப்பிடாது. வெளிக்காட்டாது. மேலும் எவ்வித செலவினமும் இன்றி மணிக்கணக்கில் நாள் கணக்கில் விளையாடலாம். அப்பொழுது திறமையும், நட்புமே பிரதானமாக இருந்தது. பால்ய பருவத்தைக் கடந்தவர்களின் மனத்தில் இளமைக்கால விளையாட்டுக்கள் பசுமையான நினைவுகளாய் இன்றும் நிழல் ஆடிக் கொண்டு இருக்கும்.

இன்று மிஷினுடன் குழந்தைகள் விளையாடுவதால் ஆடு களத்தில் ஏற்படும் இனிமையான அனுபவங்கள் கிடைப்பதில்லை. ஆடு களத்தில் ஏற்படும் காயத்தின் வலி(மை) தெரியாது. தொட்டு விளையாடும் போது ஏற்படும் இணக்கம் கிடைக்காது. நட்பில் உறுதி கிடையாது. வெற்றியின் மகிழ்ச்சி, தோல்வியின் அழுகை. நண்பர்களுடன் பரஸ்பரமாகப் பரிமாறிக் கொள்ளுதல் மறைந்து வருகிறது.

இளைஞர்களையும், குழந்தைகளையும் ஈர்த்த கிரிக்கெட் விளையாட்டு தற்பொழுது விலைமதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. முன்பு ஒரு விறகுக் குச்சி / பலகை / நாள்காட்டியின் அட்டை மற்றும் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்க்குப் ப்ளாஸ்டிக் பந்து கொண்டு மாதக் கணக்காக விளையாடினர். பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாமல் பொருளும் இல்லாமல் மகிழ்ச்சியை மட்டுமே கொண்டதாக விளையாட்டுக்கள் இருந்தன. மைதானத்தில் ஓடி, ஆடி விளையாடும் பொழுது மனமும் உடலும் புத்துணர்ச்சி பெறும். பொதுவாக விளையாட்டில் ஈடுபாடு கொண்டவர்களுக்குப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் நினைவு சக்தியும் வளமாக இருக்கும்.

**ராஜா ராணி / கள்ளன் போலீஸ்**

இந்த விளையாட்டுக்கள் குழுவாக, கூட்டமாக விளையாடுவதாகும்.



இதில் எவ்வளவு நபர்கள் வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளலாம். ராஜா ராணி அமர்ந்து விளையாடுவது. கள்ளன் போலீஸ் கள விளையாட்டு. இரண்டுமே எதிராளியின்

உடல் மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலைத் தரக்கூடியதாகும். எதிர் அணியினர் மற்றும் தன் அணியினரின் பலம் / பலஹீனத்தை அறிந்து கொள்ளலாம். அதற்கேற்ப நாம் எங்ஙனம் செயல்பட வேண்டும் என்பதை உணர்ந்து தம்மைத் தயார்படுத்திக் கொள்ளலாம். தம் சூழலைப் பிறர் ஊகித்து விடாவண்ணம் எதார்த்தமாக இருப்பது போன்று நடிக்கக் கற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக செலவு இல்லாத பொழுதுபோக்கு ஆகும். நமது நண்பர்கள் நெருக்கடியான சூழலில் எவ்வாறு நடந்து கொள்வர். எப்படி எதிர் கொள்வர் என்பதை அறிந்து கொள்ள முடியும். இந்த விளையாட்டுக்கள் வழியே சக நண்பர்களின் குணங்களை அறிந்து கொள்ள முடியும்

**பயிற்சி வினாக்கள்**

**1. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்க**

அ. பாடத் திட்டங்கள் வழியாக மதிப்பை வலியுறுத்தல் குறித்து எழுதுக

ஆ. பாடத்திட்டங்கள் சாராத துறை வழியாக வலியுறுத்துதலை விளக்குக

இ. விளையாட்டு வாயிலாக மதிப்பினை எவ்வாறு வலியுறுத்துவது என்பதனை எடுத்தெழுதுக

**2. கீழ்க்கண்ட வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக**

அ. இலக்கியங்கள் வாயிலாக மதிப்பினை வலியுறுத்துவது பற்றி விரிவாக விடையளிக்க

ஆ. கதைகள் வாயிலாக மதிப்பினை வலியுறுத்துவது பற்றி விரிவாக விடை தருக

இ. நாடகங்கள் வாயிலாக மதிப்பினை வலியுறுத்துவது பற்றி விரிவாக விடையெழுதுக